# பொருளியல் நோக்கு

May
மே 1986



## விவசாய கைத்தொழில்கள்


மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார குறிகாட்டிகள்

பண நிரம்பல்

1985





### பண நிரம்பல்

நாணயத்தையும் கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கியதாக (எம் 1) பொதுமக்களிடமிருந்த குறுகிய பண நிரம்பல் 1985ம் ஆண்டில் 223.9 கோடி ரூபாவால் அல்லது 13.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதே வேளை தனியார் துறையினர் வர்த்தக வங்கிகளில் வைத்திருந்த தவணை, சேமிப்பு வைப்புக்கள் 224.7 கோடி ரூபாவால் அல்லது 8.2 சதவீதத்தால், அதிகரித்துள்ளன. மேலே கூறப்பட்ட 'எம் 1' ஐயும், இரண்டாவது வகையான 'எம் 2' ஐயும் உள்ளடக்கிய விரிவான பண நிரம்பல் 1985 ம் ஆண்டில் 448.6 கோடி ரூபாவால் அல்லது 10.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

செலாவணி விகிதங்கள்

ஜன. 1985 – மார்ச் 1986




### செலாவணி வீதங்கள்

ஜனவரி 1985 இலிருந்து மார்ச் 1986 வரையில் இலங்கை ரூபா ஐந்து பிரதான வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக எவ்வாறு தளம்பியுள்ளது என்பதனை வரைபடம் காட்டுகிறது. சகல பிரதான நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபா இக்காலப்பிரிவில் பெறுமதியிறக்கம் கண்டிருக்கிறது என்பதனை கூட்டுமொத்த மாறுதல்கள் சுட்டிக்காட்டுகின்றன. பெப்ரவரி, ஜூலை, டிசம்பர் மாதங்களில் தவிர இப்பதினைந்து மாத காலப்பகுதியிலும் எஸ். டி. ஆர். உடனான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. இக்காலப்பிரிவிலான இலங்கை ரூபாவின் எஸ். டி. ஆர் உடனான பெறுமதியிறக்கம் 21.8 சதவீதமெனப் பதிவாகியுள்ளது. இக்கால கட்டத்தில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிரான பெறுமதியிறக்கம் 4.7 சதவீதமாகும். ஆனால், ஸ்டேர்லிங் பவுணைப் பொறுத்த வரையில் இலங்கை ரூபாவின் பெறுமதி ரூ. 12.65 ஆல் அல்லது 45.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. டொயிஷ் மார்க், யப்பானிய யென் ஆகியவற்றுக்கெதிரான பெறுமதியிறக்கம் முறையே 40,48 சதவீதங்களாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 865

# பொருளியல் நோக்கு

மலர் 12 இதழ் 2 மே 1986

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு
தலைமைக் காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## நிரல்கள்

| | | |
|---|---|---|
| வெளிநாட்டுச் செய்தித்தொகுப்பு | 2 | ஏழைகளுக்கான உணவு |
| பொருளாதாரம் | 19 | 1985 ல் இலங்கையின் பொருளாதாரம் - முற்று முழுதான பொருளாதார செயற்பாடு குறித்த ஒரு பரிசீலனை |

## விசேஷ அறிக்கை

| | | |
|---|---|---|
| | 3 | விவசாய கைத்தொழில்கள் |
| ஆரிய அபேசிங்கா | 5 | இலங்கையில் விவசாய கைத்தொழில் அபிவிருத்தி |
| ரஞ்சனு கர்டிஸ் கே. ஜீ. குணதிலகா | 16 | கைத்தொழில் தேவைகளுக்கான பழங்களும் மரக்கறிகளும் |

## சிறப்புக் கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| பி. சி. எச். ரணசிங்கா | 26 | போக்குவரத்தும் அபிவிருத்தியும் |
| ஆரிய அபேசிங்கா | 31 | பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் சமூக - பொருளாதார பிரச்சினைகள் |

## அடுத்த இதழில்

★ வெள்ளி விழாக்காணும் மக்கள் வங்கி குறித்த இரட்டைச் சிறப்பிதழ்

மக்கள் வங்கியின் தோற்றம், அதற்கான பின்னணி காரணிகள், அதன் நோக்கங்கள், 1961 இலிருந்து 1986 வரையில் நாட்டின் பொருளாதாரத்துக்கு அதன் பங்களிப்பு, அதன் செயற்பாடுகள் என்பன பற்றிய ஒரு விரிவான ஆராய்ச்சிப்பரிசிலனை

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைத் தன் நோக்காகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பவையுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு

# ஏழைகளுக்கான உணவு

உலகில் பெருமளவு உணவிருக்கிறது. ஆனால், வளர்முக நாடுகளில் வாழும் ஏறத்தாழ 70 கோடிப் பேருக்கு சுறுசுறுப்பாக உழைத்து வாழ்வதற்குப் போதியளவு உணவு கிடைப்பதில்லை. இவர்களில் ஏறக்குறைய அரைவாசிப்பேர் போசாக்குக் குறைந்தவர்களாவர்; அவர்கள் உயிர் வாழ்வதற்குப் போதியளவு உணவை மட்டுமே பெறுகின்றனர். 'வறுமையும் பட்டினியும்; வளர்முக நாடுகளில் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளும் தீர்வுகளும்' என்ற தலைப்பிலான உலக வங்கி ஆய்வு ஒன்றில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது உலகில் குடிசனத் தொகையில் (சீனாவைத்தவிர) மூன்றிலொரு பகுதி பசிப்பிணியினால் அல்லது 'உணவுப் பாதுகாப்பின்மை'யினால் வாடக் காரணம் வறுமை அல்லது கொள்வனவுச் சக்தியில்லாமை ஆகும் என்று அவ்வறிக்கை கூறுகிறது. உணவில் தன்னிறைவு கண்டுள்ள நாடுகளிற் கூட பசிப்பிணி நிலவுகிறது. நாடுகளதும் மக்களதும் வறுமை நீங்காதவரை பசிப்பிணியை ஒழிக்க முடியாது. இதுவே இவ்வறிக்கை கண்ட முடிவாகும்.

பொருளாதார வளர்ச்சியானது இறுதியில் வறிய மக்களுக்குப் போதிய வருமானத்தைத் தரும்; அதைக் கொண்டு அவர்கள் போதிய உணவைப் பெற்றுக் கொள்வர். எனவே அவ்வாறான வளர்ச்சி, பொருளியல் கொள்கையின் ஒரு குறிக்கோளாதல் வேண்டும். ஆனால், பொருளாதார வளர்ச்சி வாங்கும் சக்தியை மெல்ல மெல்லவே ஏற்படுத்தும் அன்றியும் எல்லோரையும் சென்றடையவும் மாட்டாது.

நீண்டகால நோக்கில், பொருளாதார வளர்ச்சியை வறுமை ஒழிப்புடன் இணைப்பதே போசாக்குக் குறைவையும், உணவுப் பாதுகாப்பின்மையையும் ஒழிப்பதற்குச் சிறந்த வழி என அறிக்கை கூறுகிறது. ஆனால், குறுகிய கால நோக்கில் வறியோரையும் போசாக்குக் குறைந்தவர்களையும் நோக்கமாகக் கொண்ட திட்டவட்டமான செலவு குறைந்த திட்டங்களும் அவசியமாகும்.

அவ்வறிக்கை இருவகை உணவுப் பாதுகாப்பின்மையைச் சுட்டிக்காட்டுகிறது; ஒன்று மாறும் நிலையிலுள்ளது; மற்றது நிரந்தரமானது. மாறும் நிலையிலுள்ளது யாதெனில், நிலையற்ற உணவு விலைகள், உணவுற்பத்தி, அல்லது வருவாய் என்பவற்றின் விளைவாக ஒரு குடும்பம் உணவைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போவதாகும். இதன் படுமோசமான நிலையை பஞ்சகாலங்களிற் காணலாம். நிரந்தர உணவுப் பாதுகாப்பின்மையானது, தொடர்ந்து போதிய உணவை வாங்க முடியாத அல்லது உற்பத்தி செய்துகொள்ள முடியாத குடும்பங்களைப் பாதிக்கிறது.


இப்பிரச்சினைக்கான தீர்வு, வரவு, செலவு, பொருளாதாரச் செலவு பற்றிய சமநிலையான அக்கறை, நிர்வாக, அரசியல் சாத்தியம், அவற்றின் எதிர்பார்க்கப்படும் பயன்கள் ''என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்'' என்று அறிக்கை கூறுகிறது. உதாரணமாக உப சகாராவில் உணவுற்பத்தியாளர்களுடன் சில நகர்ப்புற ஏழைகளும் காணியற்ற நாட்டுப்புறத்தவர்களும் உணவுப் பாதுகாப்பின்மையால் அல்லலுறுகின்றனர். அங்கு கொள்கைகள் உற்பத்தியாளருக்கான விலைகளை உயர்த்துவதையும் நகர்ப்புற ஏழைகளுக்கான மானியத் திட்டங்களையும் காணியற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதையும் மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

மேலும், அவ்வறிக்கை கூறுவதாவது; வெளிநாட்டுதவி பரம ஏழைகளுக்குப் பயனளிக்கக் கூடிய முதலீடுகளை வலியுறுத்த வேண்டும். இதில் உணவு வழங்கலைப் பெருக்கி, விலைகளைக் குறைக்கும் திட்டங்களும் அடங்கும். அது, உணவு இறக்குமதி கடுமையாகவும் ஆங்காங்கேயும அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தத் தக்க சக்தியையும், முக்கிய இடங்களில் போதிய உணவுக் கையிருப்புகளையும் கொண்டிருக்கவும் வேண்டும். வெளிநாட்டு ஆதரவு பெறவேண்டிய ஏனைய திட்டங்கள் வருமான மாற்றங்கள், போசாக்குக்கல்வி, சிறந்த குடிநீர், நோய்த்தடுப்பு, குடும்பக் கட்டுப்பாட்டுச் சேவைகள் என்பவற்றின் மூலம் நலிவுற்ற குடிசனங்களின் போசாக்கை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டவையாகும். பயிர்களைப் பன்முகப் படுத்தவும் போக்குவரத்து வசதிகளை விருத்தி செய்யவும், பொதுத் தொழில் வாய்ப்பு அளிக்கவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதும் நன்மை பயக்கும் என்றும் அறிக்கை கூறுகிறது.

உணவு உதவியானது, வறியவர்களின் ஊதியத்தை அதிகரிக்கவும் போசாக்கை விருத்தி செய்யவும் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. செய்த வேலைக்கு ஊதியமளித்து அபிவிருத்திக்கு உதவும் பொருட்டு, உலக உணவுத் திட்டமும் தொண்டர் நிறுவனங்களும் கூட்டாக நிதியளித்து மேற்கொள்ளும் முயற்சிகளை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. ஒரு நாட்டின் மொத்த அபிவிருத்தித் திட்டத்தில் இத்தகைய திட்டங்களை சிறந்த முறையில் ஒன்றிணைப்பதனால், அத்தகைய உதவிகளின் நீண்டகாலப் பயனில் விருத்தி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான விவசாயப் பயிர்களின் கீழிருக்கும் நிலத்தின் விகிதம்




* வாசனைத்திரவியங்கள், கொக்கோ, கோப்பி, மிளகாய், வெங்காயம் என்பவற்றை உள்ளடக்கியது.

** இலங்கையின் மொத்த நிலப்பாவனையில் 44 சதவிகிதத்தைக் கொண்டிருக்கும் காட்டுத்தொழில் இதில் சேர்க்கப்படவில்லை.

# விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்

இலங்கைப் பொருளாதாரத்தின் பாரம்பரிய அடித்தளமாக விவசாயமே இருந்து வந்துள்ளது. இத்துறை நாட்டின் தேசிய வருமானத்துக்கு கணிசமான அளவு பங்களிப்பினைச் செய்து வருவதுடன், பெருந்தொகையான கிராம மக்களுக்கு பிழைப்பூதியத்தையும் வழங்கி வருகிறது. இவ்வளவு சிறப்பான விவசாய இயற்கை மூலவளங்களைக் கொண்ட ஒரு நாடு விருத்தியுற்ற ஒரு விவசாய - கைத்தொழில் துறையை ஏன் இன்னும் பெறவில்லை என்ற கேள்வி தொடர்ந்து எழுப்பப்பட்டுவந்துள்ளது. பல்வேறு காரணங்களின் நிமித்தமும் இம் மூலவளங்கள் இன்னமும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பிரதான விவசாய ஏற்றுமதிப் பண்டங்கள் அவற்றின் மூல உருவத்திலேயே ஏற்றுமதி செய்யப்பட்டு வந்துள்ளன. இவ்வேற்றுமதிகளிலிருந்து கிடைத்த மிகைகள் நாட்டின் சமூக சேவைகளுக்கும், ஏற்றுமதி சாரா விவசாயத்துறைக்கும் பயன்படுத்தப்பட்டன. இதில் மிகச்சிறு பங்கே கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்டது. மேலும், பிரதம விவசாய பண்ட உற்பத்திக் கட்டத்திலிருந்து விவசாய பதனிடல் கட்டத்துக்கு முன்னேறிச் செல்வதற்கு எத்தகைய திடமான, ஒழுங்கமைந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய நிகழ்ச்சித்திட்டமொன்றை திட்டமிடலிலும், அமுல் செய்வதிலும் பல்வேறு மட்டங்களிலும் இருக்க வேண்டிய ஒருங்கிணைப்பு இல்லாதிருந்தமையே இத்துறை பின்தங்கியிருந்தமைக்கான பிரதான காரணமாகவிருந்தது. உதாரணமாக, விவசாய பதனிடல் முறையொன்றை சாத்தியமாக்குவதற்கு விவசாயக்கடன், சந்தைப்படுத்தல், வழங்கல் போன்ற காரணிகளும் நீர்ப்பாசனம், விஞ்ஞான ரீதியான பயிர்ச்செய்கை என்பனவும் இணைந்து தரமான போதிய அளவிலான உற்பத்தியை வழங்குதல் வேண்டும். ஆனால், இது இதுவரை சாத்தியப்படவில்லை.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்கான சாத்தியப்பாடு பல்லாண்டு காலமாக பரீட்சிக்கப்பட்டு வந்துள்ளது. இலங்கை கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனம் 1960 களில் வெளியான அதன் வருடாந்த அறிக்கைகளில் மரக்கறி எண்ணெய்கள், தெங்கு உற்பத்திகள், நெல் உற்பத்திகள், பனை உற்பத்திகள், பழ, மரக்கறி பதனிடல், கரும்பு உற்பத்திகள், கொக்கொ உற்பத்திகள், வாசனைத்திரவியங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் தாபனம் மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பரிசீலனைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை விஞ்ஞானிகளாலும், விவசாய உற்பத்திப் பொருட்களுடன் தொடர்புடைய ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த நிபுணர்களாலும் மேற்கொள்ளப்பட்ட பல பரிசோதனைகள் அதிக வாய்ப்புள்ள பல உற்பத்திகளை இனங் காட்டியுள்ளன. எனினும், துரதிர்ஷ்டவசமாக, இவற்றிற் பல ஆய்வுகூடக் கட்டத்திலிருந்து வர்த்தக உற்பத்திக் கட்டத்துக்குச் செல்லவில்லை.

இலங்கையின் பல அபிவிருத்தி திட்டங்களும் விவசாயம் சார்ந்த கைத்தொழில் துறையின் ஆற்றல் குறித்து கவனஞ் செலுத்தியுள்ளன. ஐந்தாண்டுத் திட்டம் (1972 - 1976) பின்வருமாறு கூறுகிறது. ''முன்னைய கைத்தொழில் நிகழ்ச்சித் திட்டங்களின் பிரதான குறைபாடுகளில் ஒன்று வேலைவாய்ப்பு விஷயத்திலும், கிராமத்துறையிலிருந்து கிட்டும் மூலப் பொருட்களை பயன்படுத்தும் விஷயத்திலும் இத்திட்டங்கள் கிராமத்துறையை புறக்கணித்ததாகும். விவசாயம் சார்ந்த கைத்தொழில்களையும், ஏனைய சிற்றளவு கைத்தொழில்களையும் உள்ளடக்கிய ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கிராமத் துறைக்குப் புத்துயிரூட்டுவது திட்ட உத்தியின் ஒரு பிரதான கூறுகும்.''

இலங்கையின் கால நிலை வித்தியாசங்களும், மழை வீழ்ச்சியும் பெருந்தொகையான வெப்ப வலய, இடை வெப்ப வலய பழவகைகளையும் மரக்கறிகளையும், வேறும் பயிர்களையும் இங்கு சிறப்பாக பயிரிடுவதற்கு மிகவும் உகந்தவை என்பதில் சந்தேகமில்லை. இம் மூலவளங்களின் அபிவிருத்தி கடந்த மூன்று தசாப்தங்களாக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இம் முயற்சி எதிர் நோக்கியிருந்த முக்கிய தடங்கல் உற்பத்திகளுக்கு கொள்வனவாளர் குறைவாக இருந்தமையும், உற்பத்தியாளர்களிடம் மிகை உற்பத்தி இருந்ததுமாகும். உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்ய உதவும் அதே வேளையில் நுகர்வோர் நியாயமான விலையில் இப் பொருட்களை பெறக் கூடியதாகச் செய்வதே இதுவரை காலமும் இத்துறை எதிர்நோக்கிய பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. எந்த சந்தைப்படுத்தும் திட்டமும் அது உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் பின் வரும் விதத்தில் நெருங்கிய முறையில் தொடர்புபட்டிருந்தால் மட்டுமே வெற்றி காண முடியும்: (1) பயிரிடுவோரின் இடத்தில் உற்பத்தியை சேகரித்தல், (2) உற்பத்தியை தரப்படுத்தல், பொதிப்படுத்தல், போக்குவரத்துச் செய்தல், (3) வினியோகத்துக்கான மொத்த, சில்லறை வசதிகளை வழங்குதல், (4) திட்டமிட்ட உற்பத்தியின் மூலமும், பதனிடல், பாதுகாத்தல் என்பன மூலமும் பருவகால தளம்பல்களை ஈடு செய்தல். உற்பத்தி, பதனிடல், சந்தைப்படுத்தல் என்பனவற்றுக்கிடையே ஒருங்கிணைப்பின்மையே இலங்கையில் விவசாயம் சார்ந்த கைத்தொழில் துறையின் வளர்ச்சி எதிர் நோக்கும் மிகப் பெரிய தடங்கல் என இனங் காணப்பட்டுள்ளது. இத்தடங்கல் காரணமாக இத்துறைக்கென உற்பத்தி செய்யும் விவசாயி நியாயமான பிரதிபலனை பெற முடியாதிருக்கிறது. மேலும், விதைகள், உரம், விஸ்தரிப்புச் சேவைகளின் குறைபாடுகளும் இக் கைத்தொழில் துறையின் வளர்ச்சியைப் பாதித்துள்ளன.

இலங்கையின் விவசாய பதனிடல் கைத்தொழிலில் பிரயோகிக்கப்படும் தொழில் நுட்பம் பின் தங்கியதாகவே இன்னமும் இருக்கிறது. மேலும், ஒரு சில தவிர்ந்த ஏனைய சகல உற்பத்திகளும் உள்ளூர் சந்தைகளுக்கென்றே உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வுற்பத்திப் பொருட்களால் ஏற்றுமதிச் சந்தையில் போட்டியிடவோ அல்லது இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திகளுக்கான பிரதியீட்டுப் பொருட்களாக அமையவோ முடியாதுள்ளது.

உள்ளூர் சந்தையின் வரையறுக்கப்பட்ட தன்மை இன்னொரு தடையாகும். தகுதி பெற்ற உணவு விஞ்ஞானிகள், தொழில் நுட்பவியலாளர்கள் குறைவாக இருப்பதும் இவ் வளர்ச்சியைப் பாதித்துள்ளது. இத்துறை குறித்த போதிய ஆராய்ச்சிப் பரிசீலனைகளும் இல்லை. அத்துடன் இத்துறையின் அபிவிருத்திக்கான அர்ப்பணிப்பின்மையும், உத்தியோக பூர்வமான ஒத்துழைப்பின்மையும் இத்துறையின் வளர்ச்சியை கட்டுப்படுத்திவரும் மற்றும் காரணிகளாக இருந்து வருகின்றன.

சமீப வருடங்களில் இத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கைக்கு நிறைய வாய்ப்புக்கள் கிட்டியுள்ளன. மத்திய கிழக்கிலும் ஏனைய வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களிலும் சந்தை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இவ் வாய்ப்புக்கள் பயிரிடுவோரையும், பதனிடுவோரையும், ஏற்றுமதியாளர்களையும் உற்சாகப்படுத்தியுள்ளன. சர்வதேச சந்தைகளில் போட்டியிடும் விதத்தில் தரச்சிறப்பிலும், கவர்ச்சிகரமான பொதிப்படுத்தல் முறைகளிலும் அவர்கள் இப்பொழுது கூடிய கவனஞ் செலுத்தி வருகின்றார்கள். இக் கைத்தொழில் துறை மீதான முதலீட்டு வாய்ப்புக்களும் பரந்தளவில் காணப்படுகின்றன. இலங்கையில் விவசாய - கைத்தொழில் துறையின் மூலவளங்கள், வளர்ச்சி வாய்ப்புக்கள், பிரச்சினைகள் என்பன பற்றிய ஒரு பரிசீலனை அடுத்து வரும் பக்கங்களில் இடம் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் விவசாய கைத்தொழில் அபிவிருத்தி

ஆரிய அபேசிங்க
(திட்டமிடல் பகுதி - மகாவலி அதிகாரசபை)

இலங்கையில் ''விவசாயத்தை நவீனமயமாக்குவதன்'' அவசியத்தை ஜனாதிபதி காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் வெள்ளி விழா ஞாபகார்த்தமாக அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் ஆற்றிய தமது உரையில் வலியுறுத்தினார். 1967ம் வருட காணி உபயோக ஆணைக்குழு அதன் அறிக்கையில் விவசாயக் கைத்தொழில்கள் பற்றி ஒரு குறிப்பிடத்தக்க கருத்தை வெளியிட்டது. ''காணி உபயோகம் கைத்தொழில் நோக்கத்துக்காகப் பயிர்களைப் பயன்படுத்தும் அம்சங்களை உள்ளடக்காத போதிலும், கமக்காரனின் விளைச்சலுக்கு இப்பொழுது கிடைப்பதைவிட அதிக இலாபமான விலையை உறுதிப்படுத்தக் கூடிய எந்த நடவடிக்கையும் - உதாரணமாக, இந்த மூலப் பொருள்களை உபயோகிக்கக் கூடிய துறையில் சிறு அளவிலான விவசாய - கைத்தொழில் முயற்சிகளை அமைப்பது - சிறந்த காணி உபயோகத்துக்கு உதவக் கூடியதெனக் கருதப்படவேண்டும். எனவே, இது ஊக்கமளிக்கப்பட வேண்டிய ஒரு நடவடிக்கையாகும். கிராமப் பகுதிகளிலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் பகுதி நேரமே வேலைக்கமர்த்தப்படும் இலங்கையின் நிலைமைகளுக்கு இக்கொள்கை விசேஷ பொருத்தமுடையதாகும். இக்கொள்கையை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்'' என்று ஆணைக்குழுவினர் கூறினர். 1958ம் வருட காணி ஆணைக்குழுவினர் அவர்களுடைய அறிக்கையில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் தொடர்பான காணி உபயோகம்பற்றி இடைப்போக்காகவே கருத்து வெளியிட்டனர்; காணிப் பராதீனக் கொள்கை எப்படியிருக்க வேண்டுமென அவர்கள் கருதினார்களோ அதைத்தவிர மற்றெந்த விஷயம் பற்றியும் அவர்கள் சிபார்சுகள் செய்யவில்லை. காணிபற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று (28-3-1985 திகதிய 34215 அரசாங்க அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகை) ''காணியையும் தொடர்பான இயற்கை வளங்களையும் பேணுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான உபாயங்களை''ப் பற்றி இப்பொழுது ஆராய்ந்து வருகிறது. இந்த உபாயங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் அபிவிருத்தியை உள்ளடக்கும் என்பது தெளிவு. சக்கர வட்டம் போல் மீண்டும் மீண்டும் ஏற்படும் விவசாய உபரிகள் சந்தைப்படுத்தும் பிரச்சினைகளைச் சிருஷ்டிக்கும் நிலைமை, விவசாய - பதப்படுத்தல் சம்பந்தமான சிந்தனையைச் சற்றுத் தூண்டியுள்ளது. நிதி - திட்டமிடல் அமைச்சரின் வரவு செலவுத் திட்ட யோசனைகள் (1983 - 1984ம் வருட வரவு செலவுத் திட்ட உரைகள்) விவசாய - கைத்தொழில்களில் முதலீடு செய்வதற்கான ஒரு சூழ்நிலையைச் சிருஷ்டிப்பதற்குப் பல ஊக்குவிப்புகளைத் தெளிவாக்கியுள்ளன. பிரமாண்டமான மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் தலைவேலைகள் (நிரற்கட்டட அமைப்புகள்) பூர்த்தியடைந்துள்ள நிலை - முக்கிய பகுதிகளில் நீர்ப்பாசன, குடியேற்றத் திட்டங்களின் நிறைவேற்றம்; அத்துடன் பல்வேறு மகாவலி அமைப்புகளிலும் வளவை கல்லோயா அமைப்புகளிலும் 103 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களிலும் இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்த குடியேற்றக்காரர்களுக்குப் பண்ணை வேலைகளுக்குப் புறம்பான வேலை வாய்ப்புகளைச் சிருஷ்டிப்பதன் அவசியம் உட்பட - மகாவலி போன்ற ஆற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசங்களில் முதலீடுகளைச் செய்யத் தொழில் முயற்சியாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. காணிகள், காணியபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சரும் மகாவலித் திட்டப் பகுதிகளுக்குள் முதலீடுகளை ஈர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார். விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சி, உணவு, கூட்டுறவு அமைச்சரும் உற்பத்திப்பகுதிகளில் பெறுமதியை அதிகரிப்பதற்காக விவசாய விளைச்சலைப் பதப்படுத்துவதவசியமெனத் தெரிவித்துள்ளார்.

## வரைவிலக்கணம்

விவசாயக் கைத்தொழில்கள் என்பது ஒரு விரிவான சொற்றொடர். இதில் ஒரு பக்கத்தில் விவசாயம் தொடர்பான கைத்தொழில்களும் அதாவது உள்ளிடுகைகள், வாகனப் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், உள்ளமைப்புத் தேவைகளும், மறுபக்கத்தில் விவசாய மூலப் பொருள்களைக் கைத்தொழில் முறையில் பதப்படுத்தலும் அடங்கியுள்ளன. விவசாயக் கைத்தொழில்கள் என்பது விவசாய மூலப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் மட்டுமல்ல என்று வரைவிலக்கணஞ் செய்யலாம்; அல்லது அச்சொற்றொடர் பீடைகொல்லிகள், உரங்கள், விவசாய எந்திரங்கள் போன்ற இத்தகைய துணைப் பொருள்களை வழங்குபவர்களை மட்டும் குறிப்பிடவில்லையென்று வரைவிலக்கணஞ் செய்யலாம். விவசாயக் கைத்தொழில் என்பது இதைவிட மிக விரிவான ஒரு கருதுகோளாகும். உற்பத்தி செய்தல், அறுவடை செய்தல், பதப்படுத்தல், மிக நேரடியான வழியில் விளைபொருள்களைச் சந்தைப்படுத்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்பான ஒரு சவிஸ்தாரமான முகாமையின் கீழ் சந்தைப்படுத்தலையும் பதப்படுத்தலையும் விவசாய உற்பத்தியையும் ஒன்றிணைத்தல் இதில் சம்பந்தப்பட்டுள்ளது. எனவே, விவசாயக் கைத்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.________



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் உற்பத்தி என்பது ஆரம்பத்திலிருந்தே மிகக் கவனமாகத் திட்டமிடப்பட்டு, சீராக்கப்படும் ஒரு நிகழ்வுப் போக்காக உள்ளது; இது ஒரு பொது நலனுக்குச் சேவைசெய்கிறது அதாவது ஆகக் கூடிய உற்பத்தியைப் பெற ஆகக் குறைந்த உள்ளீடுகைகளிலிருந்து சந்தைப்படுத்த வல்ல பொருள்களை உற்பத்தி செய்தல்.

இவ்வகையான உற்பத்திக்கு மிக விசேட தேர்ச்சித்திறன் தேவைப்படுகிறது; அல்லது பல்வேறு விதமான பொருள்களை உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. இதன் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால், சகல உப உற்பத்திப் பொருள்களும் ஒன்றிணைந்த தொழில் முயற்சிகளில் அல்லது தொழில் முயற்சிகள் சங்கத்திலுள்ள பிற பிரிவுகளால் பயன்படுத்தப்படுவதாகும். விவசாயக் கைத்தொழில் முறையிலுள்ள மேலும் ஓர் அனுகூலம் என்னவென்றால், பல்வேறு சந்தைகளுடன் அது ஸ்தாபிக்கும் நெருங்கிய உறவாகும்.

### வளர்முக நாடொன்றில் விவசாயக் கைத்தொழில்களுக்குத் திட்டமிடுதல்

ஒரு விவசாயக் கைத்தொழிலை ஸ்தாபிப்பதென்பது, விவசாய உற்பத்தியின் பகுப்பாய்வொன்றுடனோ அல்லது பொருத்தமான கைத்தொழில் கிளைகளில் குறைவாகப் பயன்படுத்தப்படும் உற்பத்தி ஆற்றல்களுடனோ ஆரம்பமாவதில்லை. ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரேயொரு முதலாவது நடவடிக்கை, உற்பத்தி செய்யக்கூடிய பல்வேறு பண்டங்களுக்குத் தற்போதிருந்துவரும் சந்தைகளையும் எதிர்பார்க்கத்தக்க சந்தைகளையும் சரியாக ஆய்ந்தறிவதாகும். அதன்பின், பயிராக்கவியல் நிலைமைகள், ஆற்றல்கள், காணிகளின் பரிமாணம், உற்பத்திமுறை, உற்பத்தி மட்டம் முதலியனவற்றை சோதித்து மதிப்பிடல் அவசியம். மூன்றாவதாக, ஆய்ந்தறியப்பட்ட இலக்குச் சந்தைகளின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான தொழிற்சாலைகளின் புறவரையை ஸ்தாபிக்க, தற்போதிருந்துவரும் ஸ்தாபனங்கள், வருங்காலத்தில் அமையக் கூடிய ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் கைத்தொழில் பரிசீலனையொன்றை நடத்த வேண்டும்.

இக்கட்டத்தையடுத்து ஆழமான விவசாய ஆலோசனைகள் நடத்தப்பட்டு, திட்டமிடப்பட்ட திட்டத்துக்குரிய வழங்குநர்களாக விவசாயக் கிளைகள் தெரிவு செய்யப்படவேண்டும். இந்தச் சந்தை வழிப்பட்ட அணுகுமுறையால் சில பொருள்கள் நிராகரிக்கப்படுமாதலால், உப பொருள்களையோ, காணியையோ அல்லது மனிதவளங்களையும் ஆற்றல்களையும் திருந்திய முறையில் பயன்படுத்தும் அடிப்படையில் புதிய உற்பத்திப் பொருள்கள் அறிமுகஞ் செய்யப்படும். தெரிவுசெய்யப்பட்ட திட்டத்தின் பொருத்தமான தன்மையை ஊர்ஜிதஞ்செய்ய, சந்தைகளைப்பற்றி ஓர் இரண்டாவது பகுப்பாய்வு அவசியமாகும். கிரமமான பரிசோதனைகள் மூலம், வரையறுத்த பிரயோகப் பகுதி பரந்த பிரயோகப் பகுதி ஆகிய இரண்டுக்கும் சிறந்ததொரு விவசாயக் கைத்தொழில் திட்டமொன்றை விருத்தி செய்துகொள்ளலாம்.

சந்தைப்படுத்தலுக்கும் கைத்தொழில் பதப்படுத்தலுக்கும் விவசாய உற்பத்திக்கும் அல்லது மூலப் பொருள்களின் இறக்குமதிக்குமிடையேயுள்ள இந்தப் பரஸ்பர சம்பந்தம் திட்டமிட்ட முறையியல் ஸ்தாபிக்கப்பட்டதுடன் முடிந்துவிடுவதில்லை. விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்குத் தீர்க்கப்பட வேண்டிய மற்றும் முக்கிய பிரச்சினைகள் கீழே சுருக்கமாகத் தரப்படுகின்றன.

### நீண்டகாலத் திட்டமிடல்

மேற்கண்டவற்றைச் சாதிக்க, விவசாயக் கைத்தொழில் அபிவிருத்திக்குக் கவனமாகத் திட்டமிடவேண்டும்.

1. துரிதமான பொருளாதாரப் பெறுபேறுகள்.
2. துரிதமான கிராமாபிவிருத்து.
3. மக்கள் குடியேறாத அபிவிருத்தி செய்யத்தக்க பகுதிகளில் பெருமளவில் மக்களைக் குடியேற்றுதல்.
4. மகாவலி, வளவை, கல்லோயா, 103 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் உட்பட பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், கிராம நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகிய இரண்டிலுமுள்ள மூலதனம் செறிந்த நீர்ப்பாசன வசதிகளைச் சிறந்த அளவுக்குப் பயன்படுத்துதல்.
5. இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்த குடியேற்றக்காரர்களிடையே வேலை வாய்ப்புகளை உண்டாக்குதல் உட்படச் சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதும், பாரிய/சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏதேனுமிருப்பின் அவற்றில் பண்ணை வேலைக்கும் புறம்பான வேலைகளை வழங்குவதும்.
6. அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகளை ஆகக் குறைந்த அளவுக்குக் குறைத்தல்.
7. சிறந்த ஏற்றுமதிப் பெறுபேறுகளைச் சாதித்தல்.

பின்வருவனவற்றைத் தவிர்க்க, கவனமாகத் திட்டமிடுவதும் அவசியமாகும்:

(1) நடைபெற்றுவரும் பொருளாதார அல்லது அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளுடனும் போட்டியிடுதல்.

(2) தற்போதிருந்துவரும் கைத்தொழில், விவசாயத்துறைகளுடன் அதிருப்தியடைதல்.

(3) பொருளாதாரத் தோல்விகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடல் படிப்படியாகச் செய்யலாம்; ஒரு சமயத்தில் ஒரு பிரதேசத்துக்கென வரையறுக்கலாம். மேலும், அது ஒவ்வொரு பிரதேசத்திலும் நிலவும் அரசியல் கட்டுக்கோப்பை அல்லது நிர்வாக அமைப்பை அனுசரித்திருக்க வேண்டும் - உதாரணமாக, இலங்கையில் மகாவலிப் பகுதிகளிலுள்ள ஒன்றிணைந்த கிராமாபிவிருத்தித் திட்டங்கள் முதலியன.

**விவசாயக் கைத்தொழில் எந்திரவியல் உத்திகள்**

ஒரு பக்கத்தில் சந்தைப்படுத்தலுக்கும் கைத்தொழில் பதப்படுத்தலுக்குமிடையேயும், மறுபக்கத்தில் பதப்படுத்தலுக்கும் விவசாய உற்பத்திக்குமிடையேயும் காலம், தூரம், பொருளாதார நலன்கள், முகாமைத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் நிலவும் மிகநெருங்கிய உறவுகள் விவசாயக் கைத்தொழில்களின் சிறப்பியல்பாகும் இத்தகைய உறவுகள் ஒன்றிணைந்த நிகழ்வுப் போக்கில் மிகவும் குறிப்பிடத்தக்க அனுகூலமாக அமைகின்றன. எனினும், ஆகக் கூடிய நன்மையைப் பெற, பொருத்தமான உத்திகளும் எந்திரவியலும் பிரயோகிக்கப்படவேண்டும்.

பூரணமாக ஒன்றிணைக்கப்பட்ட கரும்புத் தொழில் முயற்சியொன்றில், அளவிலும் தரத்திலும் இழப்புகளை ஆகக் குறைந்த அளவுக்குக் குறைக்க, விவசாய உற்பத்திக்கும் அறுவடை செய்தலுக்கும் பதப்படுத்தலுக்கும் காலம் குறித்து, ஒருமுகப்படுத்தலாம் என்பது தகராறுக்கிடமில்லாத ஓர் உண்மை. ஆதலால், திறமையாக ஒன்றிணைக்கப்பட்ட விவசாயக் கைத்தொழிலொன்றில், சில குறிப்பிட்ட பயிர்களைக் குறுகிய காலத்தில் அறுவடைசெய்து, பதப்படுத்தல் நிலையத்துக்கு மாற்றவேண்டும். மேலும், பூரணமாக ஒன்றிணைக்கப்பட்ட விவசாயக் கைத்தொழிலொன்றில், சகல செயற்பாட்டுக் கட்டங்களிலும் தொழிலாளர் நடந்துகொள்ளும் விதம் உற்றுக் கவனிக்கப்படுகிறது. குறுகிய காலத்தில் ஆகக்கூடிய நன்மைகளைப் பெறுவதே இதன் நோக்கம். எனவே, விவசாயக் கைத்தொழிலின் விநியோக, பதப்படுத்தல், உற்பத்தித் துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பொருத்தமான உத்திகள், எந்திரவியல் அணுகுமுறை பற்றிக் காலந்துரையாடுவதற்கு விசேஷ முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

**முகாமை**

விவசாயக் கைத்தொழில் உற்பத்திக்கே உரித்தான எண்ணற்ற முகாமைப் பிரச்சினைகள் உள்ளன. ஒவ்வொரு செயற்பாட்டின் செம்மையான விலைக் கட்டுக் கோப்புகளுக்கும் உற்பத்தி, பதப்படுத்தல், சந்தைப்படுத்தல் துறைகளில் ஒவ்வொரு முகாமைப் பிரிவுக்கும் விசேஷ கணக்கீட்டு முறைகள் தேவைப்படுகின்றன. இத்தகைய முறைகள் ஒன்றிணைக்கப்பட்ட நிகழ்வுப் போக்கில் பல்வேறு பங்குபற்றுநர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து, அவர்களுடைய பங்களிப்பின் பயனுறுதிக்கு உதவ வேண்டும்.

பெரும்பாலான விஷயங்களில், இலாபங்களை நீண்ட நிகழ்வுப் போக்கின் முடிவிலேயே காணக் கூடியதாயிருக்கிறது; அதாவது, சந்தைகளிலேயே. எனவே, இலாப மறுபகிர்வு முறைகள் மிக முக்கியமாகும். பிற முகாமைப் பிரச்சினைகள் பின்வருமாறு:

(அ) விவசாயக் கைத்தொழில் முயற்சிகளில் பொதுவான சேவைகளை ஸ்தாபித்தல்.

(ஆ) பதப்படுத்தல் அணிமுழுவதிலும் தரக்கட்டுப்பாட்டின் நிலை.

(இ) பங்குபற்றுநர்களின் வினைத்திறன்களைத் தரமுயர்த்தல்.

(ஈ) தனிப்பட்ட கமக்காரர்களும் விவசாயக் கைத்தொழிலுக்கு அவர்கள் அளிக்கும் ஒத்துழைப்பும்.

(உ) எல்லாவிடத்தும் சோதனை இடாப்புகளும் கால அட்டவணைகளும் அமைத்தல்.

(ஊ) சமச்சீராகவும் சவிஸ்தாரமாகவும் முதலீடு செய்யும் திட்டங்களுக்குத் திட்டமிடல்.

(எ) விவசாயக் கைத்தொழில் முயற்சிகளில் கம்பியூட்டர் மயமாக்கிய முகாமை முறைகளைப் புகுத்தல்.

**விவசாயக் கைத்தொழிலும் கிராமாபிவிருத்தியும்**

விவசாயக் கைத்தொழில், கைத்தொழில் விவசாய உதவி தேவைப்படும் பிற்போக்கு நிலையிலுள்ள பிரதேசங்களின் அபிவிருத்தி மீது பெரும் செல்வாக்கைப் பிரயோகிக்கின்றது. கிராமாபிவிருத்தி மீது தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றிணைந்த விவசாயக் கைத்தொழில் முயற்சிகளின் சில அம்சங்கள் வருமாறு:

(அ) பிரதேச பொருளாதாரத் தரங்களை உயர்த்துதல்.

(ஆ) தொழிலாளர் செறிவு.

(இ) எதிர்பார்க்கப்படும் முதலீடுகளை வங்கியில் போடக் கூடிய தன்மை.

(ஈ) இத்தகைய திட்டங்கள் கைகூடத் தேவைப்படும் காலம்.

(உ) முதலீட்டுக்கு முன்பும் உற்பத்திக்கும் ஆகும் செலவுகள்.

(ஊ) உள்ளமைப்புத் தேவைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயக் கைத்தொழிலும் கூட்டுறவு முறையும்

உற்பத்தியைச் சீரான அடிப்படையில் அமைக்கும் நோக்கத்துடன் கமக்காரர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அவற்றின் அங்கத்தவர்களுக்குக் குறைந்த விலைகளில் உள்ளிடுகைகளை வழங்குவதும் தற்போதுள்ள விநியோக, சந்தைப்படுத்தல் முறைகளைச் சீர்திருத்தியமைப்பதும் அவசியமாகும். இந்த ஜீவாதாரமான தேவை ஆராயப்படவேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தைப் பெரிய சங்கங்களாகவும் கூட்டுறவு ஸ்தாபனங்களாகவும் புனரமைப்புச் செய்வதன் அவசியமும் சாத்தியக்கூறுகளும் கவனமாக ஆராயப்பட வேண்டும். இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் முறையே கூட்டுறவு மொத்த விற்பனை நிலயத்தையும், இலங்கை கூட்டுறவு சந்தைப் படுத்தல் சம்மேளனத்தையும் (மார்க்பெட்) ஆகியவற்றை உபயோகித்து, தங்களுடைய சொந்தச் சுதந்திர கைத்தொழில் முயற்சிகளை ஸ்தாபித்துக் கொள்ளலாம்.

இந்தப் படிப்படியான ஒன்றிணைப்பை, வேறெந்த வகையான ஒன்றிணைத்த விவசாயத்தையும்விட கூட்டுறவு முறை அதிகம் விரும்பத்தக்கதாயுள்ள பகுதிகளில் தனியொரு செயற்பாட்டின் மூலம் நிறைவேற்றவும் நிச்சயமாகத் திட்டமிடலாம்.

விவசாயக் கைத்தொழிலோ அல்லது தனிப்பட்ட கமக்காரர்களைக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்களோ காணிகளுக்குச் சொந்தக்காரர்களாயிருப்பதற்கு ஒரு மாற்றாக, கூட்டுறவு அடிப்படையில் இக் கைத்தொழிலை அமைக்கத் திட்டமிடுவதில் விசேஷ அம்சங்களும் அனுகூலங்களும் உள்ளன. ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்காக இந்த அம்சங்களும் அனுகூலங்களும் பகுப்பாய்வு செய்வதற்குரியன.

ஒன்றிணைக்கப்பட்ட விவசாயக் கைத்தொழிலொன்றின் தொழிநுட்ப நிகழ்வுப் போக்கில் மிகக் குறிப்பான கட்டுக்கோப்பொன்று உள்ளது. இது சாதாரணமாகக் கீழ்க்கண்ட ஐந்து மட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது:


இந்த வரிப்படங்களின் கணிப்பீட்டிலிருந்து எழும் பிரச்சினைகள் பின்வருமாறு:

(அ) இது போன்ற ஒன்றிணைத்த கட்டுக்கோப்பொன்றைப் படிப்படியாக அபிவிருத்தி செய்வது சாத்தியமா?

(ஆ) எந்த மட்டத்தில் ஒருவர் ஆரம்பிக்கவேண்டும்? 1 வது மட்டத்திலா அல்லது 5 வது மட்டத்திலா? என்ன நிலைமைகளின் கீழ் 5 வது மட்டத்தில் ஆரம்பிப்பது மிக விரும்பத்தக்கது?

(இ) வெவ்வேறு மட்டங்கள் எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடையன?

தொடர் ஆய்வு மட்டத்தின் கோணத்திலிருந்து நோக்குமிடத்து, 1 வது மட்டமும் 2 வது மட்டமும் ஒன்றாக அமைக்கப்பட






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பதில் எத்தகைய சந்தேகமுமில்லை. 3 வது மட்டத்தில்விட 4 வது மட்டத்தில் முதலீடு செய்வதற்கு மூலதனப் பாய்வை மிகச் சுலபமாகப் பெற முடியுமென்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

(ஈ) எந்த மட்டத்தில் மத்திய திட்டமிடலும் முகாமையும் புகுத்தப்படவேண்டும்.

விவசாயக் கைத்தொழில் முறை ஒரு முழுக் குடியேற்றத் திட்டத்தை மேற்கொள்ளவும், தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கவும், தேசிய சந்தைப்படுத்தல் நிலையங்களை ஒன்றோடொன்று தொடர்புள்ளதாக அமைக்கவும் அல்லது ஒரு முக்கியமான வழங்குநராகவும் ஏற்றுமதியாளராகவும் வெளிநாட்டுச் சந்தைகளில் போட்டியிடவும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் போதிய அளவுக்குப் பெரிதாயில்லை. மேலும் விவசாயக் கைத்தொழில் முயற்சிகளை வெவ்வேறு சமூகக் கட்டுச் கோப்புகளுடனும் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த உற்பத்தித் திட்டங்களோடும் ஒன்றிணைப்பதால் பல பிரச்சினைகள் எழுகின்றன.

**இலங்கையில் விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தியிலிருந்து பெறக்கூடிய நன்மைகள்**

இயற்கை இலங்கைக்கு வழங்கியுள்ள அபரிமிதமான காணி - நீர்வளங்கள், இலக்குச் சந்தைகள் தொடர்பாக அது கேந்திர முக்கியத்துவமுடைய இடத்தில் அமைந்துள்ளமை, ஒப்பியல் ரீதியாக மலிவான சம்பள விகிதங்களில் பயிற்சி பெற்றோர் கிடைப்பது, மகாவலித் திட்ட அமைப்புகளிலிருந்து எரிசக்தி வளங்கள் உட்பட உள்ளமைப்பு கிடைப்பது; ஓர் அபிவிருத்தி மையமாகக் குறிக்கப்பட்டுள்ள திருகோணமலைப் பிரதேசத்திலிருக்கும் புதிய அபிவிருத்திச் சாத்தியக் கூறுகள் ஆகியன விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தியை ஒரு முக்கியமான அபிவிருத்தித் துறையாக்குகின்றனவென்பது வெளிப்படை. அரசாங்கக் கொள்கைகளின் காரணமாக, நாட்டில் முதலீடு செய்வதற்கான சூழ்நிலையும் முதலீடு செய்வதற்குப் போதிய வாய்ப்புகளும் உள்ளன. விவசாயமே நாட்டுப் பொருளாதாரத்தின் மிக முக்கியமான துறையாக விளங்குகிறது; மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பெரும் பங்களிப்புச் செய்கின்றது; மொத்தத் தேசிய வேலை வாய்ப்புகளில் பெரும் பங்குக்கும், ஏற்றுமதி வருமானத்தில் கணிசமான பகுதிக்கும் பொறுப்பாயிருக்கின்றது. பரும்படியான பொருள் உற்பத்தித் துறையில் கூட விவசாயப் பதப்படுத்தல் தேசியப்பொருளுற்பத்தியில் ஒரு முக்கிய பங்கைப் பிரதிபலிக்கின்றது; ஏனென்றால், உணவும் பானங்களும் புகையிலையும் உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்தியில் ஓர் உயர்ந்த விகிதமாக அமைகின்றன.

இலங்கையில் விவசாயக் கைத்தொழில்களை ஸ்தாபிப்பதன் மூலம் அடையக் கூடிய நன்மைகளைக் கீழ்க்கண்டவறு பட்டியலிடலாம்:

(அ) விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை ஒரு சில ஆண்டுகளில் மட்டுமே ஸ்தாபிக்க முடியும்.

(ஆ) விவசாயக் கைத்தொழில் திட்டங்களுக்கு வங்கிகளில் பணம் பெறலாம்.

(இ) விவசாயக் கைத்தொழில் திட்டங்களை, அபிவிருத்தியின் வெவ்வேறு கட்டங்களிலுள்ள பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தலாம்.

(ஈ) விவசாயக் கைத்தொழில் திட்டங்கள் வேறெந்தக் கிராமாபிவிருத்தித் திட்டத்தையும் விட நெடுங்கால வேலைவாய்ப்பு மட்டங்களை அதிக அளவுக்கு உயர்த்தக் கூடியன.

(உ) விவசாயக் கைத்தொழில் திட்டங்களுக்கு நிரந்தரமாக மான்யம் வழங்க வேண்டியதில்லை. ஏனென்றால் அவற்றைச் சுயதேவைப் பூர்த்தி நிலைக்குக் கொண்டுவர முடியும்; அத்துடன் அவை உள்நாட்டுச் சந்தைகளையும் வெளிநாட்டுச் சந்தைகளையும் சிருஷ்டிப்பதற்கு உகந்தவையாகும்.

(ஊ) விவசாயக் கைத்தொழில் திட்டங்கள் மிதமிஞ்சிய வழங்கல் பருவங்களில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியன; அத்துடன், உற்பத்திப் பகுதிகளில் பெறுமதி கூட்டிய பதப்படுத்தலுக்காகச் சகல உபரிகளையும் உட்கிரகித்துக் கொள்ளக்கூடியவையாகும்.

(எ) விவசாயக் கைத்தொழில் திட்டங்கள் முன்னோக்கிய, பின்னோக்கிய இணைப்புகளைக் கொண்டவை; குளிர் சேமிப்பு, பொதிப்படுத்தல், சந்தைப்படுத்தல் முதலிய துணைக் கைத்தொழில்களுக்குச் சந்தைகளையும் உண்டாக்குகின்றன.

(ஏ) விவசாய மூலப்பொருள்களின் கைத்தொழில் பதப்படுத்தல் அதிகரிப்பதால், வேலைவாய்ப்புகள் உண்டாகின்றன. ஏனென்றால், அவை நிலையாகவே ஊழியச் செறிவு மிக்கவை; அதிகரித்த அளவில் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுகின்றன; அத்துடன், நுகர் பொருள்கள் சம்பந்தமான உள்நாட்டுத் தேவைகளையும் பூர்த்திசெய்யக் கூடியவை.

(ஒ) விவசாயக்கைத்தொழில்கள் பெறுமதியைக் கூட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வேளையில் நேரத்தையும் முயற்சியையும் உழைப்பையும் சக்தியையும் மிச்சப்படுத்தக்கூடிய சௌகரியமான உணவுகளையும் உற்பத்தி செய்கின்ற ; மற்றும் உற்பத்தி முயற்சிகள் மீது செலவிட மக்களுக்கு ஓய்வு நேரத்தையும் சிருஷ்டிக்கின்றனவென்பது வெளிப்படை. இவ்விதமாக, விவசாயக் கைத்தொழில்கள் வாழ்க்கையின் தரச்சிறப்பை உயர்த்தும் அதேவேளையில் மிகப் புதுமையான நுகர்வோர் உருசியுணர்வையும் விருப்பத்தையும் உண்டாக்குகின்றன.

**இலங்கையில் தற்போது இருந்துவரும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்**

மூன்று பிரதம பண்டங்கள் விவசாயக் கைத்தொழில்களின் தோற்றச் சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டுகின்றன. தேயிலைக் கைத்தொழில் ஒரு விவசாயக் கைத்தொழிலுக்கு நல்ல உதாரணமாகும். அது உற்பத்தியிலிருந்து சந்தைப்படுத்தல் வரை ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. தேயிலைக் கைத்தொழில் இலக்குச் சந்தைகளுக்காகத் தொகையான தேயிலையை உற்பத்தி செய்வதில் முழுக் கவனஞ் செலுத்திவரும் அதே சமயம் மற்றும் நாடுகளில் செய்யப்பட்டுள்ள புதுமையான மாறுதல்களுக்கு ஈடான முயற்சிகளை எடுக்கவில்லை. எனவே பிற போட்டிகளில் அதன் நிலையை இழந்துவிட்டதென்பது தெளிவு. தேயிலையின் உற்பத்திக் கட்டுக்கோப்புக்குத் தற்போது ஆகும் செலவை ஆராய்ந்து பார்க்குமிடத்து, உற்பத்திச் செலவில் 40 சதவிகிதம் எரிபொருளுக்கும், 15 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதம்வரை தேயிலைப் பெட்டிகளுக்கும் பொதிப்படுத்தலுக்கும், 30 சதவிகிதம் வெளிக்கள நடவடிக்கைகளுக்கும் செலவாகின்றன. எனவே, புதுமையைச் செய்யவும், செலவுகளை ஆகக் குறைந்த அளவுக்குக் குறைப்பதற்கான முயற்சிகளைக் கைக்கொள்ளவும் அவசியம் தோன்றியுள்ளது. மற்றும் அம்சங்களிலும் கவனஞ் செலுத்தப்பட வேண்டும். மாறிவரும் சந்தை கோரக் கூடிய ஓர் உற்பத்திப் பொருளை வெளிக் கொணர வேண்டுமென்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. தேயிலைப் பைகள் உள்ளன. எனினும், கபீன் நீக்கிய தேயிலை, உடன் தேயிலை, சுவையூட்டிய தேயிலை, மூலிகைத் தேயிலை ஆகியவற்றிற்குச் சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டேயிருக்கும் சந்தைகளில் நல்ல வாய்ப்புண்டு. ஆதலால், இவற்றை விருத்தி செய்வதற்கான முயற்சிகள் கைக்கொள்ளப்பட வேண்டும். தேயிலைக் கைத்தொழில் சந்தைகளின் அரங்கத்திலிருந்து செயற்படவில்லையானால், போட்டியில் பிரவேசிக்க இலங்கைக்குக் காலம் மிகப் பிந்திவிடலாம்.

இறப்பர்க் கைத்தொழிலும் விவசாயக் கைத்தொழிலுக்கு ஓர் உதாரணமாகும். இது ஓரளவுக்கே கைத்தொழில் மயமாக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், மொத்த இறப்பர் உற்பத்தியில் 12 சதவிகிதம் மட்டுமே கைத்தொழிலுக்கு ஏற்ற வகையில் உள்நாட்டில் பதனிடப்படுகிறது. 88 சதவிகிதம், ஓரளவு பதப்படுத்திய உருவத்தில் ஓர் பிரதம பண்டமாகவே ஏற்றுமதி செய்யப்பட்டுவருகிறது. இறப்பர் விதைகள் உள்நாட்டில் கட்டட அமைப்பில் ஒரு மூலமாக உபயோகிக்கப்படுகின்றன. வர்ணப்பூச்சு (தீந்தை)க் கைத்தொழிலில் இறப்பர் விதை எண்ணெய், அல்கிட் குங்கிலியங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யவும் உபயோகிக்கப்படுகின்றன. இதே போல, தளவாடக் கைத்தொழிலில் இறப்பர் மரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. இயற்கை இறப்பரை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்யும் நம்நாடு 30 கோடி ரூபா பெறுமதியான இறப்பர்ப் பொருள்களை இறக்குமதி செய்து வருகிறது.

தெங்குக் கைத்தொழிலில் தொழில் நுட்ப முறைகள் குறைந்த அளவில் உபயோகிக்கப்பட்டாலுங்கூட, அது ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கைத்தொழில் மயமாக்கப்பட்டுள்ளதாக விளங்குகிறது. தேங்காய்த் துருவல் கைத்தொழில் (69 ஆலைகள்) உபயோகிக்கும் தொழில்நுட்ப முறைகள் கிராமங்களில் உருவாக்கப்பட்டவையாதலின், அவை நவீன மயமாக்கப்படுவதும், எந்திரப் பிரிவுகள் சீர்திருத்தியமைக்கப்படுவதும் அவசியமாகும். தேங்காயெண்ணெய்க் கைத்தொழிலும் (64 ஆலைகள்) குறைந்த அளவிலேயே தொழில் நுட்ப உத்திகளை உபயோகிக்கின்றது. தென்னமரங்கள், தேங்காய்ச் சிரட்டை, மரக்கரி, ஏவப்பட்ட காபன், விளுக்கிரி, தேங்காய்ப்பாலாடை, சவர்க்காரம், மார்ஜரீன் போன்ற பொருள்களில் ஒரு சில புதுமைகள் செய்யப்பட்டுள்ளனவென்றாலும், இதில் மற்றும் பல புதுமைகளைச் செய்யக் கூடிய வாய்ப்புகள் உண்டு. தெங்குக் கைத்தொழிலைக் கப்பலேற்றுமதியாளர், தரகர்கள் ஆகியோரின் குழுக்கள் குறிப்பிடும் திசைவழிப் படுத்தாமல், அதைப் பகுத்தறிவுக்கொப்ப முறைப்படி அபிவிருத்தி செய்ய வேண்டியதவசியமாகும்.

நாட்டில் இருந்துவரும் இன்னொரு முக்கிய விவசாயக் கைத்தொழில், ஆலைகளில் நெல்லையும் அரிசியையும் அரைப்பதாகும். இலங்கையிலுள்ள கிராமங்களில் கிரமமான வாடிக்கையாளர்களைக் கொண்ட 4,370 ஆலைகள் அல்லது உமிநீக்கும் எந்திரங்கள் உள்ளன. நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமாக 28 ஆலைகள் இருக்கின்றன. நாட்டில் 920 வர்த்தக ஆலைகள் உள்ளன. ஆலைகளைப் பாரம்பரிய வகை, ஓரளவு நவீனவகை, நவீனவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வகைப்படுத்தலாம். பாரம்பரிய வகை ஆலைகளில் அரிசியை அரைக்க ஆகக் குறைந்த அளவு எந்திரங்களே உள்ளன. அதாவது உமியை நீக்குதல், அரிசியைத் திட்டுதல் ஆகிய இரு வேலைகளுக்கும் உருக்கினுலாய ஓர் எந்திரமோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எந்திரங்களோ இருக்கின்றன. நாட்டிலுள்ள அரிசி ஆலைகளில் சுமார் 80 சதவிகிதம் பாரம்பரிய வகையின. அவற்றில் பல பிரதிகூலங்கள் இருக்கின்றன. விரிவான ரீதியில் கூறுமிடத்து, அவை பின்வருமாறு:

(அ) உமியை நீக்குவதற்கும் அரிசியைத் தீட்டுவதற்கும் அதே எந்திரம் உபயோகிக்கப்படுவதால், மணிகள் மீது உயர் அழுத்தம் ஏற்படுவதன் விளைவாக, மணிகள் உடைந்து விடுகின்றன; அத்துடன் அரிசியை அரைக்கும்போது அதிக நஷ்டமும் உண்டாகின்றது.

(ஆ) இந்த ஆலைகள் புழுங்கலரிசியை மட்டுமே அரைக்க முடியும்.

(இ) இந்த ஆலைகள் அரைத்துத் தரும் அரிசி நிறம்மாறியும் தவிடு சரியாக நீக்கப்படாமலுமிருக்கிறது.

(ஈ) இந்த ஆலைகளில் அரிசி எந்தக் கட்டத்திலும் துப்புரவு செய்யப்படுவதில்லையாதலால், அரைத்த அரிசியில் அசுத்தங்கள் அதிக அளவிலிருக்கின்றன.

(உ) அரிசியை அரைக்கும்போது பெறப்படும் உபபொருள்கள் குறிப்பாகத் தவிடு மோசமான நிலையிலுள்ளது.

(ஊ) உருக்கினுலாய உமிநீக்கு எந்திரத்தைச் செயற்படுத்த அதிக சக்தி - 15 முதல் 20 வரையான குதிரைச்சக்தி - தேவைப்படுகிறது. எனினும், இந்த எந்திரங்களே விரும்பி வாங்கப்படுகின்றன. ஏனென்றால், ஸ்தாபனத்தின் முதலீட்டுச் செலவுகள் குறைவாயுள்ளன.

ஓரளவு நவீன வகையினவான இரண்டாவது வகை ஆலைகளின் சிறப்பியல்புகள் வருமாறு.

(அ) இந்த ஆலையில் உமிநீக்கும் வேலையைச் சீர்திருத்தியமைக்கப்பட்ட ஒரு தனி எந்திரம் செய்கின்றது. இது இறப்பர் சுருள் ஷேல்லர் என அழைக்கப்படுகிறது. அரிசியைத் தீட்டும் வேலையை உருக்கினுலாய ஒருவறல்லரோ அல்லது இருவறல்லர்களோ செய்கின்றன.

(ஆ) அரைப்பதற்குமுன் நெல் துப்புரவாக்கும் எந்திரத்தினுல் சுத்தம் செய்யப்படுகிறது. இந்த எந்திரம் சல்லடையால் அரித்தும் வளியிழுப்பு மூலம் இழுத்தும் அசுத்தங்களைப் பிரித்தெடுத்து அகற்றிவிடுகிறது.

ஆதலால், இந்த ஆலைகளில் பரம்பரை வகை ஆலைகளைவிட கீழ்க்கண்ட அனுகூலங்கள் இருக்கின்றன:

(1) உமியை நீக்கும் வேலையையும் அரிசியைத் தீட்டும் வேலையையும் தனித்தனி எந்திரங்கள் செய்வதால், மணிகள் உடைவதும் அரைக்கும் போது ஏற்படும் நஷ்டங்களும் குறைந்துவிடுகின்றன.

(2) பரம்பரை ஆலைகளைவிட இவற்றில் உபபொருள் அசுத்தம் அடைவது - தவிட்டுடன் உமி கலந்திருப்பது - குறைவு.

(3) நெல் அரைப்பதற்கு முன் துப்புரவாக்கப்படுவதால், முடிவுப் பொருளில் அதாவது அரிசியில் அசுத்தங்களின் அளவு குறைவாகவே உள்ளது.

(4) இறப்பர் சுருள் ஷெல்லருக்கான சக்தித் தேவை 5 முதல் 7 வரையான குதிரைச் சக்தி. எனவே இந்த ஆலைக்கான சக்தித் தேவை பாரம்பரிய ஆலையைவிட ஏறக்குறைய 30 சதவிகிதம் குறைவு. ஆனுல், ஓரளவு நவீன ஆலைக்கு ஆகும் முதலீட்டுச் செலவும் செயற்பாட்டுச் செலவும் பாரம்பரிய ஆலைக்கு ஆவதைவிட அதிகமாகும்.

நவீன அரிசி ஆலை மூன்ருவது ஆலை வகையாகும். இதில் பல எந்திரங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒரு குறித்த வேலையைச் செய்கின்றது. அவ் வேலைகள் வருமாறு:

(1) அரைப்பதற்கு முன் சுத்திகரிப்பு.

(2) இறப்பர் சுருள் ஷெல்லர் நெல்லிலிருந்து உமியை நீக்குகிறது.

(3) பழுப்பு அரிசியிலிருந்து உமி நீங்கிய மணியைப் பிரித்தெடுக்கிறது ஒரு தனி எந்திரம்.

(4) பின்னர் பழுப்பு அரிசி பல தேய்க்கும் உபகரணங்களால் தீட்டப்படுகிறது.

(4) தீட்டிய அரிசி சல்லடையுள்ள வளியிழுப்புக் குடுவைக்குள் செலுத்தப்படும்போது, மணிகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் சகல அணுத்துகள்களும் பிரித்தெடுத்து வீசப்படுகின்றன.

நவீன அரிசி ஆலைகள் பொறிமுறையில் ஏற்றிகளால் செயற்படுத்தப்படுவதால், தொழிலாளர் உழைப்பு மிச்சப்படுகிறது. பாரம்பரிய ஆலையிலும் ஓரளவு நவீன ஆலையிலும் மணிகளைக் கையாளும் வேலை உடலுழைப்புத் தொழிலாளர்களாலேயே செய்யப்படுகிறது. நவீன ஆலையிலிருக்கும் இன்னேர் அனுகூலம், அரிசியைத் தீட்டும் வேலை பல தேய்க்கும் உப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரணங்களால் செய்யப்படுகிறது. இதனால் மணிகள் மீது மிகக் குறைந்த அழுத்தமே பிரயோகிக்கப்படுகிறது. ஆதலால், மணிகள் உடைவதும் அரிசியை அரைக்கும்போது ஏற்படும் நஷ்டங்களும் ஆகக் குறைந்த அளவுக்குக் குறைந்து விடுகின்றன. மேலும், உருக்கு வறல்லர்களில் போலன்றி, அரிசி தீட்டும் எந்திரங்களில் சூடேறுதல் குறைவு. ஆதலால், மணிகள் நிறம் மாறுவது குறைகிறது. அத்துடன், நவீன ஆலையில் மணிகள் சமச்சீருடன் தீட்டப்படுகின்றன.

எனவே, ஒரு நவீன ஆலையின் முதலீட்டுச் செலவு அதிகமாயிருந்த போதிலும், அரைப்பதிலிருந்து கிடைக்கும் உயர் வருவாய் இந்த முதலீட்டுச் செலவை ஈடுசெய்துவிடுகிறது. ஏனென்றால், இதில் தீட்டப்படும் அரிசியின் தரம் உயர்வாக இருப்பதுடன் இதிலிருந்து பெறப்படும் உப பொருள்களின் தரமும் உயர்வாயுள்ளது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மொத்த நெல்லில் சுமார் 70 சதவிகிதம் புழுங்கலரிசியாக்கும் செய்முறைக்கே உட்படுத்தப்படுகிறது. உண்மையில் புழுங்கலரிசி மணிகளை பச்சரிசி மணிகளை அதிக கடினமாக ஆக்குவதற்காகவே நெல்லைப் புழுங்கலரிசியாக்கும் முறை கையாளப்படுகிறது. எனவே, புழுங்கலரிசியில் எதிர்ப்புச் சக்தி இவ்விதம் கட்டியெழுப்பப்படுவதால், ஆலையில் அரைக்கப்படும்போது மணிகள் உடைவது ஆகக் குறைந்த அளவுக்குக் குறைந்துவிடுகிறது. புழுங்கலரிசியாக்கும் முறையில், நெல் ஊறவைக்கப்பட்டு, பின்னர் வேகவைக்கப்படுகிறது. இந்த வெப்பத்தில் மணிகளிலுள்ள மாப்பொருள் ஊன்பசை போலாகின்றன. அடுத்து, உலர்த்தப்படும்போது, மணிகளிலுள்ள ஈரப்பதன் குறைகிறது. இதனால் அரைப்பதற்கு ஏற்ற நிலையை மணிகள் அடைந்துவிடுகின்றன. புழுங்கலரிசியில் பச்சரிசியிலுள்ளதைவிட அதிக போஷாக்குச் சக்தி இருக்கிறதென்பது உலகறிந்த விஷயம்.

நெல்லை அரைப்பதில் தொழில்நுட்ப உத்திகளைப் புகுத்துவதற்கான துறைகள் வருமாறு:

(அ) பாரம்பரிய முறைப்படி நெல்லை அவிக்கும் முறை காலவிரயத்துக்கு ஏதுவாகிறது; நெல் சமச்சீராக அவிவதில்லை; மணிகள் நிறம் மாறிவிடுகின்றன. இம்முறையைச் சீர்திருத்தியமைக்க வேண்டும்.

(ஆ) முதலீட்டுச் செலவுகளையும் அதிக சக்திச் செலவையும் குறைப்பதன் மூலம் தற்போதிருந்துவரும் ஆலைகளை நவீனமாக்கவேண்டும்.

(இ) களஞ்சியத்திலிருந்து நீக்குதல் உட்பட அரிசியிலிருந்து அசுத்தங்களை முற்றாக அகற்றுவதற்காகத் துப்புரவாக்கும் உபகரணங்களைப் புகுத்துவது அவசியமாகும். களஞ்சியத்திலிருந்து நீக்கும் எந்திரமொன்று குறைந்த செலவில் உள்நாட்டில் உருவாக்கப்படுவதவசியம்.

(ஈ) நெல்லை அவிக்கும் முறையைச் சீர்திருத்தியமைப்பதற்காக உபயோகிக்கப்படும் குறைந்த செலவிலான கொதிகலன்கள் விருத்தி செய்யப்படவேண்டும்.

(உ) தற்போது உபயோகிக்கப்படும் பொறிமுறை உலர்த்திகள் அவித்த நெல்லை உலர்த்துவதற்கு மட்டுமே உகந்தவையாதலால், பயனுறுதி வாய்ந்த பொறிமுறை உலர்த்தியொன்று புகுத்தப்படுவதசியம்.

(ஊ) நெல்லிலிருந்து கிடைக்கும் உப பொருளான உமியை எரிபொருளாகப் பயனுறுதியுள்ள வகையில் உபயோகிப்பதற்காக, குறைவான சக்தியை உபயோகிக்கும் உமியால் எரியும் உலையொன்று புகுத்தப்படவேண்டும்.

(எ) நெல்வைக்கோல், நெல்உமி, நெல்தவிடு, நெல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய பொருள்களை விருத்தி செய்வதற்காகப் புதிய மாற்றங்களும் தொழில்நுட்ப உத்திகளும் புகுத்தப்படவேண்டும்.

சீனி

இலங்கையில் அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் இன்னொரு விவசாயக் கைத்தொழில் சீனிக் கைத்தொழிலாகும். தற்போது வருடாந்தம் ஏறக்குறைய 2,70,000 இலிருந்து 3,00,000 தொன் வரையான சீனி நுகரப்படுகிறது. உள்நாட்டில் 45,000 தொன் சீனி மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 2,25,000 தொன்னிலிருந்து 2,50,000 தொன் வரையான இடைவெளி உள்ளது. 1985 ம் ஆண்டில் கரும்புச் செய்கையின் கீழிருந்த ஏக்கர் பரப்பு வருமாறு:

| | |
|---|---|
| கந்தளாய் | — 6,000 ஏக்கர் |
| ஹிங்குரான | — 9,000 ஏக்கர் |
| செவனகல | — 5,000 ஏக்கர் |
| பெலவத்த | — 4,000 ஏக்கர் |
| தனியார்துறை | — 6,000 ஏக்கர் (கொஸ்லாந்தை, ஹல்தமுல்லை, மொனறாகலை, புத்தளப் பகுதிகள்) |

நாட்டில் மூன்று சீனி ஆலைகள் இருக்கின்றன. இரண்டு ஆலைகள் 1986 ம் ஆண்டு ஜனவரியிலும் 1986 ம் ஆண்டு மார்ச்சிலும் உற்பத்தியை ஆரம்பிக்கவிருக்கின்றன.

எனவே, உற்பத்தியில் எதிர்பார்க்கப்படும் இந்த அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆலைகளின் உற்பத்தித் திறனும் உற்பத்தியும் வருமாறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கந்தளாய் நாளொன்றுக்கு | 1,200 தொன் கரும்பு | சீனிஉற்பத்தி | | | 20,000 தொன் |
| ஹிங்குரான | " 2,000 | " | " | " | 30,000 தொன் |
| மொனருகலை | " 2,200 | " | " | " | 43,000 தொன் |
| பெலவத்த (மார்ச் 1986) | " 28,000 | " | " | " | 47,000 தொன் |
| செவனகல (ஜனவரி 1986) | " 1,200 | " | " | " | 27,000 தொன் |
| | | | | | 1,67,000 தொன் |

களுடன் கூட 1,03,000 தொன் பற்றுக்குறை இருந்து வருகிறது. சீனிக் கைத்தொழிலில் ஏறக்குறைய 25,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இரு முக்கியமான அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

(1) ஹிங்குரான தொழிற்சாலையில் உற்பத்தித் திறனில் 50 சதவிகிதம் மட்டுமே பயன் படுத்தப்படுகிறது. கரும்பு வழங்கல்களுடன் அது பூரணமாகப் பயன்படுத்தப்பட்டால், 40 சதவிகிதம் செலவு குறையும்; கிலோ ஒன்றின் உற்பத்திச் செலவு தற்போதைய செலவான 11 ரூபா 50 சதத்துடன் ஒப்பிடுகையில் 7 - 8 ரூபாவாகக் குறைந்துவிடும். சீனி கிலோ ஒன்றின் மொத்த விற்பனைவிலை 11 ரூபா 50 சதமாகவும் சில்லறைவிலை 13 ரூபா 25 சதமாக இருக்கும் நிலையில், கைத்தொழிலுக்குக் கிடைக்கும் இலாபம் மிகக் குறைவாயுள்ளது. எனவே, கைத்தொழில், மான்யங்களைச் சார்ந்திராமல், இலாபகரமாக நடைபெறுவதற்காக, சிக்கன முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

(2) தற்போது சீனி உற்பத்தி நீர்ப்பாசனத்தின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு $2\frac{1}{2}$ - 3 தொன்னாகவும் மழைவீழ்ச்சியுள்ள நிலைமைகளின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு $2\frac{1}{2}$ தொன்னாகவும் உள்ளது. உள்நாட்டில் ஒரு சில கரும்புவகைகள் மட்டுமே வளர்க்கப்படுகின்றன. இரு அரச பெருந்தொட்டங்களில் கரும்பு விளைச்சல் சராசரியாக ஹெக்டேர் ஒன்றுக்கு ஏறக்குறைய 58 தொன்னாகும்; இது அக்காணிகளின் உள்ளார்ந்த வளத்துக்கு மிகக்குறைவாகும். உள்நாட்டுக் கரும்புச் சாகுபடி பிரதானமாக ஒரு முக்கிய வகையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. சீனிக் கைத்தொழில் தனியொரு கரும்புவகையையும் ஒரு சில சிறிய வகைகளையும் சார்ந்திருப்பதில் பாரதூரமான வர்த்தக ஆபத்துக்கள் உண்டு. ஆகக் கூடிய விளைச்சலைத் தரக்கூடிய கரும்பை உலர் வலயத்தில் விளைவிக்க முடியும். எனினும், உலர்வலயத்தில் ஒப்பியல் ரீதியாகக் காணிகள் வெகுகுறைவு. இக்காணி வளங்களுக்காக் கரும்பு, நெல்லுடனும் நீர்ப்பாசனம் பெறும் மற்றும் பயிர்களோடும் போட்டியிட வேண்டும்.

பாரம்பரியமற்ற பயிர்கள் (அதாவது வாசனைத் திரவியங்கள், பானங்கள், எண்ணெய்ப்புல் இவையாவும் ஒன்றுகச் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் எனப்படுகின்றன) விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பல கைத்தொழில்களுக்கு ஓர் ஆதாரமாக விளங்குகின்றன. கறுவாவை மூலமாகக் கொண்ட கறுவவாப்பட்டை, நீராவி வடிகலங்களை உபயோகிக்கும் இலை எண்ணெய்கள், சிட்ரொனல்லா எண்ணெய் வடிசாலைகள், ஏலம், துளசி இன்றியமையா எண்ணெய், ஒலியோறெசின் என்னும் எண்ணெய்க் குங்கிலியக் களாசல் உற்பத்திச்சாலைகள். கொக்கோ நொதிப்புச்சாலைகள், கோப்பி அரைக்கும் சாலைகள், கொக்கோ-வெண்ணெய் - மதுபான நிலையங்கள், முந்திரிப் பருப்புத் தோலை நீக்கி வறுக்கும் நிலையங்கள், பட்டுப்பூச்சி வளர்ப்பை மூலமாகக் கொண்ட இயற்கைப் பட்டு நெய்யும் நிலையங்கள், பனைமரத்தையும் கித்துள் மரத்தையும் ஆதாரமாகக் கொண்ட நிலையங்கள் ஆகியன இத்தகைய வாய்ப்புகளுள்ள விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களாகும்.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும் மொத்த நிலப்பரப்பு 1,65,000 ஏக்கர்களாகும். ஏறக்குறைய 2,00,000 மக்கள் இதைச் சார்ந்திருக்கின்றனர். தற்போது சிறு பயிர்கள் நாட்டின் மொத்த வெளிநாட்டு நாணய சம்பாத்தியத்தில் 5 சதவிகிதத்தை ஈட்டுகின்றன. ஏற்றுமதிகள் பிரதானமாக வணிகப் பண்டங்களாகவோ அல்லது மூலப் பொருள்களாகவோ உள்ளன.

இலங்கை இப்பொழுது பல வகையான கனி வர்க்கங்களையும் காய்கறிகளையும் உற்பத்தி செய்கின்றது. சீதோஷ்ண நிலைமையும் விளைவிக்கும் நிலைமைகளும் மற்றும் பல வகைகளுக்கு உகந்தனவாயுள்ளன. பழ வர்க்கங்களையும் காய்கறிகளையும் விளைவிக்கும் தனியார் துறையைச் சேர்ந்த சிறு தோட்டங்கள் 5,00,000 – 9,50,000 இருக்கின்றன. இவை ஏறக்குறைய 5,00,000 ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப் பயிர்ச் செய்கையில் ஏறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைய 2,50,000 மேலதிக தொழிலாளர் வேலைக்கமர்த்தப் படுகின்றனர். பண்ணைமட்டத்தில் ஏறக்குறைய 50,000 தனியார்துறை வர்த்தகர்களும் சேகரிப்பு முகவர்களும் தரகு முகவர்களும் சிறு தோட்டங்களுக்குச் சேவை செய்கிறார்கள். 15 தனியார்துறை பதப்படுத்தல் கம்பெனிகளும் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒரு பதப்படுத்தல் நிறுவனமும் உள்ளன. இரு தொழிற்சாலைகள் வருடாந்தம் ஏறக்குறைய 5,000 மெட்ரிக் தொன் எடையுள்ள பதப்படுத்திய பழங்களை உற்பத்தி செய்கின்றன. தனியார்துறை மொத்த விற்பனையாளர்கள் பிரதானமாக கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி சந்தைகளில் செயற்படுகிறார்கள். இவர்கள் புத்தம் புதிய பழங்களிலும் காய்கறிகளிலும் நடைபெறும் வர்த்தகத்தில் கிட்டத்தட்ட 100 சதவிகிதத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். சந்தை நிலையங்களிலும் கிராமச் சந்தைகளிலும் நகரச் சந்தைகளிலும் வீதியோரக்கடைகளிலும் பெருந்தொகையான தனியார்துறை சில்லறைக் கடைக்காரர்களும் நடைபாதை வியாபாரிகளும் நுகர்வோருக்கு இவற்றை விற்கிறார்கள். ஏறக்குறைய 105 தனிப்பட்ட கப்பலேற்றுமதியாளர்கள் அல்லது பதப்படுத்துவோர் பழங்கள், காய் கறிகளின் ஏற்றுமதி முழுவதையும் நடைமுறையில் கட்டுப்படுத்தி வருகிறார்கள். இந்த ஏற்றுமதிகளில் உப உணவுப் பயிர்கள் எனக் கூறப்படும் சோயா, நிலக்கடலை, உழுந்து, எள்ளு, இஞ்சி, மஞ்சள், மிளகாய், பருப்பு வகைகள், வெங்காயம் முதலியனவும் அடங்கும். பழங்கள், மரக்கறிகள் சம்பந்தப்பட்ட கைத்தொழிலில் சந்தையையும் சந்தைத் தேவைகளையும் புரிந்து கொள்ளாத ஒருகுறை இருந்து வருகிறது. அத்துடன் உற்பத்தியுடன் பதப்படுத்தலை நிரற்படுத்தும் முறையுமில்லை; விரிவாக்க சேவையில்லாமை, தரக்கட்டுப்பாடு போதிய அளவிலில்லாக் குறை, ஆய்வு கூட ஆதரவின்மை ஆராய்ச்சி - அபிவிருத்தி ஆதரவின்மை, உணவைப்பதப்படுத்தும் நிபுணத்துவ அடிப்படை போதாமை உட்பட இக் கைத் தொழிலுக்குப் போதிய தொழில் நுட்ப ஆதரவில்லாதிருக்கிறது. மேலும், தரங்களும் நியமங்களும் இல்லாமை, உள்நாட்டுப் பதப்படுத்தும் நிலையங்கள் பிரதி பலனுறுதியுடன் திறமையாக இயங்கி வருவதற்கு உதவியாகப் போதிய பாதுகாப்பு அளிக்காத தாராள இறக்குமதிக் கொள்கை ஆகியனவும் இக் கைத்தொழிலைப் பாதிக்கின்றன. போதிய பொதிப்படுத்தல் தொழில்நுட்பமில்லாமை மேலும் ஒரு குறையாக இருந்துவருகிறது.

இலங்கையில் இருந்துவரும் இன்னொரு விவசாயக் கைத் தொழில் பால் பண்ணைக் கைத் தொழிலாகும். பால் பண்ணைத் துறை இலங்கைப் பொருளாதாரத்திலுள்ள முழுக் கால் நடைத்துறையின் ஓர் ஐக்கிய பாகமாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஏறக்குறைய 2 சதவிகிதத்தை உதவுகிறது. கால் நடைகள் விவசாய உற்பத்தியின் மொத்தப் பெறுமதிக்கு 7 சதவிகிதம் உதவுவதாக மதிப்பிடப்படுகிறது. எரு, தோல், மேல்தோல், விலங்கு உழுவைச் சக்தி ஆகியவற்றின் பெறுமதியும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டால், இப்பங்களிப்பு பெருமளவுக்கு அதிகமாயிருக்கலாம்.

கால்நடைகளில் 95 சதவிகிதத்துக்கு மேல் 4 ஹெக்டேருக்குக் குறைவான பண்ணைகளிலேயே இருக்கின்றன. பல விவசாயிகள் சொந்தத் தேவைகளுக்குப் பால் வழங்கவும் சிறு அளவில் விற்கவும் 163 பசு மாடுகளை வைத்திருக்கிறார்கள். இறக்குமதி செய்யப்படும் பால் மாவையும் இறக்குமதி செய்யப்படும் வெண்ணெய்க் கொழுப்பையும் ஐஸ்கிறீமாகவும் யோஹர்ட் (நொதித்த பால்) டாகவும் தயிராகவும் மோராகவும் பதப்படுத்தல், தோலையும் மேல் தோலையும் பதனிடல் ஆகியன சிறு அளவில் இருந்துவரும் பல விவசாயக் கைத்தொழில்களில் சிலவாகும். தற்போதைய பாலுற்பத்தி நாளொன்றுக்கு 2,16,000 லீட்டர்கள் என்று மதிப்பிடப்படுகிறது. தற்போது சேகரிக்கப்படும் பாலில் 60 சதவிகிதம் மொத்தக் கால்நடைகளில் 13 சதவிகிதம் மட்டுமே இருந்துவரும் மலைநாட்டுப்பகுதிகளிலிருந்தும் மத்திய பகுதிகளிலிருந்தும் வருகிறது. நாட்டில் இரு முக்கிய விலங்குணவு உற்பத்தி ஆலைகள் இருக்கின்றன. இவை 7,000 மெட்ரிக் தொன் நிறையுள்ள தீனிகளை அல்லது உபயோகிக்கப்படும் சகல தீனிகளிலும் 80 சதவிகிதத்தை உற்பத்தி செய்கின்றன. நாட்டில் ஒரேயொரு நவீன பாலுற்பத்தித் தொழிற்சாலை உள்ளது. அது லங்கா மில்க் புட்ஸ் எனினும் நிறுவனம். இதுவே பால் பண்ணைத் துறையைக் கட்டுப்படுத்துகிறது. பல சிறிய நிறுவனங்கள் பாலை ஐஸ்கிறீமாகவும் யோகர்ட்டாகவும் பாற்கட்டியாகவும் பதப்படுத்துகின்றன. இவற்றில் மிகப் பெரியது சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் எனப்படும் ஸ்தாபனமாகும். தேசிய பாற் சபையில் தற்போதுள்ள பதப்படுத்தல் திறன் 16 மணி நேர நாளொன்றுக்கு 4,40,000 லீட்டர்கள். தற்போது 1,29,700 லீட்டர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. (நாரஹேன்பிட்டியில் 1,60,000 லீட்டர்கள். பல்லேகெலையில் 40,000 லீட்டர்கள், அம்பேவெலையில் 2,40,000 லீட்டர்கள்). 16 மணி நேர நாளொன்றுக்கு மேலும் 30,000 லீட்டர்களை உற்பத்தி செய்ய அவை திட்டமிட்ட உற்பத்தித் திறன்களைக் கொண்டுள்ளன (கிளிநொச்சி - 20,000 லீட்டர்கள் காலி - 10,000 லீட்டர்கள்). நெஸ்லே நிறுவனம் பொலநறுவைத் தொழிற்சாலையில் தற்போது 50,000 லீட்டர்களை உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் திறனைக் கொண்டுள்ளது. தற்போது 26,800 லீட்டர்களை உற்பத்தி செய்கின்றது; பன்னலையிலுள்ள பால்மாத் தொழிற்சாலையில் 2,40,000 லீட்டர்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ள திறனைக் கொண்டுள்ளது. லங்கா மில்க் புட்ஸ் நிறுவனம் கொழும்பிலுள்ள தொழிற்சாலையில் 11,20,000 லீட்டர்களை மறுபொதிப்படுத்தவல்ல எந்திரத் திறனைக் கொண்டுள்ளது. தற்போது 3,75,000 லீட்டர்களை உற்பத்தி செய்கின்றது. மற்றவை 75,000 லீட்டர்களை உற்பத்தி செய்யும் திறனுள்ளவை. தற்போது 30,000 லீட்டர்களை உற்பத்தி செய்கின்றன. எனவே, இப்போதிருந்துவரும் மொத்த உற்பத்தித்திறன் 2,70,000 லீட்டர்களாகும். தற்போது 5,81,500 லீட்டர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. திட்டமிடப்பட்டுள்ள உற்பத்தித் திறன் 2,70,000 லீட்டர்கள் ஆதலால், இப்போதிருந்துவரும் உற்பத்தித் திறன்களைப் பூரணமாகப் பயன்படுத்துவதற்குப் பாலுற்பத்தியை அதிகரிக்க வேண்டியதவசியமாகும். தற்போது இறுகிய பால், பால்மா, அல்லது கிருமிநீக்கிய பாலுணவுகள், ஐஸ்கிறீம், போத்தலில் அடைக்கப்படும் பால், பாஸ்சர் முறைப்படி பாகம் செய்த பால், வெண்ணெய், யோகாட், ஐஸ்கிறீம், பால் கட்டி அல்லது நெய் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை இறக்குமதி செய்யப்பட்டும் வருகின்றன. 1984 ம் ஆண்டில் 65 கோடி 60 இலட்சம் ரூபா பெறுமதியுள்ள பால்மாவும் பாலை மூலமாகக் கொண்ட மற்றும் பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்டன.

இறைச்சி, இறைச்சிப் பொருள்கள், முட்டைகள், கோழிகள் ஆகியன இலங்கையிலிருந்துவரும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பிற கைத்தொழில்களாகும்.

இலங்கையிலுள்ள இன்னொரு முக்கியமான துறை வனவியலும் வனங்களை அடிப்படையாகக் கொண்ட விவசாயக் கைத்தொழில்களாகும். இலங்கையில் எந்தத் தனிப்பட்ட வனவியலும் வன முகாமையுமில்லை. (இலங்கைப் புகையிலைக் கம்பெனி லிமிடெட்டின் சிறிய தொரு வனவியல் திட்டத்தைத்தவிர). 1956 ம் ஆண்டில் நடத்தப்பட்ட காட்டு வளங்களின் அளவீட்டின்படி, 3 கோடி 22 இலட்சம் ஏக்கர் காடுகள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இது நாட்டிலுள்ள காணிகளில் 44 சதவிகிதமாகும். இவை காடு மூடிய பகுதிகளாகும். தற்போது, காடுகள் துரிதமாக அழிக்கப்பட்டு வருவதாலும் காட்டுமரங்கள் கண்டபடி வெட்டப்படுவதாலும் காடுகளில் தீப்பிடிப்பதாலும் விவசாயத் திட்டங்களுக்குத் திட்டமிடப்படுவதாலும் காடு மூடிய பிரதேசம் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய 25 சதவிகிதத்துக்குக் குறைந்துவிட்டது. மீள வனமாக்கும் முயற்சிகளால் 1982 ம் ஆண்டில் காடு மூடிய பிரதேசம் ஆண்டொன்றுக்கு 17,300 ஏக்கர் அளவுக்கு விரிவடைந்துள்ளது. ஆனால், மொத்த வெட்டுமரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாயின், அது ஆண்டொன்றுக்கு 30,000 ஏக்கராக் விரிவடைந்திருக்க வேண்டும். கைத்தொழில் பொருள்களுக்கான மொத்தக் கோரிக்கை தற்போதுள்ள 10 இலட்சம் கன மீட்டரிலிருந்து 2,000 ஆண்டளவில் 20 இலட்சம் கன மீட்டராக இரட்டிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வெட்டு மரங்களில் ஏறக்குறைய 42 சதவிகிதம் அரசாங்கத் துறையால் உபயோகிக்கப்படுகிறது; 35 சதவிகிதம் கட்டட நிர்மாணக் கைத்தொழிலாலும், 19 சதவிகிதம் தளவாடக் கைத்தொழிலாலும், 4 சதவிகிதம் மற்றும் பொருளுற்பத்திக் கைத்தொழிலாலும் உபயோகிக்கப்படுகின்றன. 2,000 ஆண்டளவில் இலங்கையில் கைத்தொழில் உருள் மரங்களுக்கு 20 கோடி மீட்டர் அளவுக்குப் பற்றுக்குறை இருந்துவரும்.

தற்போதிருந்துவரும் மற்றும் விவசாயக் கைத்தொழில் திட்டங்களில் விவசாயம், பூச்செடி வளர்ப்பு, மருத்துவ மூலிகைகள் உற்பத்தியும் ஏற்றுமதியும் ஆகியனவும் அடங்கும்.

**இலங்கையில் விவசாயக் கைத்தொழில் அபிவிருத்திக்கு இப்போதுள்ள சூழ்நிலை**

விவசாயக் கைத்தொழில் துறை கீழ்க்கண்ட பல தடைகளால் நாளதுவரை தடைப்பட்டுள்ளது;

(அ) வர்த்தகம், வணிகம், நகர்ப்புற ஆதன அபிவிருத்தியுடன் ஒப்பிடுகையில் விவசாயக் கைத்தொழில் மீதான முதலீடுகளுக்குக் குறைந்தவீதப் பிரதிபலனே கிடைக்கிறது.

(ஆ) படிமுறைப் பொருளாதாரங்களைத் தடைப்படுத்தும் கட்டுப்பாடுகளைக் கொண்ட காணிக் கொள்கை.

(இ) சில அத்தியாவசிய உள்ளிடுகைகள்மீது உயர்வான இறக்குமதிக் தீர்வைகள்.

(ஈ) உள்நாட்டுக் கைத்தொழில்களுக்குக் குறிப்பிடத்தக்க பாதுகாப்பு அளிக்காத தாராளமாக்கிய வர்த்தகம்.

(உ) சேவைகளின் உயர்ந்த உள்ளிடுகைச் செலவு - உதாரணமாக மின் சக்தியிலிருந்து குளிர் சேமிப்பு வரை.

(ஊ) வங்கியாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் ஆகிய இரு சாராரும் இவ்வகையான முதலீடுகளில் அதிக அபாயம் உண்டென மதிப்பிடல்.

( 25- ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு பதனிடப்படும் கைத்தொழில்களிலும் ஹோட்டல் துறையிலும் மூலப்பொருட்களாக உபயோகப்படுத்தப்படும் பாதி பதனிடப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட பழங்களும் மரக்கறிகளும்

ரஞ்சனு கர்டிஸ்
கே. ஜி. குணதிலகா

இலங்கையில் பழங்கள், மரக்கறிகள் என்பன பெருமளவில் வளர்வதுடன், இவை நேரடி நுகர்விற்காகவோ அல்லது இரண்டாவதான உற்பத்திச் செய்முறைகளுக்காகவோ உபயோகிக்கப்படுகின்றன. விவசாயச் செய்கையானது மழையில் பெரிதும் தங்கியுள்ளது. இங்கு ஐப்பசியிலிருந்து சித்திரை வரையிலான மகாபோகம் வைகாசியிலிருந்து புரட்டாதி வரையிலான யாலபோகம் என இரு உற்பத்திப் போகங்கள் உள்ளன. இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் மிக அதிகளவில் உற்பத்திகள் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றபோதிலும்,பின்னைய அறுவடைச்சங்கிலியின் பல்வேறு காரணிகளினால் ஏற்படும் இழப்புகள் காரணமாக நாட்டினது உற்பத்தியின்20-30%னது ஒவ்வொரு வருடமும் வீணாக்கப்படுகின்றது.

இதில், முதிர்ச்சி அடையாத நிலையில் அறுவடை, கையாளப்படும் மிகவும் குறைந்த தரமான செயற்பாடுகள், திருப்தியற்ற பொதி பண்ணுகை, சரியான முறையில் பொதிபண்ணப்படாமை, போக்குவரத்துத் தாமதங்கள், போதிய விற்பனைப்பகிர்வு மூலங்கள் இல்லாமை, விற்பனை செய்யப்படும்வரை உகந்த களஞ்சியப்படுத்தும் வசதியின்மை ஆகிய காரணிகள் அடங்குகின்றன

மிகவும் அபரிதமான விளைச்சல் காலங்களில், போதியளவு விற்பனை வசதிகள், இவற்றுக்கான கேள்விகள் இல்லாதபோது, இவற்றின் நிரம்பல் துரிதமாக அதிகரிப்பதனால், மிக அதிக அளவிலான பழங்களும், மரக்கறிகளும், அவற்றின் உற்பத்தித் தலங்களிலேயே பழுதடைகின்றதை காணக்கூடியதாகவுள்ளது. உற்பத்தி விலைகள் மிகவும் குறைவாக வீழ்ச்சியடைகின்றபோது, இதற்கு மாறாக நகரப்பகுதிகளிலுள்ள நுகர்வோர், அவர்களின் தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். அத்துடன் மிகவும் குறைந்த தரத்திலுள்ள, அதுவும் மிகவும் பழுதடைந்த நிலையில் நகரச் சந்தைகளுக்கு வரும் பழங்கள், மரக்கறிகள் ஆகியவற்றுக்கு அதிக விலைகளைச் செலுத்த வேண்டியுள்ளது.

முதலில், நுகர்வோர் தமக்குத் தேவையான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் அநுபவித்த கஷ்டங்கள், பிரச்சினைகள் என்பவற்றைத் தீர்மானிக்கவும், பின்னர், உற்பத்திச் செய்முறைக்கும், சமைப்பதற்கும் காப்பு செய்யப்பட்ட அல்லது சேர்த்து வைக்கப்பட்ட பழங்கள், மரக்கறிகளை மாற்று மூலப்பொருளாக உபயோகிப்பதில் இவர்களின் பிரதிபலிப்பினை அறிந்து கொள்ளவும் இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆரய்ச்சி ஸ்தாபனம், கனடாவிலுள்ள சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் அனுசரணையுடன் தெரிந்தெடுக்கப்பட்ட பழ, மரக்கறிச் செய்முறைக் கைத்தொழில்களிலும், ஹோட்டல்களிலும் (கைத்தொழில் நுகர்வோர் நிறுவனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள) ஒரு ஆய்வினை மேற்கொண்டது. இன்று பல்வேறு நாடுகளில் உபயோகிக்கப்படும் தொழில் நுட்பமுறையான பழங்களையும் மரக்கறிகளையும் பாதுகாப்பு செய்வதற்கும், நீண்ட நாட்களுக்கு காப்புச்செய்து வைப்பதற்கும் விசேஷ தொழில்நுட்பங்கள் உள்ளன. இவை, தூர இடங்களில் அமைந்திருக்கும் உற்பத்தித் தலங்களிலும் அறிமுகம் செய்யப்படலாம். இந்த நிலைமையானது, வெவ்வெறு மாகாணங்களில் ஏற்படும் மேலதிக உற்பத்திகளைப் பாதுகாப்பதற்கோ அல்லது நீண்ட நாட்களுக்குக் காப்புச் செய்து வைத்திருப்பதற்கோ, சிறிய அளவிலான ஆரம்பச் செயன்முறை நிலையங்களை அமைக்கும் எண்ணக்கருவிற்கு வழிவகுத்தது.

சுருக்கமாக, பின்வரும் தொழில் நுட்பங்கள், பாதுகாத்தல் நீண்ட நாட்களுக்கு பத்திரப்படுத்துதல் என்ற செயன்முறையில் அடங்குகின்றன.

1. கட்டுப்படுத்தப்பட்ட அமுக்க நிலைக் களஞ்சியம், மெழுகு பூசுதல் போன்ற நுட்பங்கள் மூலம் நீண்ட நாட்களுக்கு இயற்கையான நிலையில் வைத்திருத்தல். இந்த மூலப் பொருளானது எல்லா வகையிலான உற்பத்திச் செயன் முறைகளுக்கும் பாவிக்கப்படக்கூடியதோடு, இது வியாபித்த பயன்பாட்டினையும் கொண்டது.

2. உறையக்கூடிய அல்லது இரசாயனப் பாதுகாப்புத் தொழில் நுட்பம் மூலம் பழச்சாறு, பழக்கூழ் வடிவிலுள்ளவற்றை களஞ்சியப்படுத்துதல். பழவகைப் பானங்கள், ஜாம், சட்னி பாதுகாப்பிகள், குழம்புகள் என்பவற்றின் உற்பத்திகளுக்கு இது பாவிக்கப்படலாம்.

3. ஊறவைக்கும் பாதுகாப்பு நுட்பத்தின் மூலம் முழுதான அல்லது வெட்டப்பட்ட பழங்களை களஞ்சியப்படுத்துதல். இவை சட்னி, ஊறுகாய், பாதுகாப்பிகள் என்பவற்றின் தயாரிப்பிற்கு உபயோகிக்கப்படலாம்.

4. சூரியன் மூலம் உலர்த்தல் அல்லது வைப்பக்காற்று உலர்த்தல் போன்ற நுட்பத்தின் மூலம் வெட்டப்பட்ட, நீரகற்றிய பழங்கள், மரக்கறிகள் என்பவற்றைக் களஞ்சியப்படுத்துதல். இவை சட்னி, ஊறுகாய், பாதுகாப்பிகள் என்பவற்றின் தயாரிப்பிற்குப் பாவிக்கப்படலாம்.

5. கிராமிய மட்டத்தில், மேலதிக உற்பத்திகளை உணவுத் துண்டங்கள், பழத்தட்டுகள் போன்ற சாதாரண உற்பத்திகளாக செயன்முறைப்படுத்துதல். இம்முறை இவ்வகை மூலப்பொருட்களின் உச்சப் பயன்பாட்டினை உறுதிப்படுத்தும்.

இந்த ஆய்விற்கு வேண்டிய தகவல்கள் கேள்விக் கொத்துகள் மூலமும், நுகர்ச்சிச் சங்கங்களுக்கு நேரடி விஜயங்களின் மூலமும், தேவையானவிடத்து தொலைபேசி, கடிதங்கள் மூலமும் பெறப்பட்டுள்ளன. பழ, மரக்கறி உற்பத்தி, தற்போதுள்ள சந்தை வாய்ப்புமுறைகள், விலை வித்தியாசத் தரவுகள் போன்றவற்றின் தகவல்கள் புள்ளி, விபரத் திணைக்களம், விவசாய ஆராய்ச்சி அமைச்சு, மார்க்கெட் நிறுவகம், விற்பனைத் திணைக்களம் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை மத்திய வங்கியிலிருந்தும், வர்த்தகர்கள், தரகு முகவர்கள், பொருட்கள் கொண்டுசெல்வோர் கொழும்பிலுள்ள மொத்த விற்பனைச் சந்தைகளிலுள்ள இடைநிலையியலாளர்கள் என்போரிடையே நடாத்தப்பட்ட நேர்முக உரையாடலிலிருந்தும் தகவல்கள் பெறப்பட்டுள்ளது.

இத்தகைய நிறுவனங்களின் பழங்கள், மரக்கறி என்பவற்றின் வழங்கல், கொள்வனவு செய்யப்படும்விதம் என்பது பற்றிய தகவல்களில் பின்வரும் அம்சங்கள் இடம்பெற்றன.

- உபயோகிக்கப்பட்ட பழங்களும், மரக்கறிகளும், தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களும்.
- நுகரப்பட்ட தொகையளவு.
- கொள்வளவு செய்யப்படும் மூலங்கள்.
- கொள்வனவு செய்யப்படும் தடவைகள்.
- இவை வழங்கப்பட்ட இடங்களின் விபரங்கள்.
- பாவிப்பதற்கு முன்பான களஞ்சியப்படுத்தும் காலம்.
- பாவிப்பதற்கு முன் மூலப்பொருட்கள் பழுதடைவதற்கான பிரச்சினைகளும், அவை பழுதடைந்த அளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக தெரிவிக்கப்பட்ட மூலப்பொருளுக்கான நுகர்வோரின் பிரதிபலிப்பு/தாக்கம் என்பது, தெரிந்தெடுக்கப்பட்ட 30 கைத்தொழில்களின் உற்பத்தி முகாமையாளர்களிடமும், உணவு வகைகளுக்குப் பொறுப்பாயுள்ள முகாமையாளர்களிடமும் அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட 30 ஹோட்டல்களின் சமையற்பகுதிக்கு பொறுப்பாகவுள்ளவர்களிடமும் நடாத்தப்பட்ட நேரடி சம்பாஷணை மூலம் கணிப்பிடப்பட்டது.

### பழங்கள், மரக்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தியும், பகிர்வும்

எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில், பயிர்ச்செய்கையும், உற்பத்தியும் என்பதற்கான தரவு பெறப்பட்டுள்ளது. எனினும், இத்தரவுகள் நாட்டில் விதம், விதமான பழங்களும், மரக்கறிகளும் ,உற்பத்தியாகும் முக்கிய பகுதிகளை இனங் காண்பதற்கு வழிவகுத்தது.

சாதாரணமாக உற்பத்தியாளர்கள், தங்களின் பழங்கள், மரக்கறிகள் என்பவற்றை தங்களின் தலைகளில் சுமந்தோ அல்லது பைசிக்கிள், லொறி என்பவற்றின் மூலமோ பிரதான வீதிக்கு அல்லது கிராமச் சந்தைக்கு அல்லது வாரத்தின் குறிப்பிட்ட நாட்களில் இடம்பெறும் பொலவிற்கு கொண்டு வருகின்றனர். பொதுவில், இவை தரப்படுத்தப்பட்டவையாகவோ அல்லது விசேடமுறையில் பொதிபண்ணப்பட்டவையாகவோ இருக்க மாட்டாது. மொத்த விற்பனை வியாபாரிகள், தரகு முகவர்கள், போக்குவரத்து ஒப்பந்தகாரர், கூட்டுறவு உத்தியோகத்தர்கள், மார்க்கெட் அதிகாரிகள், சந்தைப்படுத்தும் திணைக்கள அதிகாரிகள்; தனிப்பட்ட நுகர்வோர் ஆகியோர் இப்பொருட்களை பரிசோதித்து கொள்வனவு செய்வர். இவை பின்னர், கொழும்பிற்கும் ஏனைய பிரதான நகரங்களுக்கும் அனுப்பப்படுகிறது. உற்பத்திப் பொருளுக்கு குறைந்த தரமான பொதியாக்கம், மிகையான சுமை ஏற்றல், விற்பனை செய்யப்படும்வரை சரியான களஞ்சியப்படுத்தும் வசதியின்மை என்பன காரணமாக மூலப்பொருட்கள் பழுதடைவது அதிகரித்ததுடன் அவை வைத்திருக்கப்படும் கால அளவினையும் வெகுவாகக் குறைத்தது.

### கைத்தொழில்களுக்கும், ஹோட்டல்களுக்கும் பழங்கள்; மரக்கறிகள் என்பவற்றின் வழங்கல்

பதனிடப்படும் கைத்தொழில்களுக்கு பழங்கள், மரக்கறிகள் என்பவற்றினை வழங்கும் பிரதான மூலங்களாக இடை நிலையியலாளர், போக்குவரத்து முகவர்கள், அல்லது சமீபத்திலுள்ள மொத்த விற்பனைச் சந்தை அல்லது சில சந்தர்ப்பங்களில் இவற்றைப் பயிரிடுவோன் ஆகியோர் செயற்பட்டனர். ஆய்விற்கு எடுக்கப்பட்ட 34 கைத்தொழில்களில் போக்குவரத்து முகவர்கள் அல்லது இடைநிலையியலாளர்கள் 22 கைத்தொழில்களுக்கு (முழுதாக 4 க்கும் பகுதியாக 18 க்கும்) மூலப்பொருட்களை வழங்கினர் என்று காணக்கூடியதாக உள்ளது. 17 கைத்தொழில்கள் (50%), சமீபத்தியுள்ள மொத்த விற்பனைச் சந்தையில் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் பழக்கத்தினைக் கொண்டிருந்தன. இவற்றில் 7 கைத்தொழில்கள் முற்று முழுதாக சந்தையை நம்பியிருந்த சமயத்தில், ஏனையவை ஓரளவிற்கு இடைநிலையியலாளர்களிலும் தங்கியிருந்தன. குறிப்பிட்ட ஒரு சமயத்தில், பயிரிடுபவன் மூலமே முழுக் கொள்வனவும் மேற்கொள்ளப்பட்டது. இக் கைத்தொழில்களில் பெரும்பாலானவை கொழும்பிலும், அதன் சுற்றுப்புற நகரங்களிலும் அமைந்திருந்ததால், இவை தங்களின் கொள்வனவிற்கு பெருமளவில் இடைநிலையியலாளர்களிடமும், மொத்த விற்பனைச் சந்தைகளிலுமே தங்கியிருந்தன. இதற்கு எதிர்மாறாக, மலை நாட்டிலுள்ள கைத்தொழில்கள், பயிரிடுபவனிடம் பெருமளவில் தொடர்புகளை வைத்திருந்தன.

ஹோட்டல்களுக்கு, அதிகமாக முகவர்களாலேயே வழங்கல் மேற்கொள்ளப்பட்டது. அதாவது வழங்குநர்கள், மூலப் பொருட்களை கொள்வனவு செய்கையில், உற்பத்தியினை தரம் பிரித்து, தெரிந்தெடுத்து, அவற்றின் தரம், வகை என்பவற்றைப் பொறுத்து வெவ்வேறு விலைகளில் ஹோட்டல்களுக்கு விற்பனை செய்கின்றனர். உதாரணமாக, முதலாந்தர உற்பத்திகள் செல்வின் ஏறக்குறைய 300% ற்கு விற்கப்பட்டது. அதே சமயம் குறைந்த தரத்திலுள்ளவை, அதற்கேற்ற விகிதத்தில் குறைத்து விற்கப்பட்டன. ஹோட்டல்கள் சமீபத்திலுள்ள மொத்த விற்பனைச் சந்தைகளிலும் கொள்வனவை மேற்கொண்டன. ஆய்விற்கு எடுக்கப்பட்ட 103 ஹோட்டல்களில் 48 (47%) ஹோட்டல்கள், கிரமமான வழங்குனர்களில் முற்றுமுழுதாக தங்கியிருந்தன என்றும் 40 (39%) ஹோட்டல்கள் திறந்த சந்தையிலும், மிகுதி பதினைந்தும் (14%) இந்த , இரண்டு மூலங்களிலும் தங்கியிருந்தன என அறியக்கூடியதாகவுள்ளது. இலங்கையின் தென் கரையோர, தென்மேற்கு கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள ஹோட்டல்கள், பாரிய அளவில் கிரமமான வழங்குனர்களிலும், கொழும்பில் அமைந்துள்ளவை இந்த இரு மூலங்களிலும் இருந்து தங்களின் கொள்வனவை மேற்கொண்டன என மேலும் அறியக் கூடியதாகவுள்ளது. மேற்கூறிய முறையில் நுகர்வோனை அடையும் உற்பத்திப் பொருளானது, அறுவடைக்குப் பின்பான கால ஓட்டத்தினூடாக மீண்டும் மீள்பகிர்வு செய்யப்படுவதால் அவ்வுற்பத்தியின் தரமானது அப்போது நிலவும் நிலைமைகளினாலும், கையாளுதல், பொதி பண்ணுதல், போக்குவரத்து, விற்பனைக்கு முன் களஞ்சியப்படுத்துதல் என்பவற்றின்போது மேற்கொள்ளப்பட்ட முறைகளினாலும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கும், என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும். ஆரம்ப உற்பத்தியாளனுக்கும், இறுதியாக உபயோகிப்பவனுக்குமிடையே நிலவும் இடைவெளி அல்லது போதிய தொடர்பின்மையும், நுகர்வோனை அடைவதற்கு அது செல்ல வேண்டிய மிக நீண்ட ஊடகமும் மிக முக்கிய கவனத்தினைப் பெறுகின்றன.

### உற்பத்தியினைக் களஞ்சியப் படுத்தலும், பழுதடையும் பிரச்சினைகளும்

கொள்வனவு செய்யப்பட்ட உற்பத்திகள், உடனடியாக பாவிக்கப்படாத போது அல்லது நுகரப்படாதபோது, அவை ஒரு சிறிய காலத்துக்கு களஞ்சியப்படுத்தி வைத்திருக்க முடியும். 28 கைத்தொழில்கள் கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருளை 2 நாட்களுக்கு மேலாக களஞ்சியப்படுத்தி வைத்திருந்தன. இதில் 21 (62%) கைத்தொழிகளில் அதிக அளவிலான பழுதடைவு பிரச்சினைகள் இருந்தன. தக்காளி, பப்பாசி பசன்பழம், எலுமிச்சை, மாம்பழம், பூசணி ஆகியவற்றிலேயே பாரிய அளவிலான பழுதடைவு பிரச்சினைகள் காணப்பட்டன. கொள்வனவு செய்யப்பட்ட அளவில் 5-26% பழுதடைந்தவையாகக் காணப்பட்டன. ஹோட்டல்களும் கூட இவ்வாறு மூலப்பொருட்களை சிறிது காலத்திற்கு களஞ்சியப்படுத்தி, பழுதடைவுப் பிரச்சினைகளை அநுபவித்தன. இங்கு தக்காளி, லீக்ஸ், கோவா, முள்ளங்கி போன்ற இலைக்கறிவகைகள் பப்பாசி, வாழைப்பழம், அன்னாசி போன்ற பழவகைகள் என்பனவையே பாரிய அளவில் பழுதடைந்தன. இங்கு பழுதடைவு வீதமானது 2% லிருந்து 10 வீதம் வரை இருந்தது.

### பருவமற்ற காலங்களில் வழங்கல்கள்

பருவமற்ற காலங்களில், பழங்கள், மரக்கறிகள் என்பனவற்றின் குறைவான வழங்கல் காரணமாக, இவற்றின் விலைகள் அதிகரித்தனால், இந்நிறுவனங்கள் அநேக பிரச்சினைகளை எதிர்நோக்கினஎன உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஹோட்டல்கள் முற்று முழுதாக தங்களின் வழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்குநர்களிலேயே பெரிதும் தங்கியிருந்த துடன், நீண்ட காலத்துக்கு களஞ்சியப் படுத்தும் வசதிகளைக் கொண்டிருக்க வில்லை. கேட்கப்படும் உயர் விலைக்கு கொள்வனவு செய்ய இவைகள் கட்டாயப்படுத்தப்பட்டன அல்லது அதற்குப் பதிலாக, தங்களின் போஷணை அட்டவணையில் இருந்து, குறிப்பிட்ட உற்பத்தியினை நீக்கவேண்டியிருந்தன.

பதனிடும் கைத்தொழில்கள் இத்தகைய பிரச்சினைகளை தீர்க்கும்முகமாக சில முயற்சிகளை மேற்கொண்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 9 கைத்தொழில்கள், பருவகாலத்திலேயே பதனிடப்பட்ட, காப்புச் செய்த பழச்சாறு, பழக்கூழ் என்பவற்றை உபயோகிக்கும் நடைமுறையினை ஏற்கனவே ஏற்படுத்திக் கொண்டன. இக்கைத்தொழில்களில் நான்கு, தங்களினது தேவையினை இம்முறையில் முற்ருகப் பெற்றதுடன், ஏனையவை இவற்றுடன் மேலதிக உற்பத்தி இருப்புகளை அல்லது உயர்ந்த விலைக்கு கொள்வனவு செய்து தமது தேவைகளை பூர்த்தியாக்கின. காப்புச் செய்யப்பட்ட மூலப் பொருட்களை உபயோகிக்கும் கைத்தொழில்களிடையே, மூன்று கைத்தொழில்கள், காப்புச் செய்யப்பட்ட மூலப்பொருட்களை வழங்கும் ஒரு சாதாரண வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்ததிலிருந்து, இவ்வாய்வினது குறிக்கோள்கள் ஏற்கனவே நடைமுறையிலிருந்தது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியதொன்ருகும். பருவமற்ற காலங்களில் உபயோகிப்பதற்கென தற்போது கைத்தொழில்களினுல் பழச்சாறு வடிவிலும், பழக்கூழ் வடிவிலும் உபயோகிக்கப்படும் உற்பத்திகளில், அன்னுசி, மாம்பழம், தக்காளி, பசன்பழம், எலுமிச்சை விளாம்பழம், பூசணி என்பன அடங்குகின்றன.

பழச்சாற்றினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளில் பழங் குளிர்பானங்கள், தகரத்தில் அடைக்கப்பட்ட சாறு, பழ நெக்டார் போன்ற உடனடியாக குடிக்கக்கூடிய பழக் குடிவகைகள் ஆகியனவும், பழக்கூழினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளில் ஜாம், ஜெலி, சட்னி, பழக்குழம்பு வகைகள் என்பனவும், முழுதான அல்லது வெட்டப்பட்ட பழங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளில் தகரத்தில் அடைக்கப்பட்ட பழங்கள், பாதுகாப்பிகள், ஊறுகாய்கள் என்பனவும் அடங்குகின்றன. அநேகமான கைத்தொழில்களினுல் மிக அதிகளவில் வேண்டப்பட்ட பழம், பசன்பழமாகும். இதற்குப்பின் பின்வரும் குறைவடைந்து வரும் ஒழுங்கில் பழங்களுக்கான கேள்வி இருந்தது. அன்னுசி, மாம்பழம், எலுமிச்சை, விளாம்பழம், தக்காளி, மாமலேட் தோடை, பூசணி, பப்பாசி, சௌசௌ, இஞ்சி என்பதாகும். ஒரு தனிப்பட்ட ஆலைக்கு தேவைப்பட்ட பசன்பழத்தின் ஆகக்கூடிய தொகை ஒரு வருடத்திற்கு 6000 மெற்றிக் தொன்களாகவும், தக்காளி, அன்னுசி, மாம்பழம் ஆகியவற்றுக்கு 200 மெற்றிக் தொன்களாகவும் இருந்தது. சில கைத்தொழில்களில் பாரிய அளவிலான உற்பத்திக்கான கொள்ளளவு இருந்த போதிலும், சிறந்த மூலப்பொருள் கிடைக்காமை, பரந்த சந்தை வாய்ப்பிற்கான அவசியம் போன்ற பல காரணங்களினுல் இவை உபயோகிக்கப்படாதிருந்தன. பாரிய அளவு தயாரிப்பில் ஈடுபடும் கைத்தொழில்களின் அதியுயர் கொள்ளளவானது, பழப்பானங்களுக்கு 7000 போத்தல்கள், ஜாமுக்கு 18,000 போத்தல்கள், தகரத்தில் அடைக்கப்பட்ட பழச்சாற்றுக்கு 10,000 அலகுகள், தகரத்தில் அடைக்கப்பட்ட பழங்களுக்கு 6,000 அலகுகள், பழக்குழம்பிற்கு 7,000 அலகுகள் என்ற ரீதியில் ஒரு நாளைக்குரிய கொள்ளளவினைக் கொண்டிருந்தது. தகரத்தில் அடைக்கப்படும் உற்பத்திகள், முக்கியமாக ஏற்றுமதி நோக்கம் கொண்ட சில கைத்தொழில்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது.

நுகர்ச்சிக்கான கேள்வியானது, வெளிநாட்டவர்களின் தேசிய இனத்தினுல் பாதிக்கப்படவில்லையென்றும், உள்ளூர் உற்பத்திகளுக்கே பெரியளவில் விருப்பு இருந்ததென்றும் இவ்வாய்வு தெரிவிக்கின்றது. அதியுயர் கேள்வி, தை மாதத்திலும், ஆகக் குறைந்த கேள்வி ஆனி மாதத்திலும் இருந்தது. உள்நாட்டில் கிடைக்கக்கூடிய உற்பத்திகளை விட தகரத்திலடைக்கப்பட்ட, போத்தல்களிலடைக்கப்பட்ட சில குறிப்பிட்ட இறக்குமதி பொருட்களும் உபயோகப்படுத்தப்பட்டன. பரிமாணக் கேள்வியானது. ஹோட்டல்களின் நுகர்ச்சி வகையுடன் விகிதசமமாக வேறுபடுகின்றது, எனக் காணப்பட்டுள்ளது. இத்தகைய வேறுபாடுகளை, உல்லாசப் பிரயாணிகளின் ஆகக்கூடிய வருகையுள்ள மாதங்களிலும், ஆகக்குறைவான வருகையுள்ள மாதங்களிலும் காணக்கூடியதாகவுள்ளது. உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதியுயர்வாகவுள்ள காலங்களுடன், பழங்கள், மரக்கறிகள் என்பவற்றின் வளர்ச்சிப் பருவங்கள் எப்போதும் ஒத்துப்போகவில்லையாதலால், பருவமற்ற காலங்களில் ஹோட்டல்கள் மிகவுயர்ந்த விலைகளில் கொள்வனவினை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குள்ளாகின.

ஒன்பது (30%) கைத்தொழில்கள், பருவமற்ற காலங்களில் களஞ்சியப்படுத்தப்பட்ட பழச்சாறு, பழக்கூழ் என்பவற்றை உபயோகிப்பதில் ஏற்கனவே பரிச்சயமுள்ளவையாகக் காணப்பட்டது. சேகரித்து வைக்கப்பட்ட புதிய மூலப்பொருட்களை உபயோகிப்பதில் 28 கைத்தொழில்கள் (93%) ஆர்வம் காட்டிய அதேநேரத்தில் 22 கைத்தொழில்கள் (81%), பாதுகாப்புச் செய்யப்பட்ட சாற்றினையும், கூழையும், அவற்றின் தரம் சிறந்ததாக இருக்குமிடத்து, அவற்றை உபயோகிப்பதில் ஆர்வம் காட்டின. 14 கைத்தொழில்கள் (70%) நீரகற்றப்பட்ட உற்பத்திகளில் ஆர்வம் காட்டின. பல கைத்தொழில் அதிபர்கள், உப்புநீரில் ஊறவைக்கப்பட்ட பழங்களை உபயோகிப்பதற்கு ஆர்வமுற்ற போதிலும், இவ்வுற்பத்திகளை அவர்கள் முதலில் பார்க்க விரும்பினர். இத்தகைய உற்பத்திகளுக்கான பொருத்தமான பொதிகளின் அளவுகள் தீர்மானிக்கப்பட்டன.

## ஹோட்டல்கள்

பாதி பதனிடப்பட்ட / பாதுகாப்புச் செய்யப்பட்ட வழங்கல்களை ஹோட்டல்களுக்கு வழங்கக்கூடிய இயல்தன்மையும் இதேமாதிரி கணிப்பிடப்பட்டது. எல்லாக ஹோட்டல்களும், களஞ்சியப்படுத்தப்பட்ட மூலப் பொருளை இயற்கை வடிவில் வைத்திருக்கவே ஆர்வம் காட்டின. அநேகமான ஹோட்டல்கள் தற்போது பழப்பானங்களை (725 மிலீ போத்தல்கள்) தங்கள் முக்கிய பழச்சாருக கருதுவதால், பாதுகாப்புச் செய்யப்பட்ட பழச்சாற்றின் வழங்கலுக்கும் நல்ல முறையிலான பிரதித்தாக்கம் இருந்தது. பசன்பழம், மாம்பழம், தக்காளி, முந்திரிகை, எலுமிச்சை, அன்னுசி ஆகிய பழங்களின் சாறுகளுக்கு அதிக கிராக்கி இருந்தது.

கைத்தொழில் நுகர்ச்சியாளர்களுக்கு பழங்கள், மரக்கறிகள் என்பவற்றினுலான மூலப்பொருட்களை வழங்குவதில் அநேக பிரச்சினைகள் இருந்தன என இங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய பிரச்சினைகளில் அநேகமானவை, அறுவடைக்குப்பின்பு, போக்குவரத்தினை மேற்கொள்வதிலும், களஞ்சியப்படுத்துவதிலும் ஏற்பட்ட பிரச்சினைகளே ஆகும். இவை கட்டுப்படுத்துவதற்கு முடியாதவையாக இருந்தன. இதற்குப்பதிலாக களஞ்சியப்படுத்தப்பட்ட / பாதுகாப்புச் செய்யப்பட்ட மூலப்பொருட்களை உபயோகிப்பதில் நல்ல பிரதித்தாக்கம் காணப்பட்டது. வெவ்வேறு கிராமிய மாவட்டங்களில், பருவகாலங்களில் அதிகளவில் உற்பத்தியாக்கப்படும் பழங்களும், மரக்கறிகளும் போதியளவு உபயோகிக்கப்படாமல் வீணுகின்றன. இத்தகைய மூலப்பொருட்களை பருவமற்ற காலங்களில் உபயோகிக்கக்கூடிய வகையில் பொருத்தமான தொழில் நுட்பங்களை விருத்தி செய்யக்கூடியவாறு திட்டமிடப்படல் வேண்டுமென சிபார்சு செய்யப்படுகிறது. இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள், இலங்கையின் வெவ்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறிய அளவிலான பழம், மரக்கறி பதனிடப்படும் நிலையங்களில் செயற்படுத்தப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1985 இல் இலங்கையின் பொருளாதாரம்

1985 ம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5 சதவீத முற்று முழுதான வளர்ச்சியைக் காட்டியது. விவசாயமும், தயாரிப்பு உற்பத்தித்துறையும் இவ்வளர்ச்சிக்குப் பிரதான பங்களிப்பினை வழங்கின. இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் (1985) இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சாதகமற்ற வெளிநாட்டுப் பொருளாதாரச் சூழல், நாட்டின் சில பாகங்களில் நிலவுகின்ற கொந்தளிப்பு நிலைமை என்பவற்றுக்கு மத்தியில் இது ஒரு ''குறிப்பிடத்தக்க சாதனையாகும்'' என இந்த அறிக்கை கருதுகின்றது. இன்னொரு சாதனையைப் பற்றியும் இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது; பல்வேறு எதிர்மறை காரணிகளுக்கு மத்தியில், சென்ற வருடத்தில் நுகர்வோர் விலைகள் (கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் அளவிடப்பட்டது) 1.5 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்தமையே இதுவாகும்.

பொருளாதாரத்தில் நிகழ்ந்த எதிர்மறைக் காரணிகளின் தாக்கத்தை விவசாயத் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சி கட்டுப்படுத்தியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறை ஏறக்குறைய நான்கிலொரு பங்கினைக் கொண்டிருந்தது. பாதமான காலநிலையின் விளைவாகப் பாதிக்கப்பட்டிருந்த நெல் உற்பத்தி, 1985 இல் 10 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. தேங்காய் உற்பத்தி 52 சதவீதத்தால் அதிகரித்தது; இது பேரளவிலான ஒரு அதிகரிப்பாகும். முன்னைய வருடம் 16 சதவீதத்தால் அதிகரித்திருந்த தேயிலைத்துறை, வருடம் மேலும் 3 சதவீதத்தால் அதிகரித்தது. உள்நாட்டு விவசாய, பெருந்தோட்டத்துறைகளில் ஏற்பட்ட இந்த அபிவிருத்தியும், விவசாயப் பதனிடல், வர்த்தகம் என்பவற்றில் அது ஏற்படுத்திய தாக்கமும் இந்த 5 சதவீத பொருளாதார வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருந்தன.

எனினும், பொருளாதாரத்தில் பெரும்பாலான துறைகள் சாதகமற்ற தன்மையைக் காட்டுகின்றன. குறிப்பாகத் தேயிலை, தென்னை போன்ற பண்டங்களின் விலை வீழ்ச்சி, உல்லாசப் பிரயாணத் துறையுடன் இணைந்த சேவைகளில் பாதிப்பு, அதிகரித்த பாதுகாப்புச் செலவு, குறைந்த வெளிநாட்டு முதலீடு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருளாதார நடவடிக்கைகளின் பாதிப்பு என்பனவே முரணான காரணிகளாகும். 1985 இல் இலங்கையின் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவிலான சீர்குலைவு தீவிரமாக அபிவிருத்தியைப் பாதித்த ஒரு காரணியாகும். கடந்த இரு வருடங்களுடன் ஒப்பிடுகையில், சென்ற வருடம் நாட்டின் நிதி நடவடிக்கைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது; 1985 இல் வரவுசெலவுத் திட்டம் விரிவடைந்துள்ளது. இதற்கிடையில் 1985 இல் இலங்கை சாதகமற்ற வர்த்தக நிலைமையையும் அனுபவித்தது. 1972 இன் பின்னர் முதற் தடவையாக ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்தது.

## பொதுவான போக்குகள்

1985 இல் மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.0 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது; 1984 இல் இது 5.1 சதவீதமாக விருந்தது. மெய்ரீதியில் காரணிச் செலவின் நிகர வெளிப்பாய்ச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி 1985 இல் இடம்பெற்ற ஒரு சாதகமான அபிவிருத்தியாகும்; இதன் விளைவாக மெய்ரீதியான மொத்த தேசிய உற்பத்தி 5.3 சதவீதத்தால் அதிகரித்தது; 1984 இல் இந்த அதிகரிப்பு 5.1 சதவீதமாகவிருந்தது.

1985 இல் மொத்த நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மதிப்பிடப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி ரூபா 14600 கோடியாகும். இது 1984 இல் மதிப்பிடப்பட்டதனை விடவும் 6.9 சதவீதம் அதிகமாகும். மொத்தத் தேசிய உற்பத்தியின் மெய் அதிகரிப்பின் அடிப்படையில் பார்க்கும்போது விலைக்குறைப்பு 1.5 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்துள்ளது; 1984 இல் இது 17.4 சதவீதமாகவிருந்தது. பிரதான விவசாய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குக் காரணமாகும்.

1985 இன் மத்தியில் இலங்கையின் சனத்தொகை 1 கோடி 58 லட்சம் எனப் பதிவாளர் நாயகம் திணைக்களம் உத்தேசமாக மதிப்பிட்டுள்ளது. 1984 இற்குரிய மதிப்பீட்டிலும் இது 1.5 சதவீத வளர்ச்சியாகும். ஆகையால் தலாரீதியான மொத்தத் தேசிய உற்பத்தி ரூபா 9,219 (339 அமெரிக்க டொலர்) ஆகவிருந்தது. மெய்ரீதியில் தலா வருமானம் 3.7 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது; 1984 இன் அதிகரிப்பான 4 சதவீதத்தை விடவும் இது குறைவானதாகும்.

1985 இல் இலங்கையின் வர்த்தகமாற்று விகிதம் 22.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததால், மெய்ரீதியான மொத்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய உற்பத்தி 0.4 சதவீதத்தால வீழ்ச்சியடைந்தது. 1983, 1984 ஆம் ஆணடுகளில் வர்த்தக மாற்று விகிதம் அபிவிருத்தியடைநததனல் மெய்ரீதியான மொத்தத் தேசிய உற்பத்தி குறையே 8.6, 9.9 சதவீதமாக விருந்தன.

1985 இல் விவசாய, உற்பத்தி, வாத்தகத் துறைகள் பொருளாதார வளர்சிக்குக் கூடிய பங்களிப்பினைச் செய்த அதே வேளை, போக்குவரத்து, வங்கித் தொழில் என்பனவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செய்தன.

## துறைவாரியான செயற்றிறன்

1984 இல் எல்லாிதியில் வீழ்ச்சியடைந்திருந்த விவசாயம், வனத்துறை, மீன்பிடித்துறை என்பன 1985 இல் 8.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. தேயிலையின் உப துறையில் ஏற்பட்ட ஒரு மெதுவான வளர்ச்சிக்கும், இறப்பர் உப துறையில் ஏற்பட்ட எதிர்கணிய வளர்ச்சிக்கும் மத்தியிலேயே இவ்வளர்ச்சி அடையப்பட்டுள்ளது. தென்னை உப துறையிலும் நெல் உப துறையிலும் ஏற்பட்ட மீட்சியின் விளைவாகவே விவசாயத் துறையில் மொத்த ரீதியான வளர்ச்சி எய்தப்பெற்றது. தென்னைத் துறையில் அடையப்பட்ட 52.3 சதவீத வளர்ச்சி அண்மைய் வருடங்களில் பதியப்பட்ட மிகக் கூடிய வளர்ச்சியாகும். 1984 இல் வீழ்ச்சியடைந்திருந்த நெல்துறை 1985இல் 10 சதவீத வளர்ச்சியை அடைந்தது. விவசாயத்துறையில் ஏனையவற்றின் வளர்ச்சி, சென்ற வருடத்தை விடவும் குறைவாகவிருந்தது. மீன்பிடித் துறை சென்ற வருடத்தை விடவும் சிறந்த வளர்ச்சியைக் காட்டியது.

போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல், செய்தித் தொடர்பு என்பன குறைந்த வளர்ச்சியைக் காட்டின; 1985 இல் இவற்றின் வளர்ச்சி 4.2 சதவீதமாகும்.

அட்டவணை 1

மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி 1983–1985-நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்

| துறை | ரூ. பத்து லட்சம் 1988 (அ) | 1984 (அ) | 1985 (அ) | வளர்ச்சிவீதம் 1984 | 1985 |
|---|---|---|---|---|---|
| 1. விவசாயம், காட்டுத்தொழில், ing மீன் பிடி: | 26,212 | 26,113 | 28,366 | – 0.4 | 8.6 |
| 1.1 தேயிலை | 2,309 | 2,681 | 2,759 | 16.1 | 2.9 |
| 1.2 இறப்பர் | 865 | 878 | 851 | 1.5 | – 3.1 |
| 1.3 தென்னை | 2,992 | 2,513 | 3,828 | –16.0 | 52.3 |
| 1.4 நெல் | 6,318 | 6,166 | 6,783 | – 2.4 | 10.0 |
| 1.5 ஏனையன (உப உணவுப்பயிர்கள் காட்டுத் தொழில், மீன்பிடி) | 13,728 | 13,875 | 14,145 | 1.1 | 1.9 |
| 2. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 2,413 | 2,449 | 2,486 | 1.5 | 1.5 |
| 3. தயாரிப்பு | 13,710 | 15,390 | 16,193 | 12.3 | 5.2 |
| மரப்பயிர் பதப்படுத்தல் | 2,715 | 2,983 | 3,222 | 9.9 | 8.0 |
| ஏனையன | 10,995 | 12,407 | 12,971 | 12.8 | 4.5 |
| 4. நிர்மாணம் | 8,039 | 8,030 | 8,070 | – 0.1 | 0.5 |
| 5. சேவைகள் | 49,001 | 52,413 | 54,455 | 7.0 | 3.9 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 99,375 | 104,395 | 109,570 | 5.1 | 5.0 |
| 7. வெளிநாட்டிலிருந்து தேறியad காரணி வருமானம் | - 2,936 | - 2,996 | – 2,837 | – | – |
| 8. மொத்த தேசிய உற்பத்தி | 96,439 | 101,399 | 106,733 | 5.1 | 5.3 |

(அ) உத்தேசம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மொத்த, சில்லறை வர்த்தகத்தில் சேர்க்கப்பட்ட பெறுமதி வளர்ச்சி சென்ற வருடத்தை விடவும் குறைவாகவிருந்தது; ஏற்றுமதித் துறையின் எதிர்கணிய வளர்ச்சியே இதற்குக் காரணமாகும். இறக்குமதித் துறையின் வளர்ச்சி சென்ற வருடத்தை விடவும் சிறப்பாக விருந்தது. வங்கி, காப்புறுதி, மெய் ஆதனத் துறையின் சேர்க்கப்பட்ட பெறுமதி 9.9 சதவீத வளர்ச்சியைக் காட்டியது.

## செலவு மாதிரி

மொத்த உள்நாட்டுச் செலவின் விஸ்தரிப்பு விகிதாசாரம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது; 1985 இல் இது 10 சதவீத வளர்ச்சியைக் காட்டியது; 1984 இல் இது 16.4 சதவீதத்திலும், 1983 இல் 18.6 சதவீதத்திலும் வளர்ச்சியடைந்திருந்தது. 1985 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு ரூபா 17900 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற வருடத்தை விடவும் ரூபா 1630 கோடி அதிகமாகும். 1985 இல் தனியார் நுகர்வுச் செலவு 12320 கோடி ரூபாவாகவிருந்தது. இது 10.7 சதவீத அதிகரிப்பாகும். இதனுள் வெளிநாட்டுப் பொருட்கள், காரணி – அல்லாத சேவைகள் மீதான செலவு ரூபா 2700 கோடியாகும்; இது சென்ற வருடத்தை விடவும் 24.3 சதவீதம் அதிகமாகும். உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் .மீதான செலவு ரூபா 9620 கோடியாகும். இது சென்ற வருடத்தை விடவும் 7.4 சதவீதம் அதிகமாகும்.

மொத்த உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கம் 3.9 சதவீதத்தால் அதிகரித்தது; சென்ற வருடத்தில் இது 11.9 சதவீதமாகவிருந்தது. 1985 இல் இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டுப் பொருட்களின் மொத்தப் பெறுமதி 17.1 சதவீதத்தால் அதிகரித்தது; 1984 இல் இது 5.0 சதவீதமாகவிருந்தது. இவ் வருடத்தில், (கப்பல்கள், விமானங்கள் தவிர்ந்த) மூலதனப் பொருட்களின் இறக்குமதி 25.1 சதவீதத்தால் குறைவடைந்தது. 1985 இல் மொத்த உள்நாட்டு நிலைகான

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலதன உருவாக்கத்தின் இறக்குமதி உள்ளடக்கம் 23.1 சதவீதமாகும்; 1984 இல் இது 28.9 சதவீதமாகவிருந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டுப் பொருட்களின் உள்ளடக்கம் 1984 இல் 5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 1985 இல் இது குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மூலதனச் செலவில் இறக்குமதி உள்ளடக்கம் குறைவடைந்தமைக்குரிய பிரதான காரணம், மகாவலித் திட்டத்தின் ஆரம்ப வேலைகள் பூர்த்தியடைந்தமையாகும். மகாவலித் திட்ட வேலைகள் பூர்த்தியடைந்ததனால், மூலதனப் பொருட்களின் இறக்குமதி பெருமளவுக்கு குறைவடைந்தது.

**மூலவளங்களின் கிடைப்பும் பயன்பாடும்.**

1985 இல் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ரூபா 22130 கோடி பெறுமதியான மொத்த மூலவளங்கள் கிடைத்தன. இதில் ரூபா 15980 கோடி (72.2 சதவீதம்) உள்ளூர் மூலவளங்களிலிருந்தும், ரூபா 6150 கோடி (27.8 சதவீதம்) இறக்குமதிகளிலிருந்தும் கிடைத்தன.

மூலவளங்களில் 18.7 சதவீதம் மூலவள உருவாக்கத்துக்கும் 62.3 சதவீதம் நுகர்வுக்கும், 190 சதவீதம் ஏற்றுமதிகள், காரணி அல்லாத சேவைகள் என்பன மீதும் செலவிடப்பட்டன. 1984 ஆம் ஆண்டில் 19 சதவீதம் மூலதன உருவாக்கத்திற்கும், 59.5 சதவீதம் நுகர்வுக்கும், 21.4 சதவீதம் ஏற்றுமதி, காரணி சாராத சேவைகள் என்பவற்றுக்கும் செலவிடப்பட்டன.

1984 இல் ரூபா 3060 கோடியாகவிருந்த சேமிப்பு 1985 இல் ரூபா 2190 கோடியாக (28.3 சதவீதத்தால்) வீழ்ச்சியடைந்தது. 1983, 1984 ஆம் ஆண்டுகளில் சேமிப்பில் குறிப்பிடத்தக்க

அட்டவணை 2

மூலதனச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம் ரூ. பத்து லட்சம்

| வகை | 1983 | 1984 | 1985 |
|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 35,342 | 39,558 | 41,106 |
| 2. முதலீட்டுப் பொருள் இறக்குமதி | 10,900 | 11,443 | 9,488 |
| 3. கப்பல்கள், விமானங்கள் தவிர்ந்த முதலீட்டுப் பொருள் இறக்குமதி | 9,298 | 10,512 | 7,877 |
| 4. (1 ன் வீதமாக 2 ன்) இறக்குமதி உள்ளடக்கம் | 30.8 | 28.9 | 23.1 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி

அபிவிருத்தி காணப்பட்டது. 1984 இல் 19.9 சதவீதமாகவிருந்த சேமிப்பு 1985 இல் 13.7 சதவீதமாகவிருந்தது. தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானத்தையும், தனியார் பண மாற்றங்களையும் உள்ளடக்கிய மொத்தத் தேசிய சேமிப்பு 24.6 சதவீதத்தால் குறைவடைந்தது; 1985 இல் இதன் பெறுமதி ரூபா 2580 கோடியாகும். 1984 இல் 22.2 சதவீதமாகவிருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சேமிப்பு விகிதாசாரம், 1985 இல் 16.1 சதவீதமாகவிருந்தது.

**விவசாயம்**

1985 இல் தேயிலை உற்பத்தி 3 சதவீதத்தால் அதிகரித்தது. 1984 இல் கிடைத்த 2 கோடியே 87 லட்சம் கிலோ கிராம் உற்பத்தி அதிகரிப்பினைத் தொடர்ந்தே 1985 இல் 61 லட்சம் கிலோ கிராம் உற்பத்தி அதிகரிப்பு ஏற்பட்டது. இவ்விரு வருடங்களிலும் தொடர்ச்சியாக ஏற்பட்ட இந்த உற்பத்தி அதிகரிப்பின் விளைவாக, 1985 இல் 21 கோடி 41 லட்சம் கிலோ கிராம் உற்பத்தி செய்யப்பட்டது, 1971 இன் பின்னர் பெறப்பட்ட அதி உயர் உற்பத்தி இதுவாகும்.

சாதகமான காலநிலை, அதிகரித்த பசளைப் பிரயோகம் என்பவற்றின் விளைவே இந்த உற்பத்தி அதிகரிப்பாகும். இந்த உற்பத்தி அதிகரிப்பு பெரும்பாலும் தாழ் நிலத் தேயிலை உற்பத்தியிலேயே கிடைத்தது; தாழ் நிலத் தேயிலை உற்பத்தி ஏறக்குறைய 60 லட்சம் கிலோ கிராம்களால் அதிகரித்தது; மொத்த உற்பத்தி அதிகரிப்பில் இது 98 சதவீதமாகும். இடை நிலத் தேயிலை உற்பத்தி 6 லட்சம் கிலோ கிராம்களால் (அல்லது 1 சதவீதத்தால்) மாத்திரமே அதிகரித்தது. உயர் நிலத் தேயிலை உற்பத்தி 5 லட்சம் கிலோ கிராம்களால் (அல்லது 0.6 சதவீதத்தால்) வீழ்ச்சியடைந்தது.

இலங்கையின் தேயிலை உற்பத்தி வரலாற்றில் முதல் தட்வையாக மொத்தத் தேயிலை உற்பத்தியில் தாழ் நிலப் பிரதேசங்கள் அதிஉயர் பங்கினை வகித்தமை 1985 ஆம் ஆண்டின் தேயிலை உற்பத்தியில் ஒரு குறிப்பிடத்தக்க பண்பாகும். இப்பிராந்தியத்தில் தேயிலை உற்பத்தி நிலப் பரப்பு அதிகரித்ததனாலும், சிற்றுடைமையாளர்களின் சிறந்த பயிர்ச்செய்கை, பசளைப் பிரயோகம் என்பவற்றின் விளைவாகவும் இந்த உற்பத்தி அதிகரிப்பு பெறப்பட்டது. 1984 முழுவதிலும் 1985 இன் முற்பாகத்திலும் நிலவிய அதிகரித்த தேயிலை விலைகளே இதற்குக் காரணமாகும்.

1985 இல் தேயிலை உற்பத்தியின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிலப் பரப்பளவு 3,650 ஹெக்டயர்களால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. தாழ் நிலப் பிரதேசத்தில் தேயிலை நிலப் பரப்பளவு அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும். 1984 இல் கிடைத்த அதிகரித்த தேயிலை விலைகளின் விளைவாகவே விளையில் பரப்பளவு அதிகரித்தது.

1985 இல் ஒரு கிலோ கிராம் தயாரிக்கப்பட்ட தேயிலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சராசரி உற்பத்திச் செலவு ஏறக் குறைய ரூபா 35 ஆகவிருந்தது; இது 1984 ஆம் ஆண்டை விடவும் அதிகமாகும். சராசரி ஏற்றுமதி விலை 22 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்தது; 1984 இல் ஒரு கிலோ கிராமிற்கு ரூபா 77.20 ஆகவிருந்த இவ்விலை 1985 இல் ரூபா 60.31 ஆக வீழ்ச்சியடைந் தது. இப்போக்கினைத் தொடர்ந்து, தேறிய சராசரி விற்பனை 24 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது; இதன் விளைவாகச் சராசரி உற்பத்தி யாளர் இலாப எல்லை 97 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதாவது, 1984 இல் ஒரு கி. கி. ரூபா 12.45 ஆகவிருந்த இவ் வெல்லை, 1985 இல் ரூபா 0.39 ஆக வீழ்ச்சியடைந்தது.

தொடர்ச்சியான விலை வீழ்ச் சியை அனுபவித்த தேயிலை உற்பத்தியாளர்களுக்கு ஒரு உடன் நிவாரணமாக வரவு செலவுத் திட்டத்தில் ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டது. தொகைத் தேயிலை, பச்சைத் தேயிலை, அடைக்கப்பட்ட தேயிலை, உடனடித் தேயிலை என்பவற்றின் மீதான ஏற்றும தித் தீர்வைகள் ஒரு கிலோ கிரா மிற்கு இரண்டு ரூபாவினாலும் தேயிலைப் பைகளுக்கு ஒரு ரூபா வினாலும் குறைக்கப்பட்டது. இவை 1985 நவம்பர் 14 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந் தன. வரி விகிதாசாரம் 50 சத வீதமாக மாறாமலிருந்தது.

தேயிலை விலைகள் தற்போது இருப்பது போன்று குறைவா கவேவிருப்பின், உத்தேசிக்கப் பட்டுள்ள இடைக்கால முதலீ ட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்திச் செலவினத்திற்கு திரட்டுவதற்கு எதிர்பார்க்கப்படு கின்ற நிதியத்தை ஸ்தாபிக்க இரு பொதுத் துறைக் கூட்டுத் தாபனங்களுக்கும் இயலாதிருக் கும். இப்பின்னணியில், பொதுத் துறைக் கூட்டுத்தாபனங்கள் இரண்டும் பங்களிப்புச் செய்த வரி நிதியத்தைப் புத்துயிர்ப்பிப் பது தொடர்பாகக் கவனம் செலுத்துவது பயன்மிக்கதாகும் என அறிக்கை வலியுறுத்துகின் றது.

வருமானம், வேலைவாய்ப்பு, வெளிநாட்டுச் செலாவணிச் சம் பாத்தியம் என்பவற்றின் வடிவில் தேயிலைத் துறை எமது நாட்டின் பொருளாதாரத்திற்குச் செய் துள்ள பங்களிப்பினைக் கவனத் திற் கொள்ளுமிடத்து, இத்துறை க்கு உதவி பெறுவதற்குத் தகுதி உண்டு என மத்திய வங்கி கருத் துத் தெரிவித்தது. அளிக்கப்பட் டுள்ள வரிச் சலுகைகளுக்கு மேலாக, பொதுத் துறைத் தோட்டங்களுக்கான இடைக் கால முதலீட்டு நிகழ்ச்சித்திட் டம், 1985 இல் ஸ்தாபிக்கப் பட்ட ஸ்திரப்படுத்தல் நிதியம் என்பன தேயிலை உற்பத்தியாளர் களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக் கலாம். ஸ்திரப்படுத்தல் நிதியத் தின் கீழ் தனியார், பொதுத் துறை உற்பத்தியாளர்களுக்கு ஒரு உதவித்திட்டம் 1986 இல் ஏற்படுத்தப்படவுள்ளது. இத் திட்டங்களின் இலக்குகளை அடை வதனை உறுதிப்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் மேற் கொள்ளப்படல் வேண்டும்.

## இறப்பர்

1985 இல் இறப்பர் உற்பத்தி 13.8 கோடி கிலோ கிராம் என உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள் ளது. இது 1984 உற்பத்தியை விடவும் 3 சதவீதம் குறைவா கும். சென்ற வருடத்தில் போன்று, பொதுத் துறைத் தோட்டங்களிலேயே முழுமை யான உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட் டுள்ளது. தனியார் துறைத் தோட்டங்களில் உற்பத்தி மாற்ற மடையாமல் இருந்தது. 1984 இல் மொத்த உற்பத்தியில் 67 சதவீதமாகவிருந்த தனியார் துறையினரின் பங்கு 1985 இல் 70 சதவீதமாக அதிகரித்தது.

சிறிய தோட்டங்களின் உரி மையாளர்களும், சிறு பற்று நிலச் சொந்தக்காரர்களும் கூலி களைக் குறைவாக் வைத்திருந்த தன் மூலம் செலவு அதிகரிப்புக்க ளைக் கட்டுப்படுத்தினர். சிற்று டைமையாளர்களைப் பொறுத்த வரையிலும் உற்பத்திச் செலவு சிறிதளவே அதிகரித்தது. 1984 இல் ரூபா 10.28 ஆகவிருந்த ஒரு கி. கிராமிற்கான உற்பத்திச் செலவு 1985 இல் ரூபா 10.85 ஆக அதிகரித்தது. இதேவேளை, பெருந்தோட்டங்களின் உற்பத் திச் செலவு 19 சதவீதத்தால் அதிகரித்தது. 1984 இல் ரூபா 13.83 ஆகவிருந்த ஒரு கிலோ கிராமிற்கான உற்பத்திச் செலவு 1985 இல் ரூபா 16.48 ஆக அதி கரித்தது. பொதுத் துறையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திச் செலவு 1984 இல் ரூபா 14.00 இலிருந்து 1985 இல் ரூபா 15.58 ஆக அதிகரித்தது. இது 11 சத வீத அதிகரிப்பாகும். ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் செலவு 29 சதவீதத் தால் அதிகரித்தது; 1984 இல் ஒரு கி. கி. ரூபா 13.01 ஆக விருந்த உற்பத்திச் செலவு 1985 ல் ரூபா 16.72 ஆக அதி கரித்தது. சென்ற வருடம் பொதுத்துறை ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட சம்பள அதிகரிப் பின் விளைவாகவே பொதுத் துறைப் பெருந்தோட்டங்களின தும் பாரிய பெருந்தோட்டங்களி னதும் உற்பத்திச் செலவு அதிக ரித்தது. தனியார் துறையைச் சேர்ந்த பாரிய பெருந்தோட்டங் களால், பொதுத் துறையில் அளிக்கப்பட்ட வேதனத்தைச் செலுத்தாது ஊழியத்தைப் பெறுவது கடினமாக இருந்திருக் கலாம்; இதன் விளைவாக இவற் றின் உற்பத்திச் செலவு அதிக ரித்திருக்கலாம்.

எல்லா ரக இறப்பரினதும் ஏற்றுமதி விலைகளிலும் 18 சத வீத வீழ்ச்சி ஏற்பட்ட போதி லும், கொழும்புச் சந்தையில் ஆர். எஸ். எஸ். 1 ரக இறப்பரின் விலை 8 சதவீதத்தால் அதிகரித் தது. இவ்விலை அதிகரிப்பின் மூலம் சிற்றுடைமையாளர்கள் ஓரளவுக்கு நன்மை அடைந்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாம். எனினும், பொதுத் துறைத் தோட்டங்களினதும், தனியார் துறையைச் சேர்ந்த பாரிய தோட்டங்களினதும் உற்பத்திச் செலவு அதிகரிப்பினைச் சமாளிப்பதற்கு இது போதியதாக இருக்கவில்லை.

உற்பத்தி, ஏக்கருக்குரிய விளைச்சல், விளைநிலப் பரப்பளவு என்பவற்றைப் பொறுத்தவரையிலும் இறப்பர் சம நிலையை அடைந்தது எனலாம். விளைநிலப் பரப்பளவின் விஸ்தரிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது ஆகையால் எதிர்காலத்தில் உற்பத்தித் திறனின் அதிகரிப்பு, தாக்கமான மீள்நடுகை என்பவற்றிலேயே உற்பத்தி அதிகரிப்பு தங்கியுள்ளது. இதனை அடைவதற்கு உயர் விளைச்சல் இன மரங்களின் விஸ்தரிப்பு, சிறந்த பசளைப் பிரயோகம், சிறந்த விளைச்சல் முறை என்பன அவசியமாகும். எனினும், இறப்பர் சிற்றுடைமையாளர்களின் ஆதிக்கத்திற்குப் பட்டிருப்பதனால் இவர்களது குறைந்த வருமானம், சிறந்த உற்பத்தி முறைக்குத் தடையாகவுள்ளது.

சிற்றுடைமையாளர்களுக்குப் போதிய பதனிடல் வசதிகள் இல்லை. சில சமயங்களில் இறப்பரைப் பதனிடுவதற்கு நீண்ட தூரம் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. இவை செம்மையாகப் பதனிடப்படாததால் சந்தையில் குறைந்த விலைகளையே பெறுகின்றன. இது சிற்றுடைமையாளர்களின் நிலைமையை மேலும் மோசமாக்குகின்றது. ஆகையால் பொருளாதாரத்தின் ஒரு பிரதான துறையான இறப்பருக்குப் புத்துயிரளிப்பதற்கு ஊக்குவிப்பு முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும்.

**அட்டவணை 3**

**தேசிய சேமிப்பு 1983-1985 (நடைமுறை) சந்தை விலைகளில்**

| வகை | 1983(அ) | 1984(அ) | 1985(அ) |
|---|---|---|---|
| 1. மொ. உ. உ. சந்தை விலைகளில் | 121,601 | 153,746 | 159,787 |
| 2. உள்நாட்டுச் சேமிப்பு | 16,767 | 30,576 | 21,915 |
| 3. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் | -3,214 | -3,401 | -3,410 |
| 4. தேறிய தனியார் மாற்றங்கள் | 6,441 | 7,031 | 7,298 |
| 5. தேசிய சேமிப்பு | 19,994 | 34,206 | 25,803 |
| 6. மொ. உ. உ. யில் உள்நாட்டுச் சேமிப்பின் வீதம் | 13.8 | 19.9 | 13.7 |
| 7. மொ. உ. உ.யில் தேசிய சேமிப்பின் வீதம் | 16.4 | 22.2 | 16.1 |

(அ) உத்தேசம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### தென்னை

1985 இல் தென்னை உற்பத்தி 295.8 கோடி காய்களாகும். இது சென்ற வருடத்தை விடவும் 52 சதவீதம் அதிகமாகும். இத்துடன் 1972 இன் பின்னர் பெற்ற அதி உயர் உற்பத்தியும் இதுவாகும். சாதகமான காலநிலையும் பசளைப் பிரயோகமும் இந்த அபரிமிதமான உற்பத்தி அதிகரிப்பிற்குக் காரணமாக விளங்கின. சென்ற வருடம் பூராகவும் பிரதான தென்னை உற்பத்திப் பிரதேசம் சிறந்த மழைவீழ்ச்சியைப் பெற்றது. மேலும், கடந்த சில வருடங்களாகச் சிறந்த பசளைப் பிரயோகமும் இடம்பெற்றது. 1985 இன் இரண்டாம் அரைப் பகுதியில் அதிகரித்த உற்பத்தி அவதானிக்கப்பட்டது; குறிப்பாக செப்டம்பர் - அக்ரோபர் கால கட்டத்தில் இது இடம் பெற்றது.

இந்த உற்பத்தி அதிகரிப்பின் விளைவாகத் தேங்காய் எண்ணெய் உற்பத்தி மூன்று மடங்காக அதிகரித்தது. தேங்காய் துருவல் உற்பத்தி 64 சதவீதத்தால் அதிகரித்தது. 1985 இல் கொப்பரா உற்பத்தி மூன்று மடங்கிற்கு மேலாகவும், தேங்காய் ஏற்றுமதி இரு மடங்கிற்கு மேலாகவும் அதிகரித்தது. பெருந்தொகையாகவும், குறைந்த விலையிலும் தேங்காய் கிடைத்ததனால், பதனிடலுக்குப் பெருந்தொகையான தேங்காய்கள் கிடைத்ததுடன், தென்னை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியும் அதிகரித்தது. சில தெங்குப் பொருட்களின் மீது விதிக்கப்பட்டிருந்த ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டதனாலும் ஏற்றுமதி அதிகரித்தது. இதன் விளைவாக, 1985 இல் கொப்பரா, தேங்காய் என்பவற்றுக்கு உலக சந்தையில் கவர்ச்சிகரமான விலைகள் கிடைக்காத போதிலும், இவற்றின் ஏற்றுமதி அதிகரித்தது.

தென்னை ஏற்றுமதிக்கு அளிக்கப்பட்ட பல்வேறு சலுகைகளுக்கு மத்தியில், வீழ்ச்சியடைந்து வந்த விலைகளினால் தென்னை உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டனர். கொழும்புச் சந்தையில் ரூபா 2.18 ஆகவிருந்த தேங்காயின் விலை சென்ற வருடம் அரைவாசியாகக் குறைந்தது. சந்தையில் பொருள் பெருந்தொகையாகச் சேர்ந்தால் உற்பத்தியாளர்களின் கதி எவ்வாறு இருக்கும் என்பதனை 1985 அனுபவம் காட்டுகின்றது. குறைந்த தேங்காய் விலைகளின் மூலம் பயனடைந்த பதனிடல் துறையிடம் பெருந்தொகையான தேங்காய்கள் கையிருப்பில் இருந்தன; சில சந்தர்ப்பங்களில் தேங்காய்களைக் கொள்வனவு செய்வதற்கு இவர்களுக்கு நிதி உதவி அளிக்க வேண்டியிருந்தது. தேங்காய் விலைகள் வீழ்ச்சி அடைகையில் இடம்பெறுகின்ற குறைந்த பசளைப் பிரயோகம் எதிர்காலத்தில் நுகர்வோரைப் பாதிக்கலாம். ஆகையால் தேங்காய் உறுதிப்படுத்தல் நிதியம் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் நன்மை அளிப்பதாகும்.

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

சிறு ஏற்றுமதிப் பயிர்கள், பெரும்பாலும் வீட்டுத் தோட்டங்களில் காப்புப் பயிர்களாக விளைவிக்கப்படுகின்றன. ஆகையால் உற்பத்தி, உற்பத்தி நிலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பு தொடர்பான புள்ளிவிப ரங்கள் மிகக் குறைவாகும். ஆகையால், இத்துறைபற்றி ஒரு நேரடியான மதிப்பீட்டினை அளிப்பது கடினமாகும். இவற்றுள் பெருமளவு ஏற்றுமதி செய்யப்படுவதனுல், ஏற்றுமதி தொடர்பான புள்ளி விபரங்கள் இதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன.

இப் புள்ளி விபரங்களின்படி 1985 இல் கோப்பி, ஏலம், எள்ளு, கொக்கோ என்பன தவிர்ந்த ஏனைய பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தன. மிளகு, கராம்பு, பாக்கு, வெற்றிலை, சாதிக்காய், எண்ணெய் வகைகள் என்பவற்றின் உற்பத்தி குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மரக்கறி, பழ வகைகள் என்பவற்றின் ஏற்றுமதி அளவும் குறைவடைந்தது. கறுவா உற்பத்தியும் ஓரளவிற்கு வீழ்ச்சியடைந்தது. ஏனைய எண்ணெய் விதைகளின் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தது. எனினும், இவற்றுக்கான உள்ளூர்க் கேள்வி சிறப்பாகவிருந்தது.

எள்ளு உற்பத்தி மூன்று மடங்காகவும் கொக்கோ, ஏலம் என்பவற்றின் உற்பத்தி இரு மடங்காகவும் அதிகரித்தன. கோப்பி உற்பத்தி ஏறக்குறைய 43 சதவீதத்தால் அதிகரித்தது.

**சென்மதி நிலுவை**

1985 இல் இலங்கையின் சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கின் அடிப்படையிலும், மொத்த ரீதியான நிலுவையின் அடிப்படையிலும் குறிப்பிடத்தக்க அளவு மோசமடைந்துள்ளது. பண்டப் பொருட்கள், சேவைகள் கணக்கு இடைவெளி விரிவடைந்தது; தேறிய தனியார் மாற்றல்கள் எல்லாரீதியில் குறைவடைந்தன; உத்தியோக பூர்வ மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்தன. 1984 இல் ரூபா 140 கோடியாகவிருந்த (எஸ். டி. ஆர் 5.1 கோடி) நடைமுறைக் கணக்குப் பற்றுக் குறை, 1986 இல் ரூபா 1153.2 கோடியாக அதிகரித்தது. 1984 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.8 சதவீதமாக இருந்த இது 1985 இல் 7.2 சதவீதமாக அதிகரித்தது. 1984 இல் ரூபா 655.4 கோடியகாவிருந்த (எஸ். டி. ஆர். 24.9 கோடி) உத்தியோக பூர்வ மாற்றல்கள் தவிர்ந்த நடைமுறைக் கணக்கு நிலுவை 1985 இல் ரூபா 1552.8 கோடியாக (எஸ். டி. ஆர். 55.9 கோடி) அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதன் விகிதாசாரம் 4.2 சதவீதத்திலிருந்து 9.6 சதவீதமாக அதிகரித்தது.

முதல் தரப் பண்ட விலைகளின் வீழ்ச்சி, பாரம்பரியமற்ற விவசாய ஏற்றுமதிகளின் மோசமான செயற்றிறன், இறக்குமதி அளவில் அதிகரிப்பு என்பவற்றின் விளைவாக 1985ன் வர்த்தகப் பற்றுக்குறை பாரியதாக இருந்தது. 1985 இல் பண்டக் கணக்குப் பற்றுக்குறை ரூபா 1932.8 கோடியாக (எஸ். டி. ஆர். 69.7 கோடி) விருந்தது; 1984 இல் இது ரூபா 1185 கோடியாக (எஸ். டி. ஆர். 45.3 கோடி) விருந்தது. ஏற்றுமதிகள் எஸ். டி. ஆர். வடிவில் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன; அதே வேளை, இறக்குமதிகள் 5.3 சதவீதத்தால் அதிகரித்தன.

1984 இல் ரூ. 3719.8 கோடியாகவிருந்த (எஸ். டி. ஆர். 142.7 கோடி) பண்ட ஏற்றுமதி வருமானம் 1985 இல் ரூபா 3538.2 கோடியாக (எஸ். டி. ஆர். 128.4 கோடி) வீழ்ச்சியடைந்நது. 1985 இல் பிரதானமான மூன்று பெருந்தோட்டப் பொருட்களின் ஏற்றுமதி ரூபா 366.7 கோடியால் வீழ்ச்சியடைந்தமை இதற்குக் காரணமாகும்; எஸ். டி. ஆர். வடிவில் இவ்வீழ்ச்சி 22 சதவீதமாகும். சிறு ஏற்றுமதிப் பொருட்கள் ஏற்றுமதி மூலமான வருமானம் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது; ஏற்றுமதி அளவு, விலை என்பவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குக் காரணமாகும். 1977 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து வந்த புடைவைகள், தயாரித்த ஆடைகள் ஏற்றுமதி 1985 இல் 1.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பெற்றோலியப் பொருட்களின் ஏற்றுமதி 11.1 சதவீதத்தால் அதிகரித்தது. கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதி 4.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்களின் மூலமான வருமானம் 7.2 சதவீதத்தால் அதிகரித்தது.

1984 இல் ரூபா 4904.8 கோடியாகவிருந்த (எஸ். டி. ஆர். 188 கோடி) பண்ட இறக்குமதிச் செலவு 1985 இல் ரூபா 5471 கோடியாக அதிகரித்தது. (எஸ். டி. ஆர். 198.1 கோடி) நுகர்வுப் பொருட்கள், நடுத்தரப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதி அதிகரித்த அதே வேளை, முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதி வீழ்ச்சியடைந்தது. அரிசி, சீனி, கோதுமை என்பன கூடுதலாக இறக்குமதி செய்யப்பட்டதனுல, உணவுப் பொருட்கள் மீதான செலவு அதிகரித்தது. அதிகரித்த பசளை இறக்குமதி இடைத்தரப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதிக்குப் பிரதான காரணமாகவிருந்தது.

இவ்வருடத்தில் சேவைகள் கணக்குப் பற்றுக்குறை எஸ். டி. ஆர். வடிவில் இரு மடங்காகியது. இப்பற்றுக்குறை ரூபா 349.8 கோடி (எஸ். டி. ஆர். 12.7 கோடி) என மதிப்பிடப்பட்டுள்ளது. 1984 இல் இது ரூபா 173.5 கோடியாக (எஸ். டி. ஆர் 6.6 கோடி) விருந்தது. துறைமுகம், காப்புறுதி, போக்குவரத்து என்பவற்றுக்குக் கூடுதலான தேறிய வெளிநாட்டுச் செலாவணி வெளிப் பாய்ச்சல், சுற்றுலாத் துறையிலிருந்து தேறிய வெளிநாட்டுச் செலாவணி வீழ்ச்சி, ஏனைய சேவைகளுக்காகக் கூடுதலான தேறிய வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல் என்பன சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கணக்குப் பற்றுக்குறையின் அதிகரித்த இடைவெளிக்குக் காரணமாக விருந்தன.

1984 இல் சுற்றுலாத் துறை யிலிருந்து பெற்ற வருமானம் ரூபா 258.7 கோடியிலிருந்து (எஸ்.டி.ஆர். 9.9 கோடி) 1985 இல் ரூபா 219.7 கோடியாக (எஸ்.டி.ஆர். 8 கோடி) வீழ்ச்சிய டைந்தது. ச. நா. நிதியிலிரு ந்து பெற்றவை உட்பட வெளி நாட்டுக் கடன்களுக்கான வட்டிச் செலுத்தல்கள் இவ்விரு வருடத் திலும் ரூபா 458.8 கோடியிலி ருந்து. (எஸ்.டி.ஆர். 17.6 கோடி) ரூபா 538.8 கோடியாக (எஸ்.டி. ஆர். 19.6 கோடி) அதிகரித்தது. 1984 இல் ரூபா 147.8 கோடியாக விருந்த வட்டி உழைப்புக்கள், 1985 இல் ரூபா 225.6 கோடி யாக அதிகரித்தன. தேறிய வெளிப் பாய்ச்சல் 1984 ஆம் ஆண்டை விடவும் எல்லா ரீதியா கக் குறைவாகவிருந்த போதி லும், வட்டிச் செலுத்தல்கள், சேவைகள் கணக்கில் பாரிய செலவு தொடர்ந்து இருந்து வந் தது.

1985 இல் சேவைகள் கணக் கின் ஊடான தேறிய வெளிநாட் டுச் செலாவணி வெளிப் பாய்ச் சல், நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறையில் 30 சதவீதமாக விருந்தது.

தனியார் பண அனுப்பீடுகள் மூலமான வெளிநாட்டுச் செலா வணி உட்பாய்ச்சல் ரூபா வடிவில் வீழ்ச்சியடைந்தது. 1984 இல் இவ்வருமானம் ரூபா 765.3 கோடியாக (எஸ். டி. ஆர். 29.4 கோடி) விருந்தது; 1985 இல் இது ரூபா 802.0 கோடியாக (எஸ். டி. ஆர். 29.1 கோடி) விருந்தது. 1985 இல் தனியார் மாற்றல்கள் மூலமான கிடைப் பனவுகள் 2 சதவீதத்தால் வீழ்ச் சியடைந்தன; இக்கிடைப்பன வுகள் ரூபா 729.8 கோடியாக (எஸ். டி. ஆர். 26.5 கோடியாக) விருந்தன. இவ்வருடத்திற்குரிய சென்மதி நிலுவையின் நடை முறைக் கணக்கில் தனியார் பண அனுப்பீடுகள் தேயிலைக்கு அடுத்த இடத்தைப் பெற்றன.

1984 இல் ரூபா 515.4 கோடி யாகவிருந்த (எஸ். டி. ஆர். 19.8 கோடி) செய்திட்ட, பண்ட உதவிகளை உள்ளடக்கிய உத்தி யோகபூர்வ மாற்றல்கள் 1985 இல் ரூபா 399.6 கோடியாக (எஸ். டி. ஆர். 14.2 கோடி) விருந்தன. 1984 இல் ரூபா 270.1 கோடியாக (எஸ். டி. ஆர். 10.4 கோடியாக) இருந்த செய் திட்ட உதவிகள் 1985 இல் ரூபா 262.0 கோடியாக (எஸ். டி. ஆர். 9.4 கோடியாக) குறைவடைந் தன; எஸ். டி. ஆர். வடிவில் இது 9.6 சதவீத வீழ்ச்சியாகும்.

(அடுத்த இதழில் முடியும்)

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

(எ) பதப்படுத்தல் உத்திகள் சம்பந்தமாகத் தொழில் நுட்பத் தேர்ச்சிகளுக்கு இருந்துவரும் தட்டுப்பாடு.

(ஏ) ஊக்கிகள், சந்தைகள், வாய்ப்புகள், மாற்றுத் தொழில்நுட்ப உத்திகள் முதலியன பற்றிய தக வல்களில்லாமை.

(ஐ) உல்லாசப் பயணத்துறை முதலியன போன்ற ஏனைய வரிப்பாதுகாப்பு உள்ள துறைகளிலிருந்து தொழில் முயற்சியாளர்களை ஈர்க்க, விவசாயக் கைத்தொழில் கள் போன்ற அதிக அபாய முள்ள துறைகளுக்கு வேறு பட்ட ஊக்கிகளின்மை.

(ஒ) விலை ஆதரவுத் திட்டங் களின்மை உட்படச் சந்தைப் படுத்தலுக்கும் விநியோகத் துக்கும் போதிய அமைப்பு களில்லாமை.

(ஒள) ஆசிய நாடுகளிலிருந்து கிடைக்கும் குறைந்த செல விலான தொழில்நுட்ப உத்திகள் கிடைக்காத போது, அதிக செலவிலான தொழில்நுட்ப உத்திகளைச் சார்ந்திருப்பது.

(ஃ) முதலீடு செய்வதற்கு மென் கடன் வசதிகளில்லாமை;

(அ1) விவசாயக் கைத்தொழில் முதலீடுகள் சம்பந்தமாகத் தகுந்த கொள்கை நிபந் தனைகளில்லாமை.

(அ2) இத்துறையில் முதலீடு செய்யக் கூடியவர்களுக்கு நடைமுறைகள் நிர்வாக விதிகள் சம்பந்தமாக இருந்துவரும் சிக்கல்கள். அத்துடன் இத்துறையைப் பொறுத்த விவகாரங் களைக் கவனிக்க, உத்தி யோகபூர்வமான முகவர கங்கள் பெருந்தொகை யாக இருத்தல்.

(அ3) விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தி எந்தத் தனி யொரு அமைச்சின் பொறுப்பாகவும் இருந்து வராத நிலை. விவசாய அமைச்சு உற்பத்தியிலும் ஆராய்ச்சியிலும் முழுக் கவனம் செலுத்துகிறது. மற்றும் அமைச்சுக்கள் பயிர்ச் செய்கை, பதப் படுத்தல், வர்த்தகம் ஆகியவற்றின் குறித்த அம் சங்களை மட்டுமே கவனித்து வருதல். ஏஜென்ஸி நிலையங்களும் பெருந் தோட்டங்களும் குடியேற்ற நாடுக் கால உற்பத்தி முறைகளிலும் முழுக்கவனஞ் செலுத்திக் கொண்டு, எந்தக் குறிப் பிடத்தக்க புதுமாறுதல் களும் தேவைப்படாத கைத்தொழில் நிலையங் களின் தேவைகளைப் பூர்த்திசெய்து வரு கின்றன. இதனால் இத் துறையை அபிவிருத்தி செய்வதன் பிரதம குறிக் கோள்கள் எப்பொழுதும் பார்வையிலிருந்து புறக் கணிக்கப்பட்டே வந்துள் ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்தும் அபிவிருத்தியும்

## சுற்றுடல் பாதுகாப்பு

கலாநிதி (திருமதி) பி. சி. எச். ரணசிங்க

போக்குவரத்து, உரிய முறையில் பயன்படுத்துமிடத்து, அதனை தேசியக் கொள்கையின் குறிக்கோள்களை அடைவதற்கான ஒரு சாதனமாகக் கொள்வது தவருகாது. சமநிலையான தேசிய வளர்ச்சிக்கு நீண்டதூரங்கள் தடையாக அமையுமிடத்து இவ்வாறு சிந்தித்தல் மிகப் பொருந்துவதாகும். ஒரு நாடு பிரிந்து பிளவுபடாமல் ஒட்டியிணைந்திருக்க வேண்டுமானுல், தொலைதூரத்தில் வாழும் மக்களிடம் பொருட்கள் கொண்டு செல்லப்படல் வேண்டும். மக்களும் அவ்விடங்களுக்குச் செல்ல வேண்டும். வளங்களையோ கைத்தொழில்களையோ, ஒரு பிராந்தியத்தையே அபிவிருத்தி செய்வதற்கான கொள்கையை எதிர்காலத்தில் செயற்படுத்தும் போது தூரங்களைக் கடப்பதற்கான செலவு நாட்டுமக்களின் தலையில் சுமத்தப்படும் ஒரு பெரும் பளுவாகக் கருதப்படலாம்.

ஒரு பொருளாதாரம் செயல்படுவதற்குப் போக்குவரத்து அவசியமாகும். பொருளாதாரம் வளரும்போது தனிச்சிறப்புடைய உற்பத்தித்துறைகளின் உற்பத்தி பெருகும்; அதற்கேற்ப அதிக போக்குவரத்தும் தேவைப்படும். எனினும், போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதனுல் மட்டும் பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது. இருப்பினும் பொருத்தமான சூழலில் அது இல்லாதிருப்பதும் ஒரு குறைபாடாகும். எனவே, பொருளாதாரத்தின் பிற துறைகளையும் கவனத்திற்கொண்டே போக்குவரத்தில் முதலீடு செய்வது பற்றிய தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆதலால் போக்குவரத்தைத் திட்டமிடுதல் தொடர்பான தீர்மானங்கள் செய்கையில் கவனஞ் செலுத்த வேண்டிய சில முக்கிய அம்சங்களுண்டு. இவற்றில் பின்வருவனவும் அடங்கும்:-

1. போக்குவரத்துத் திட்டங்கள் பொதுப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்துடன் நேரடியாகத் தொடர்புபடுத்திப் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். குறிப்பாக, போக்குவரத்துகுரிய முதலீட்டின் கவர்ச்சி பற்றித் தீர்மானிப்பதற்கு, முதலீட்டு நிதிகளின் மாற்று உபயோகங்கள் பற்றி ஆராய்தல் வேண்டும்.

2. எல்லாவகைப் போக்குவரத்துக்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய ஒரு முழு முறைமையாகக் கொள்ளப்படுதல் வேண்டும். புதிய திட்டங்களை மதிப்பீடு செய்கையில் ஒவ்வொருவகைப் போக்குவரத்தினதும் எல்லாக் கட்டங்களும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

3. நேரடிச் செலவுகள் இருப்பினும் அல்லது பிற துறைகளுக்குப் பயன் இருப்பினும் பிற துறைகள் மீது போக்குவரத்துத் திட்டங்களின் தாக்கம் மதிப்பிடப்படல் வேண்டும்.

4. விரிவான பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில், பல்வேறு போக்குவரத்து விலையிடல் கொள்கைகளை மதிப்பீடு செய்வதற்கு ஓர் அடிப்படை இருத்தல் வேண்டும்.

5. குடிசன வளர்ச்சி, வெளிநாட்டு வர்த்தகம் அல்லது காலநிலை போன்ற தனித் தனித் துறைகள் மீது போக்குவரத்து ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு முயற்சி செய்யப்படுதல் வேண்டும்.

6. போக்குவரத்து வசதிகள், நகர்ப்புற அபிவிருத்தியுடன் இயைபு படுத்தப்படுதல் வேண்டும். போக்குவரத்தானது, அபிவிருத்திக்கு ஊக்கமளித்து, பயணத்தை விருத்தி செய்து சூழலுக்கு மெருகூட்டும் ஒரு காரணியாகக் கருதப்பட வேண்டும்.

### சூழல் பாதுகாப்பு தொடர்பான அம்சங்கள்

போக்குவரத்துக்கும் காணி உபயோகத்துக்குமிடையே பரஸ்பர தொடர்புண்டு. காணிநிலம் அபிவிருத்தியடைந்த நாடுகளிலும், அபிவிருத்தி அடையும் நாடுகளிலும் அரியதொரு வளமாகும். இலங்கையில் குறிப்பாக நகர்ப்புறங்களில் நிலம் கிடைத்தற்கரிய வளமாக விளங்குகிறது. போக்குவரத்து முறைமைகளை விரிவாக்கவும் விருத்தி செய்யவும் இடவசதி அவசியம். மார்க்க இடம் (பாதைகள், கால்வாய்கள், புகையிரதப் பாதைகள், குழாய்த் தொடர்கள்) முடிவிட வசதிகள் (விமானத்தளங்கள், புகையிரத நிலையங்கள், பஸ் நிலையங்கள், டிப்போக்கள், துறைமுகங்கள், கொள்களத்துறைகள்) என்பவற்றுக்கு இடவசதி தேவை. குறிப்பாக நகர்ப்புறங்களில் இவற்றுக்கான இட வசதி பூங்காக்கள். திறந்த வெளிகள், வீடமைப்பு, வியாபாரத்தலங்கள் என்புவற்றிற்கான இடவசதிகளைக் குறைப்பதன் மூலமே பெறப்படுகிறது.

குடிசனப் பெருக்கமும் நகர்மயமாக்கலும் பாதைகளைப் படிப்படியாக அகலமாக்க வேண்டிய தேவையை ஏற்படுத்துகின்றன. அத்துடன் போக்குவரத்து முடிவிடங்களையும் அவசியமாக்குகின்றன. அதேவேளை குடிசனம் பெருகும் போது உணவுத் தேவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கிறது. நாட்டுப் புறங்களில் பயனுள்ள விவசாயக் காணிகள் போக்குவரத்துப் பாதைகளுக்கு உபயோகிக்கப்படலாம். முன்னர் பாதைகளுக்காக உபயோகிக்கப்பட்ட நிலம் பாதைகளை அழித்து விவசாயத் தேவைகளுக்காகத் திருப்பிக்கொடுக்கப்பட்டதாக வரலாறு இல்லை. எனவே, காணித் தேவையில் தகராறு இருப்பதைக் காண்கிறோம். எனவே இப்பிரச்சினையைத் தவிர்க்கக் கூடிய அல்லது தாமதப்படுத்தக் கூடிய போக்குவரத்து மாற்று வழிகள் பற்றி நாம் ஆராயலாம். பாதை உரிமைக்குத் தேவையான இடம் அருகிவருவது நியாயமானதே. எனவே சூழல் பாதுகாப்பைப் பொறுத்தமட்டில் போக்குவரத்துக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தைப் பயன்படுத்துவது அர்த்தமுள்ளதாகும். எனவே இப்பொழுதுள்ள புகையிரதப்பாதைகள், வாய்க்கால்கள் பாதைகள் மிகக்கூடிய அளவுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இவற்றைக் கைவிடுவதனுல் பிறதுறைகள் பயனடைந்தாலன்றி இவை கைவிடப் படலாகாது.

உதாரணமாக இடத்தையும் சக்தியையும் பொறுத்தவரை புகையிரதம் சிக்கனமானது; இயந்திரத் தேய்வும் குறைவு. வாய்க்கால்கள் சக்தியிலும், தேய்விலும் செலவுக்குறைவானவையாகும்.

கீழ்க்கண்ட அட்டவணை பல்வேறு வகைப் போக்குவரத்து வாகனங்களில் இடச் சிக்கனத்தைக் காட்டுகிறது. அது பொது போக்குவரத்துச் சாதனங்கள் தனியார் சாதனங்களை விடத் திறமை வாய்ந்தவை என்பதைக் காட்டுகிறது. இடவசதியைப் பொறுத்தளவில் புகையிரதம், பஸ்ஸை விடத்திறமையானது

உலகெங்கணும் சூழல் பாதுகாப்பிலும், அபிவிருத்தியிலும் அக்கறை கொண்டனுர்கள் நகர்ப்புறங்களிலுள்ள இடத்தை சிக்கனமாகவும், சுத்தமாகவும் உபயோகிப்பவர்களுக்குக் கொடுப்பதுபற்றிக் கவலை கொண்டுள்ளனர். உதாரணமாக சிங்கப்பூர், நியுயோர்க் போன்ற நகரங்கள் மோட்டர் கார்கள் உபயோகிப்பதை மட்டுப்படுத்தியுள்ளன. ஆதலால் நவீன நகர அமைப்புத் திட்டமிடுவோர், பாதைகளை அகலமாக்கி, போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கையைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகளில் மட்டுமன்றி அபிவிருத்தியடையும் நாடுகளிலும் நிலை இதுவே. மாருக, திட்டமிடுவோர் வாகன ஓட்டத்தைக் குறைத்து, இடத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் பொது வாகனங்களுக்கு முக்கியத்துவமளிக்க நாடுகின்றனர்.

எனவே சூழல் பாதுகாப்புக்கான எதிர்கால உபாயம் இயன்றளவு தனியார் வாகனங்கள் உபயோகிக்கப்படுவதைக் குறைத்து பெறுமதி வாய்ந்த இடத்தைச் சேமிக்கும் பொருட்டு திறமையான பொதுப்போக்குவரத்து முறைகளை அறிமுகப்படுத்துவதாகும். அத்தகைய பொறுப் போக்குவரத்து அமைப்புகள் தனியார் துறைக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமா அல்லது அரசாங்கத் துறைக்குரியதாக இருக்க வேண்டுமா என்பது இவ்விடயத்துக்கு ஏற்புடையதன்று.

**நிர்மாணத்திலும் பராமரிப்பிலும் பொருட்களின் உபயோகம்**

இங்கு, வாய்க்கால்களே அநுகூலமானவை. ஏனெனில் தண்ணீரை உயர் மட்டங்களுக்குச் செலுத்துவது உட்பட தண்ணீருக்கான செலவும் வாய்க்கால் கரைகளைப் பராமரிப்பதற்கான செலவும் குறைவானதாகும். புகையிரதப்பாதைகள் அமைப்பதற்கு அதிக செலவாகும். ஆனுல், தொடர்ந்து பேணப்பட்டால் பொருட்செலவு குறைவாகும். பெருந்தெருக்களின் அமைத்தலுக்கான செலவு, அவசியமான மண்ணிரப்பலின் அளவையும் கருங்கற்கள் கொண்டு செல்ல வேண்டிய தூரத்தையும் பொறுத்து குறிப்பிடத்தக்க வகையில் வேறுபடும். அதன் பின்னர், பெருந்தெருக்களைப் பேணல் பெருமளவில் வாகனங்கள, பொருட்களின் எடையையும் காலநிலையையும் பொறுத்ததுமாகும்.

| வாகனம் | கலன் ஒன்றுக்கு பிரயாணி மைல்கள் |
|---|---|
| பஸ் | 284 - 433 |
| புகையிரதம் | 216 - 352 |
| கார் | 46 - 50 |

ஏற்கனவே இடம் ஒதுக்கப்பட்டு, நிர்மாணச் செலவு இறுக்கப்பட்டிருந்தாலும் எவ்வகைப் போக்குவரத்தினதும் விஸ்தரிப்பு, பராமரிப்பு, விருத்தி என்பன, அதன் நீண்டகால தொழிற்பாடு, பராமரிப்பு என்பவற்றுடன் தொடர்பு படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏற்கனவேயுள்ள எவ்வகைப் போக்குவரத்து வசதியையும் அல்லது பாதைகளையும், எல்லாத் தகவல்கள், புள்ளி விபரங்களையும் சமூக, பொருளாதார செலவுகள், பயன்களையும் ஆராயாமல் விரிவுபடுத்தவோ, விஸ்தரிக்கவோ கூடாது.

இலங்கையின் நகர்ப்புறப் பெருந்தெருக்களையும், நகர்களுக்கிடையிலான பெருந் தெருக்களையும், அகலமாக்கி, தரமுயர்த்துவதை தனியார் வாகனங்களுக்குப் பதில் பொதுவாகனங்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலம் மட்டுப்படுத்தலாம். முதலாவதாக இப்போதுள்ள பொதுப் பெருந்தெருக்கள் பொதுப் போக்குவரத்து வாகனங்களின் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் பொது இடங்கள் சிக்கனமாகப் பயன்படுத்தப்படலாம். அத்துடன் அரிதான பொதுவளங்களைக் குறைந்த அளவில் முதலீடு செய்யலாம்.

வலு

இலங்கையில் பல்வேறு வகைப் போக்குவரத்துச் சாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னங்களுக்காக பயன்படுத்தப் படும் வலு நுகர்வின் பொருளாதார அம்சம்பற்றி விரிவான ஆய்வு எதுவும் மேற்கொள்ளப் படவில்லை. பிறிடறிக் - ஈபற் - ஸரிப்ரங் ஆய்வு (1982) பின்வரும் புள்ளிவிபரங்களைத் தருகிறது.

| ஓரடி அகலம்-ஒருமணிநேரத்திற்கு | வேகம்-மணிக்கு மைல்கள் | ஆட்கள் |
|---|---|---|
| நகர்ப்புற புகையிரதம் | 30 | 1,700 |
| நகர வீதியில் 30 பிரயாணி பஸ் | 7 | 550 |
| ஓட்டுநகருடன் கார் | 10 | 55 |

அனேகமாக உலகின் எப்பகுதியிலும் நகர்ப்புற இடமும், அமைக்கப்பட்ட பாதைகளும் அரியதொரு வளமாகும். எண்ணெய் உற்பத்தி நாடுகளைத் தவிர பிறநாடுகளில் பெற்ரோலியத்தை அடிப்புடையாகக் கொண்ட வலுவும் அருமையானதொரு வளமாகும். உலக எண்ணெய் வளம் 50 - 60 ஆண்டுகளில் முடிவடைந்துவிடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு தொன் பொருட்களை பாதை வழியாகக் கொண்டு செல்லத் தேவைப்படும் எண்ணெயைக் கொண்டு அதுபோன்று நான்கு மடங்கு பொருட்களை புகைவண்டி அல்லது தண்ணீர் வழியாகக் கொண்டு செல்லலாம் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பிரயாணிகள் போச்குவரத்தைப் பொறுத்தவரை, பஸ் வண்டியில் அல்லது புகையிரதத்தில் பயணம் செய்பவர் ஒருவரை விட தனிப்பட்ட காரில் செய்பவர் 10 மடங்கு அதிக எண்ணெயை நுகர்கின்ருர்.

இலங்கையில் போக்குவரத்துத் துறைக்கே பிரதானமாக எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. தற்போதைய போக்குவரத்து வகைக்கள் எவ்வளவு தூரம் சிக்கனமானவை என்பதையே நாம் ஆராய வேண்டும்.

பின்வரும் காரணங்களுக்காகப் பொருத்தமான மாற்று போக்குவரத்து வகைகள் பற்றியும் சக்தி மாற்று மூலங்கள் பற்றியும் ஆராய்தல் ஏற்புடைத்தாகும்: எரிபொருள் தட்டுப்பாடு, எரிபொருள் விலைஏற்றம், பெட்ரோலிய இறக்குமதியில் அதிகமாகத் தங்கியிருத்தல், சென்மதி நிலுவைப் பற்ருக்குறைகள், வெளிநாட்டுச் செலாவணி பற்ருமை, நகர்ப்புற நெருக்கடி, சத்தமும் காற்றுத்தூய்மைக் கேடும், விபத்துக்கள் அதிகரிப்பு, தற்போதைய பாதைகளை அகலமாக்கிப் பேணுவதற்குப் போதிய நிதியின்மை. பின்வரும் அட்டவணை, ஒரு வழக்கமான வேலை நாளில் காலை 6 மணி முதல் மாலை 7 மணிவரை கொழும்பு நகருக்குள் வரும், வெளியே செல்லும் வாகனங்களதும் பயணிகளதும் சராசரி எண்ணிக்கையைக் காட்டுகிறது. (இங்கு அனுமானிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை இ. போ. ச. பஸ் 75 பேர். தனியார் பஸ்வண்டி 32 பேர், கார் - 2 பேர்):

மொத்த வாகனப் போக்குவரத்தில் 16 சதவீதம் இ. போ. ச. வாகனங்கள் என்பதையும் அவை பயணிகள் தொகையில் சதவீதத்தை கொண்டு செல்கின்றன என்பதையும் மேலேயுள்ள அட்டவணை தெளிவாகக் காட்டுகின்றது. தனியார் துறை வண்டிகளின் எண்ணிக்கை அதிகமானதாயினும் அவை பயணிகளில் 36 சதவீதத்தினரையே ஏற்றிச் செல்கின்றன. நகரில் ஓடும் வாகனங்களிற் பெருந்தொகையானவை கார்களே. (52% - 62%) ஆனால் மிகச் சிறு தொகையான 4 - 6 சதவீத பயணிகளையே ஏற்றிச் செல்கின்றன.

எனவே, தனியார் மோட்டர் கார்களைக் கட்டுப்படுத்தி மட்டுப்படுத்துவதே விவேகமானதாகும். அத்துடன் நகர்ப்புறங்களில், குறிப்பாக கொழும்பு நகரில் சிறிய பஸ் வண்டிகளும் மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். அதிக கார்களும் அதிக சிறு வாகனங்களும் ஓடுவதனுல் அதிக எரிபொருள் செலவாவதுடன், பாதைகளில் அதிக இடநெருக்கடியும் ஏற்படுகிறது. அத்துடன் அதிகநேரமும் சக்தியும் செலவாகிறது; போக்குவரத்துத் தடைகளும் சத்தமும் உண்டாகின்றன. பவனம் அழுக்கடைகிறது; அதிக விபத்துக்கள் நிகழ்கின்றன. பாதை மேற்றளத்திற்குத் தேய்வும் பழுதுகளும் ஏற்படுகின்றன. அத்துடன் வாகனங்களுக்கும் தேய்வும் பழுதுகளும் ஏற்படுகின்றன.

தற்பொழுது நாட்டின் வருமானத்தில் 28 சதவீதம் எண்ணெய் இறக்குமதிக்காகச் செலவிடப்படுகிறது. எனவே புகையிரத சேவை, தனியார் பஸ் சேவை, இ. போ. ச. ஆகியன ஒன்றிணைக்கப்பட்டு இயைபுபடுத்தப்பட்டு, ஒருமுகப்படுத்தப்பட்ட சேவை நடாத்தப்பட வேண்டுமென சிபாரிசு செய்யப்படுகிறது.

நகர்ப்புறப் போக்குவரத்துச் சேவையின் நோக்கமானது, தனியார் கார்களின் மட்டுப்படுத்தப்பட்ட உபயோகம், பவனம் அழுக்கடைவதையும் சத்தத்தை

| உள்ளேவரும் | வாகனங்கள் | % | பயணிகள் | % |
|---|---|---|---|---|
| இ. போ. ச. | 12,904 | 19 | 967,800 | 60 |
| தனி. பஸ்கள் | 17,980 | 26 | 575,360 | 36 |
| கார்கள் | 37,931 | 55 | 75,862 | 4 |
| மொத்தம் | 68,815 | 100 | 1,619,022 | 100 |

| வெளியெ செல்லும் | வாகனங்கள் | % | பயணிகள் | % |
|---|---|---|---|---|
| இ. போ. ச. | 10,883 | 16 | 816,225 | 59 |
| தனி. பஸ்கள் | 15,208 | 22 | 486,656 | 35 |
| கார்கள் | 42,078 | 62 | 84,156 | 6 |
| மொத்தம் | 68,169 | 100 | 1,387,037 | 100 |

1983 மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட எண்ணலின் அடிப்படையில் திரு. பி. சி. எச். ரணசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் குறைத்தல், வீட்டுக்கும் வேலைத்தலத்துக்குமிடையில் சிறந்த போக்குவரத்து வசதி, இடநெருக்கடியைத் தளர்த்தல், பாதை அமைத்தல், விரிவாக்கல் என்பவற்றுக்கான முதலீட்டைக் குறைத்தல் என்பனவாக அமைய வேண்டும்.

சக்தி சேமித்தலைப் பொறுத்தவரை, மின்னின் உபயோகம், புதைஎரிபொருள் வகைகளின் உபயோகத்தைக் குறைக்க முடியும். இதனால் சுற்றாடல் அழுக்கடைவதையும் தடுக்கமுடியும். வெப்பத்தைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் மின்னைக் கொண்டு எண்ணெய்யின் நேரடி உபயோகத்திற்கு எதிராக புதை எரிபொருளைச் சேமிக்கலாம். நீர் அல்லது அணு சக்தி பயன்படுத்தப்பட முடியுமானால் எண்ணெய்யோ நிலக்கரியோ செலவாகாது. நீர் மின்சாரம் உபயோகிக்கப்பட்டால் சத்தம் இருக்காது; காற்று அழுக்கடைவதும் குறையும்; புகைக்கரியும் படியாது. எவ்வாறாயினும், சக்தியைச் சேமிப்பதற்குப் பொருத்தமான போக்குவரத்துச் சாதனங்களும் சக்தியும் தெரிவு செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

தோட்டத்துறை புகையிரதத்தைப் பயண்படுத்த வேண்டும். டீசல் எண்ணெய் உபயோகிப்பதாயினும் மோட்டர் வாகனங்களைவிட 3–4 மடங்கு குறைவாக புகையிரதத்துக்கு எண்ணெய் தேவைப்படுகிறது. புகையிரதத்தை ஓட்டுவதற்கு மின்சக்தியைப் பயன்படுத்தினால் சக்தி சேமிப்பைப் பொறுத்தவரை அது கூடிய அனுகூலமானதாகும். மின்சக்தியைப் பயன்படுத்துவதனால் சக்தியை கூடுதலாகச் சேமிக்கலாம். ஏனெனில், இலங்கையில் அதிக மின் நீரைக்கொண்டே உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு டீசல் புகையிரத என்ஜினைவிடக் கூடிய திறமையோடு ஒரு மத்திய வெப்ப நிலையத்தில் புதை எரிபொருளைக் கொண்டு மின்வலுவை உற்பத்தி செய்யலாம்.

பிரயாணிகள் சேவைக்கும் மின்வலு மேலதிக பயனுடையதாகும். விசேடமாக நிலையங்களில் நிறுத்திவிட்டு மீண்டும் ஓடத் தொடங்குகையில் வேகமாக வண்டியைச் செலுத்தலாம். இதனால் பிரயாணிகள் விரைவாகப் பயணஞ் செய்ய முடிவதோடு வண்டிகளிலிருந்தும் சியந்திகளிடமிருந்தும் அதிக பயனையும் பெற முடியும். முதலீட்டு அடிப்படையில், மின் சாதனங்கள் நீண்ட ஆயுளைக் கொண்டவையுமாகும்.

புத்தளத்திலிருந்து களுகங்கை வரையுள்ள கால்வாய் முறைமை அண்மையில் மீண்டும் உபயோகத்துக்குக் கொண்டு வரப்பட்டமை வரவேற்கத்தக்கதாகும். ஏனெனில், பொருட்களைக் குறைந்த செலவில் கொண்டு செல்வதற்கு இக்கால்வாய்களைப் பயன்படுத்தலாம். கால்வாய்க்ளில் சக்தி சேமிப்பு, சுற்றாடல் ஒத்திசைவு போன்ற இயல்பான அனுகூலங்களுமுண்டு. அன்றியும் அவை நகரின் மழை நீரை வழியச் செய்வதற்கான வடிகால்களாகவும் பயன்படும். கால்வாய்களை தொகையான, எடை அதிகமான கெட்டுப்போகாத பொருட்களை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்த வேண்டும். கால்வாய்கள் இயன்றளவு நீளமாக்கப்படுதல் வேண்டும்.

**சுற்றாடல்**

காஸலின் எஞ்சின்களைக் கொண்ட. வாகனங்களிலிருந்து வெளியாகும் வாயுக்களில் 150 - 200 வகைப் பொருட்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது இவற்றில் ஒரு சிலவே தீமையானவை எனக் காணப்பட்டுள்ளன. காஸலின் எஞ்சின்களைக் கொண்ட வாகனங்களிலிருந்து வெளியாகும் காபன் மொனாக்ஸைட், ஹைட்ரோ காபன்கள் நைதரசன் ஒட்சைடுகள் ஈயம் கொண்ட கலவைகள் போன்ற பொருட்கள் சுற்றாடல் வல்லுநர்களதும் பாதுகாப்பாளர்களதும் கவனத்தை ஈர்த்துள்ளன. உள்ளெரி எஞ்சின்களிலிருந்து அதிக சக்தியைப் பெறுவதற்காகவும் தங்குதடையற்ற இயக்கத்தைப் பேணுவதற்காவும் காஸலினில் கிரமமாக ஈயம் சேர்க்கப்படுகிறது. எரிந்தபின் ஈயந்தில் 75 சதவீதம் வளிமண்டலத்தில் கலக்கிறது. எவ்வாறாயினும், வாகனங்கள் பல்கிப் பெருகியிருப்பதனால் பெருந்தொகையான ஈயம் காற்றுடன் கலக்கிறது. ஐசரோப் பகுப்பாய்வுகளிலிருந்து. காஸலின் எரிவதிலிருந்தே நகர்ப்புற வளமண்டலத்தில் கலக்கிறது என்பதற்கான மறுக்க முடியாத ஆதாரங்கள் கிடைத்துள்ளன. எனினும், இலங்கைக் குடிசனங்களுக்கு ஈயம் தீங்கிழைத்துள்ளது என்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை. ஆனால், நீண்ட காலத்துக்குப்பின் அல்லது ஈயம் வேறு கலப்புப் பொருட்களுடன் சேர்வதால் பாதகமான விளைவுகள் ஏற்படலாம்.

சத்தம், அண்மைய ஆண்டுகளில் அதிக கவனத்தை ஈர்த்துள்ள ஒரு சமூகப் பிரச்சினையாகும். நல்ல சுற்றாடலின் முக்கியமானதோர் அம்சம் சத்தம் இல்லாதிருப்பதாகும். பெரும்பாலான மக்களுக்கு சத்தம் எரிச்சலூட்டுகிறது; அமைதியையும் மகிழ்ச்சியையும் கெடுக்கிறது. சத்தமானது, சுகாதாரத்துக்குக் கேடுவிளைவிக்கும் ஒரு சமூகப் பிரச்சினையாகவும் உருவெடுக்கலாம். சத்தம் இருவருக்கிடையே நடைபெறும் உரையாடலுக்கு இடையூறாக அமையலாம். சில பாரதூரமான நிலைகளில் சத்தம் உள்ளத்தையும் பாதிக்கலாம். உடலின் உள்ளுறுப்புக்களையும் இரத்தக் குழாய்களையும் பாதிக்கலாம்.

சத்தமில்லாத எஞ்சின்களை உருவாக்க பல்வேறு முயற்சிகள் செய்யப்பட்டாலும் இன்றைய உலகில் சத்தத்தை உண்டாக்கும் முக்கிய காரணிகளில் மோட்டர் வாகனங்களும் ஒன்றாகும். சில வாகன எஞ்சின்கள் பெரும்பாலும் சத்தமில்லாதவை. எவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருயினும் வாகனப் போக்குவரத்து குறிப்பாக நகர்ப்புறங்களில் கடுமையான சத்தத்தை ஏற்படுத்துகிறது. ரயரின் ஒலி, கியர் மாற்றும் சத்தம் வாகனங்களின் கூடு ஏற்படுத்தும் ஒலி என்பன வாகனப் போக்குவரத்து ஒலியின் மட்டத்துக்கு உதவுகின்றன. இது தனித்தனி வாகனங்கள் எழுப்பும் ஒலியை மட்டும் பொறுத்ததல்ல. குறிப்பாக நகர்ப்புறங்களில் வாகனங்கள் செலுத்தப்படும் முறையும் ஒலிப் பெருக்கத்திற்குக் காரணமாக அமைகிறது.

நகர்ப்புறங்களில் அதிக நிலப்பரப்பு பரவுபடுத்தப் பட்டிருப்பதற்கு வாகனப் போக்குவரத்து காரணமாகும். இதனுல் நீர் உறிஞ்சும் தன்மையை நிலம் இழக்கிறது. வீடுகள் நெருக்கமாக அமைந்திருப்பதால் அதிக நிலப்பரப்பில் கூரைகள் அமைந்து, மரக்கிளைகள் பரவுதல் தடைப்படுகிறது. மழைநீர் வழிந்தோடும் பிரச்சினையும் அதிகரிக்கிறது.

**சுற்றுடலைப் பேணல்**

சுற்றுடலைப் பேணுவதற்கான கொள்கைக்குரிய சித்தாந்த அடிப்படை மனிதன் பங்கு கொள்ளும் இயற்கைச் சூழலைக் கருத்திற் கொண்டதாக அமைய வேண்டும். மேலும், அத்தகையதொரு கொள்கை, மனிதனின் முயற்சிகளை பிற உயிரியற் செயற்பாடுகளுடன் இசைவுடையதாக ஆக்குதற்கு முயல வேண்டும்.

சுற்றுடல் கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கு அவசியமான முற்றேவை சட்டவாக்கமாகும். இது தனிப்பட்டவர்களதும் குழுக்களதும் நடத்தைப் போக்கினை ஒழுங்குபடுத்தும். இந்த சட்டத்துக்குத் துணையாக விசேட பயிற்சிபெற்ற நிருவாக அமைப்பு இயங்குதல் வேண்டும். இந்நிருவாகம் கொள்கையை அமுல் நடாத்த வேண்டும். சட்டங்கள் புதுப்புதுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்ற வகையில் காலத்துக்குக் காலம் திருத்தப்பட வேண்டும்.

போக்குவரத்துக் கொள்கைக்கான சில வழிகாட்டுகைகள்

1. வாகனப் போக்குவரத்தை இயன்றளவு குறைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படல் வேண்டும். நேரடி வாகனப் போக்குவரத்துக்கு மிகப் பொருத்தமான வாகனங்கள் உபயோகிக்கப்படல் வேண்டும்.

2. குறிப்பாக மின் வலுவினுல் இயங்கும் வாகனங்களை உருவாக்குவதற்கு சிந்தனையும் முயற்சியும் செய்தல் வேண்டும். இலங்கையில் நீர் மின்உற்பத்தி செய்வதற்கு பெருமளவில் வளம் இருக்கிறது. இவ்வளம் போக்குவரத்திலும் கைத்தொழிலும் எரிபொருள் சிக்கனத்தை ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

3. குறிப்பாகப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு இயன்றவிடங்களில் அதிகமாக கால்வாய்களும் புகையிரதமும் பயன்படுத்தப்படல் வேண்டும்.

4. நகர்ப்புறங்களில் இயலுமானவிடத்து தனியார் வாகனங்கள் இயன்றளவு குறைக்கப்பட வேண்டும். பொது வாகனங்களுக்கு உற்சாகமளிக்கப்பட வேண்டும்.

5. கிராமப்புறங்களில், மக்களையும் பொருட்களையும் ஒரே நேரத்தில் ஏற்றிச் செல்லத்தக்க மினிபஸ் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

6. கிராமப்புறப் பொதுப் பாதைகளை விருத்தி செய்வதற்கு அதிக நிதி ஒதுக்கப்படல் வேண்டும். பாதைகளை அகலமாக்குவதற்குப்பதில் அத்திவாரத்தையும் மேற்றளத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

7. மோட்டர் வாகனங்களிலிருந்து ஐதரோகாபன், காபன் மொனெக்சைற்று, நைதரசன் ஒட்சைடு போன்ற வாயுக்கள் வெளியாவதைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். ஈயக்கலப்பற்ற காசலின் வழங்குவதற்கு அதிக மசகு எண்ணெய் தேவைப்படுமாதலால் செலவு ஓரளவு அதிகரிக்கும். ஆனுல், சுற்றுடலில் ஏற்படும் சேமிப்பு கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

8. புதிய பெருந் தெருக்களும் பாதைகளும் அமைப்பதனுல் வடிகால்கள், காலநிலை என்பவற்றிற்கும் அடுத்துள்ள நாட்டுப்புற இயற்கைச் சூழலுக்கும் ஏற்படும் தாக்கங்கள் நுணுக்கமாக ஆராயப்படல் வேண்டும்.

9. காட்டுப் பகுதிகளுக்குச் சென்றடையும் பாதைகளை விஸ்தரித்தல் கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

10. பெருந்தெருக்களுக்குப் பரந்தளவு நிலம் பயன்படுத்தப்படுவதனுல், ஆகக் கூடுதலான அளவு ஊர்களுக்குச் சேவையாற்றுவதற்கு ஏற்ற வகையில் ஏற்கனவே யுள்ள பாதைகளின் தரத்தை உயர்த்துவது பற்றி ஆலோசித்தல் பயனுடையதாகும். நீர் விநியோகம், சாக்கடை, தொலைபேசிக் கம்பிகள் முதலியனவும் இதே பாதைகளை அடுத்து அமைக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் சமூக பொருளாதார பிரச்சினைகள்

ஆரிய அபேசிங்க
(திட்டமிடல் பகுதி - மகாவலி அதிகாரசபை)

நீரியல் நாகரிகம் என்று இப்பொழுது அழைக்கப்படும் சூழலில்தான் இலங்கையின் வரலாறு வளர்ச்சிக் கண்டது; குளம், கிராமம், பௌத்த கோவில் ஆகியன தான் சிங்கள நாகரீகத்தின் சின்னங்களாக விளங்கின. இந்நாகரிகத்தின் பொருளியல் அடித்தளம் நெல் விளைச்சலாகும். இந்த முக்கிய பொருளியல் நடவடிக்கையினைச் சுற்றியே வாழ்க்கை முறையும், கலாசார அரசியல் தொடர்புகளும் வளரலாயின. கிராமிய நீர்ப்பாசனத் திட்டங்களுடன், மகாவலி, வளவை, கல்ஓயா, இன்கினிமிட்டிய, கிரிந்திஓயா, முதுகன்டிய போன்ற நீரியல் திட்டங்களிலும் அபிவிருத்தியின் பொருளியல் அடித்தளம் நெல் உற்பத்தியாகும். ஆரம்பகால பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களான கண்டி மாவட்டத்தின் மினிப்பே, மாத்தளை மாவட்ட எலகரா, அநுராதபுர மாவட்ட பராக்கிரம சமுத்திரம், வவுனியா மாவட்ட பதவியா, திருகோணமலை மாவட்டக் கந்தளாய், அநுராதபுர மாவட்ட நுவரவெவ, திஸ்ஸவெவ போன்றவை ஆதிகால சிங்கள மன்னர்களின் முயற்சிகளாகும். நீரியல் துறையின் இன்றைய விஞ்ஞானிகளும் வியக்கும் வண்ணம் அம்மன்னர்கள் உள்நாட்டு மக்களின் இயற்கையான நீரியல் தொழில் நுட்பத்தையும், நீர்ப்பாசன செயல் திறனையும் இந்தப் பிரமாண்டமான நீர்த்தேக்கங்களை அதிநுட்பமாக நிர்மாணிக்கவும் கட்டியெழுப்பவும் இம்மன்னர்கள் பாவித்துள்ளார்கள்.

இந்த நீரியல் பின்னலமைப்பு பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் உள்ளடக்கியதாகும்.

200 ஏக்கருக்கு மேற்பட்ட காணிப்பரப்பை தன் ஆளுகைக்குள் கொண்டுள்ள திட்டத்தைப் பாரிய நீர்ப்பாசனத் திட்டமெனவும், 200 ஏக்கருக்குக் குறைந்த காணிப்பரப்பை தன் ஆணைக்குள் கொண்டுள்ள திட்டத்தைச் சிறிய நீர்ப்பாசனத் திட்டமெனவும் கொள்ளலாம்.

பெரும்பான்மையான பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நாட்டின் வறண்ட வலயத்திலேயே உள்ளன. எனவே புராதன அசலான சிங்கள அரசியல், நிர்வாக, சமூக, பொருளியல் செயல்பாடுகள் வறண்ட வலய நதிகளை மையமாகக் கொண்டே இயங்கி வந்தன. அநுராதபுரம், பொலனறுவை, கம்பளை, கண்டி, இராச்சியங்களின் தலைநகர்கள் மகாவலியை அண்டியே அமைந்தன. சோழ மன்னரின் ஆக்கிரமிப்புக்கள், மலேரியா நோயின் பரவல், ஆளும் வர்க்கத்தினரிடையே நிலவிய ஒன்றுமையின்மை, நீர்ப்பாசனத் திட்டங்களின் அழிவுகள் போன்ற பல்வேறு காரணங்களால் 13ம் நூற்றுண்டளவில் வறண்ட வலய நாகரீகம் சிதையத் தொடங்கிற்று. பல நூற்றுண்டு கால புறக்கணிப்புக்குப்பின் புராதனமான கைவிடப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களின் புனருத்தாரணமும், அதனுடன் தொடர்புடைய விவசாய நடவடிக்கைகளின் மறுமலர்ச்சியும் சில ஆங்கிலேய ஆளுனர்களின் கவனத்தைப் பெற்றன. குறிப்பாக, 1850 அளவில் ஆளுனர் ஹென்ரி வார்ட் இதில் கரிசனை கூட்டினூர். அந்த நேர நீர்ப்பாசன அபிவிருத்தி இரு குறிக்கோள்களைக் கொண்டதாகவிருந்தது.

(1) நெல் விளைச்சலைப் பெருக்குதல்

(2) கிராமிய நீர்ப்பாசன வேலைகளை புனரமைப்பதன் மூலம் கிராமப் புறப்பகுதி வேலையின்மையைக் குறைத்தல்.

1930ன் தசாப்தத்தில் தான் நீர்ப்பாசன அடிப்படைக் குடியேற்றத் திட்டங்கள் பேரளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இவையாவும், போதிய சமூக பொது முதலீட்டு வசதிகளுடன் கூடிய் காணி அபிவிருத்தி மனித குடியிருப்புத் திட்டங்களாக இருந்தன.

1930 ன் தொடராண்டுகளில் ஏறபட்ட அரசியல் வளர்ச்சி நீர்ப்பாசனத் திட்டங்கள் வலுவுடன் ஸ்தாபிதமடைவதற்கு பெரும் பங்காற்றின. டொனமோர் அரசியல் திட்டத்தின் கீழ் 1931 ம் ஆண்டில் இலங்கைக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுய ஆட்சி வழங்கப்பட்டது. இந்த அரசியல் யாப்பின்படி வயது வந்த இருபாலாருக்கும் வாக்குரிமையும், புவியியல் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தொகுதி வாரியான இணைப்பும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனுல் சட்ட சபைகளின் ஆசனங்களைப் பெற விரும்புவோர் கிராமிய வாக்காளரை தம்பக்கம் ஈர்க்க வேண்டியதாயிற்று. பரவலாக மக்கள் மத்தியில், மூன்று விடயங்கள் பிரபல்யமாயின; நீர்ப்பாசன வள்ர்ச்சி, அரச காணிகளைப் பகிர்ந்தளித்தல், மக்கள் குடியிருப்புக்கள். டொனமோர் அரசியல் அமைப்பின்படி, தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்த நிறைவேற்றுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. விவசாயம், காணி இரண்டுக்குமான நிறைவேற்றுக் குழுவின் முதல் தலைவராக காலஞ்சென்ற டி. எஸ். சேனுநாயக்க பதவியேற்ருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் புராதனப் பெருமையை புனரமைப்பதில் - குறிப்பாக வறண்ட வலய புனரமைப்பில் - இவர் முற்று முழுதாக ஈடுபாடு கொண்டார். புதிய காணிப்பகிர்வு, குடியமர்த்தல் கொள்கையின் அடிப்படை, ''தம்மைத் தாமே பராமரிக்கும், சுய கௌரவமுள்ள, விவசாய உரித்துடைய வளமிக்க மக்கள் கூட்டத்தை உருவாக்குதலாகும்.'' இந்தத் தத்துவத்திலும் கொள்கையிலும் புராதன நீரியல் முறைமைகளின் புனரமைப்பும், விஸ்தரிப்பும் நடுநாயகமான கவனத்தைக் கவர்ந்ததெனலாம்.

அரை நூற்றுண்டு மேலாகியும், கூட 1930 க்ளின் இந்தக் காணி நீர்ப்பாசனக் கொள்கை இன்றுவரை நீடித்து நிலேத்து, அபிவிருத்தி கண்டு வருகின்றது. ஆரம்ப கால நீர்ப்பாசன காணி அபிவிருத்திக் கொள்கைகளே, பொலன்னறுவை மாவட்டத்தின் மின்னேரியாவிலும், அநுராதபுர மாவட்டத்தின் நச்சடுவ, கலாவெவவிலும் உள்ள மனித குடியிருப்புத் திட்டங்களே ஆராய்வதன் மூலம் அறிய முடியும். நீர்த்தேக்கங்களின் பள்ளத் தாக்குகளின் பெரும்பான்மையான பகுதிகளில் சிறந்த மண் காணப்பட்டது. இவற்றைப் பயன்படுத்தும் நோக்கமாகவே இந்தத் திட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டன. அன்றிலிருந்து 1940 க்களின் ஆரம்பம் வரையில் அரசின் மூலதனச் செலவு ஒதுக்கீடுக்ளின் ஐந்திலொரு பங்கு பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்திக்குச் செலவு செய்யப்பட்டன. 1948 - 1970 இடைக் காலத்தில் பெரும்பாலும் நெல் உற்பத்திக்காகவும் மேலதிகமாக கரும்பு பருத்திச் செய்கைக்காகவும் கல்லோயோ ஆற்றுப் பள்ளாத்தாக்கு திட்டமும் (122,000 ஏக்கர்), 31,000 ஏக்கர்களான உடவளவை ஆற்றுப்பள்ளத் தாக்குத் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதில் பருத்திச் செய்கை முழுத் தோல்வி கண்டது. 1960 ம் ஆண்டுகளில், விவசாயத்துறைக்கென ஒதுக்கிய மூலதன ஒதுக்கீடுகளில் 36% நீர்ப்பாசன, காணி, அபிவிருத்திகளுக்குச் செலவிடப்பட்டது. 1960 ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் பெரும்பான்மையான புராதன நீர்ப்பாசன அமைப்புக்கள் புனருத்தாரணஞ் செய்து முடிக்கப்பட்டதுடன், மூன்று புதிய திட்டங்கள் கல்லோயா, இராஜாங்கனே, உடவளவை கிட்டத்தட்ட பூர்த்தியடைந்து விட்டன.

1970 ம் ஆண்டுகளிலும், 1980 ம் ஆண்டுகளிலும் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கொத்மலே 1985 இலும், விக்டோரியா 1984 இலும், மாதுருஓயா 1983 இலும், உல்ஹிட்டிய 1982 இலும் ஆக முக்கிய வேலேகள் முடிவுற்றன. ரன்தெனிகல திட்ட முக்கிய வேலேகள் 1986 ம் ஆண்டு பூர்த்தியாகுமென எதிர்ப்பார்க்கப்பட்டது.

இதற்கிடையில் வலயம் 'எச்', 'சீ' ஆகியவற்றின் பொது முதலீட்டு வசதிகள், அடித்தளங்கள், குடியேற்ற வேலேகள் ஆகியன பூர்த்தியாகின்றன. அத்துடன் 'ஜீ', 'பீ' ஆகிய வலயங்களின் வேலேகள் நடைபெறுகின்றன. ஐ. நா. சபை அபிவிருத்தித் திட்டம், உலக. உணவு - விவசாயத் ஸ்தாபனமாகியவற்றின் கூட்டு ஆரம்ப ஆய்வின்படி மகாவலி நதி அபிவிருத்தித் திட்டம், ஏற்கனவேயுள்ள 240,000 ஏக்கர் காணியையும், 660,000 புதிய காணியுமாக மொத்தம் 900,000 ஏக்கர் காணியை உற்பத்திக்குள் கொண்டுவரும். ஆரம்பத்தில், இந்த நிலப்பரப்புக்கு 30 வருட காலத்தில் நீர்ப்பாசன அபிவிருத்தியை உருவாக்கவும், அதே காலப்பரப்பில் 660 மெ. வாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் எதிர்பார்க்கப்பட்டது. 1970 - 1977 காலத்தில் மகாவலியைத் திசை திருப்புவதிலேயே முதலீடும், கவனமும் செலுத்துவது முக்கிய குறிக்கோளாக இருந்தது. முதலில் ஏற்கனவே நீர்ப்பாசனம் பெறும் 124,000 ஏக்கருக்கு இரு போகச் செய்கைக்கும், 6000 ஏக்கர் புதிய காணிக்கு நீர்ப்பாசனமும் அளிப்பதற்கு திட்டமிடப்பட்டது. 1977 ம் ஆண்டில் விவசாய காணி அமைச்சிலிருந்து காணி, காணி அபிவிருத்தியைப் பிரித்தெடுத்து இரு புதிய அமைச்சுகளே - அதாவது காணி, காணி அபிவிருத்தி அமைச்சும், மகாவலி அபிவிருத்தி அமைச்சுமென - அமைப்பதன் மூலம் காணி, நீர்ப்பாசன அபிவிருத்தி முதலீட்டுக்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இந்த நடைமுறை காணி அபிவிருத்தி, குடியமர்வுக் கொள்கைகளிலும் மகாவலித் திட்டத்திலும் ஓர் திருப்பு முனேயாக அமைந்ததெனலாம்.

1950 - களின் பிற்பகுதியில் நீர்ப்பாசன, காணி அபிவிருத்திக் கொள்கைகளில் பெரும் ஈடுபாடு காட்டப்பட்டது. விவசாய உணவு அமைச்சின் 1958 ம் ஆண்டு விவசாயத்திட்டம், தேசிய திட்டமிடல் திணேக்களத்தின் 1962 ம் ஆண்டுக்குறுங்கால அமுலாக்கல் திட்டம் ஆகிய அரச ஆவணங்கள் கூட நீர்ப்பாசன, குடியேற்றத்திட்டங்களே கடுமையாக விமர்சனஞ் செய்திருந்தன. உள்நாட்டு உணவு உற்பத்தியை பெருக்க அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படாத ஒரு பின்னணியில் பெருந்தொகையான இறக்குமதிகள் மத்தியில் மூன்று முக்கிய ஏற்றுமதிப் பண்டங்கள் விலேயும், அதே நேரத்தில் நாணய மாற்றும் தளம்பிச்சென்றது. கடினமான நாணயமாற்று கஷ்டங்களே உருவாக்கின. இதனுல் அரசினுல் வழங்கப்படும், சேம நலச் சேவைகளேப் பரமரிக்கும் செலவுப் பருதாங்கொணுததாகவிருந்தது. எனவே, இயலுமான எல்லாப் பகுதிகளிலும் உற்பத்தியை அதிகரிக்கும் அதே வேளேயில் புதிய தொழில் வாய்ப்புகளே உருவாக்குவதில் முனேப்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. அதிமுக்கியமாக காணி அபிவிருத்தி நீர்ப்பாசனத் திட்டங்களில் கூடிய கவ

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னஞ் செலுத்தப்பட்டது. நீண்ட காலமாக பொதுச் செலவினத்தில் ஒரு பெரிய பங்கு இத்துறையில் பாவிக்கப்பட்டு வந்தது. ஆனால், பிரதிபலன் மிகக்குறைந்ததாகவே இருந்தது.

இதே நேரத்தில் இத்திட்டங்களை செலவு – நன்மை அடிப்படையிலும், பொது முதலீட்டு ஒப்பீட்டு ஆய்வு போன்ற புதிய ஆய்வு முறைகளிலும் மதிப்பிடத் தொடங்கினர். உலக உணவு விவசாய ஸ்தாபனம் உலகவங்கி ஆகியவற்றின் 1964 ம் ஆண்டு கூட்டுறவுத் திட்டத் தூதுக்குழுவைத் தொடர்ந்து பீ. எச். பார்மர் தலைமையிலான கல்லோயா திட்டமதிப்பீட்டுக் குழு வந்தது. அவர்களின் முடிவின்படி கல்லோயத் திட்டத்தின் குடியமர்த்தல் அம்சத்தில் செலவு – நன்மை விகிதம் ஆகக் குறைவானது. உலக உணவு விவசாய ஸ்தாபனம், உலக வங்கியாகியவற்றின் 1964 ம் ஆண்டு இணைந்த தூதுக் குழுவினைத் தொடர்ந்து வந்த பெப்பர்சாக் தூதுக்குழு, எலகரா விசேட திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து 24 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களும், குடியமர்வுகளும் ஏற்படுத்துவதைச் சிபாரிசு செய்தது. 1979 ம் ஆண்டளவில் விசேட திட்டங்கள் ஆரம்ப எழுச்சியைத் தொடர்ந்து பராமரிக்க முடியாத நிலையில் வீழ்ச்சியடைந்து வந்தன. முக்கியமாக விசேட திட்டங்களின் இந்த வேகக் குறைவுக்கும், பின்பு ஏற்பட்ட சரிவுக்கும் காரணம் உற்பத்தி நடைமுறையில் நீர்ப்பாசன நீர் ஒரு ஜீவாதாரமான உள்ளீடு என்பதனை அதிகாரிகள் உணரத் தவறியமையாகும்.

பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் செயற்பாடு பற்றி அரசாங்கமும், நாடும் பின்வரும் காரணங்கள் நிமித்தம் கூடிய அக்கறை செலுத்த வேண்டியுள்ளது.

(அ) துரித மகாவலித் திட்டம்: இந்தத் திட்டம் அதிக செலவில் உலர் வலயத்தில் பல விவசாயக் குடும்பங்களுக்கு பரவலான நிலப்பரப்பில் மேலதிக அல்லது புதிய நீர்ப்பாசன வசதிகளை வழங்கியது.

(ஆ) நீர்ப்பாசன வசதிகள், உரம், விவசாய இரசாயனம், சேர்த்து வைக்கும் வசதியும், விலை ஸ்திரம், சந்தைப்படுத்தும் வசதிகள் போன்றவற்றின் உதவியுடன் நெல் உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு அடைதல்.

(இ) முதலில் இறக்குமதிக்கு மாற்றுப் பொருளாகவும், பின்பு ஏற்றுமதி நோக்கிலும் வேறு உப உணவுப் பொருட்களான மிளகாய், வெங்காயம், தானிய வகைகள் எண்ணெய் விதைவகைகளை பயிரிடுதல்.

(ஈ) பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் பன்முக பயிர்ச் செய்கை; நீரைச் சிக்கனமாகப் பாவித்தல், பாவிக்கும் நீருக்கு ஆகக்கூடிய பயனை பெறுதல்.

(உ) பொருத்தமான கால்நடை அபிவிருத்தித் திட்டங்களின் அபிவிருத்தியில் ஆர்வத்தை தூண்டுதல்.

விவசாயத்துறையில் இந்தக் குறிக்கோள்களை நடைமுறைப் படுத்திக் கொண்டு செல்லும் பொழுது பாரிய நீர்ப்பாசனத் திட்டப் பகுதிகளில் கடுமையான சமூக - பொருளாதார பிரச்சனை எழுந்துள்ளன.

காணி, நீர்ப்பாசனத் துறைகளில் கொள்கை அமுலாக்கம்

1950 - 1982 க்கிடையிலான 30 வருடத்திற்கு சற்றுக் கூடிய காலப்பகுதியில், (மகாவலித் திட்டம் தவிர்ந்த) சிறிய திட்டங்கள் 3 பாரிய திட்டங்கள், ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய நீர்ப்பாசனத்தின் மீதான முதலீடு சுமார் 2000 கோடி ரூபாவாகும். இதில் பின்வருவனவும் அடங்கும்.

சிறிய நீர்ப்பாசன வேலைகள் 60.95 கோடி

பாரிய நீர்ப்பாசன வேலைகள் 244.19 கோடி

ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி 919.06 கோடி

1950 - 1982 க்கான முழுச் செலவினத்தில் 70.1% 1980 - 1982 க் காலத்தில் செலவு செய்யப்பட்டது. இது நீர்ப்பாசனத்தில் அரசாங்கம் கூடிய முக்கியத்துவத்தைக் காட்டுவதனை தெளிவுபடுத்துகிறது. புள்ளிவிபர அடிப்படையில் பின் வரும் பொதுக்குறிப்புகளை கூறலாம்.

(1) நீர்ப்பாசனத்தால் பயன் பெற்றமொத்த நிலப்பரப்பு 941,612 ஏக்கராகும்.

(2) பயன் பெற்ற ஏற்கனவே உள்ள காணிகள் 484,501 ஏக்கர்கள்

(3) பயன்பெற்ற புதிய நிலப் பரப்புகள் 457,111 ஏக்கர்.

(4) நீர்ப்பாசன வசதி அளிக்கச் செலவான முழுத் தொகை ரூபா 1224 கோடி.

பயிர்ச் செய்கைக்குள் அதிகளவு ஏக்கர் காணியை கொண்டு வருதலுக்கும், ஈர வலயப் பகுதியில் அதிக தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் விவசாயத்தில் அதிக கவனஞ் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. நவீன விதை வகைப்பாவனை போன்ற புதிய விவசாய உத்திகளுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக பாரிய நீர்ப்பாசனத்திட்டங்கள் அமைந்தன. பல காரணங்களுக்காக - மகாவலி உட்பட பாரிய நீர்ப்பாசனத்திட்டங்களை புனருத்தாரணம் செய்வதற்கு அதிக முக்கியத்துவமளிக்கப்பட்டது.

(அடுத்த இதழில் முடியும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Poopalasingham Book Depot
Phone 23631
Jaffna

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல்·நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இண்டர் நெஷனல் கிரபிக் மெகசின் லிமிடட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org